THAYAGAM

75¢

21-27 . 10 . 95

# தாயகம்

உண்மை:7 தேடல்:6

# மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க சந்திரிகா நிபந்தனை

★ தாராள கனடிய விசா செய்தி வெறும் வதந்தியே!

★ கொலன்னாவை தாக்குதலை திட்டமிட்டவர் கைது

★ தீர்வு காண கூட்டணி வலியுறுத்து

✪ சிங்களவர்களைக் கொன்றதற்கு அமெரிக்கா கண்டனம்

✪ 29 பேருக்கு புலிகள் மரண தண்டனை

✪ 114 சிங்களவர்கள் வெட்டிக்கொலை

இலங்கைக்கான துரித பணமாற்றுச் சேவை
(குறைந்த கட்டணம், அதிக மாற்று விகிதம்)

CD விற்பனையாளர்

SENDURAN & CO

584A, PARLIAMENT ST, TORONTO TEL:(416) 962 7397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RUS-C ருசி

# வறுத்த அரிசி மா

இடியப்பம், புட்டு,
ஏனைய
உணவுத் தேவைக்கு
உகந்தது.

| | |
|---|---|
| நிரு பிராண்ட்® Niru Brand® | தயாரிப்புகளின் தரத்திற்கு காரணம் முதல் தரமான மூலப்பொருட்கள் |
| நிரு பிராண்ட்® Niru Brand® | தயாரிப்புகள் கனடாவின் சுகாதார விதிகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படுபவை |
| நிரு பிராண்ட்® Niru Brand® | தயாரிப்புகள் உணவுக்கு இணையற்ற சுவையளிப்பவை |
| நிரு பிராண்ட்® Niru Brand® | தயாரிப்புகள் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தவை |

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.

போலிகளை வாங்கி
ஏமாறுதீர்கள்

தரத்தின் சின்னம்

Niru Niru

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும்
விற்பனையாகின்றன.




# கொலன்னுவை தாக்குதலை திட்டமிட்டவர் கைது

கொலன்னுவையில் எண்ணெய் தாங்கிகள் மீது நடத்திய தாக்குதலை திட்டமிட்டதாக கூறப்படும் ரமேஷ் என்ற கரும்புலி வவுனியாவில் வைத்து செய்யப்பட்டிருக்கிறார். கடற்படை, விமானப்படைத் தளபதிகள், அனுரத்த ரத்வத்தை போன்றோரை கொல்லவதற்காக உளவு தகவல்களைச் சேகரித்ததாகவும் இவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். ரமேஷ் உடன் துரைராஜா என்றவரும் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட போது இவருடன் பல ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக தெமட்டகொடயில் இன்னொருவரும் ரமேஷ் வழங்கிய தகவல் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எண்ணெய் தாங்கி தாக்குதல் திட்டம் தெமட்டகொடையில் ஒரு கடையில் வைத்து திட்டமிடப்பட்டதாகவும் இந்தக் கடை 94ல் 90 ஆயிரம் ருபாய்க்கு வாங்கப்பட்டதாகவும் இதற்கு பொறுப்பாக துரைராஜா நியமிக்கப்பட்டதாகவும் அங்கு 94 டிசம்பரில் வந்த ரமேஷ் தாக்குதல் நடைபெறும்வரை அங்கு தங்கியிருந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக டெயிலி நியூஸ் செய்தி கூறுகிறது. கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இந்த திட்டம் பற்றி பொட்டு அம்மான், சாள்ஸ், சுரேஷ் ஆகியோர் ஆராய்ந்து பொறுப்பாக ரமேஷை நியமித்ததாகவும் தெமட்டகொடை கடை மூலமாக ரமேஷிற்கு புலிகள் பணம் வழங்கியதாகவும் அவர் அனுருத்த ரத்வத்தையின் வாகனத் தொடர் செல்லும் இடங்கள் பற்றி தகவல்களை அவர் சேகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ரமேஷ் நன்றாக சிங்களம் பேசக் கூடியவர் என்றும் அவரை கொழும்பில் வைத்து கரும்புலிகள் மாஸ்டர், முத்து ஆகியோர் சந்தித்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

# மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க சந்திரிகா மூன்று நிபந்தனைகள்

இராணுவம் யாழ்ப்பாணத்தில் பலமான தாக்குதல்களை முன்னெடுக்கும் அதே வேளையில் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று நியூ யோர்க்கில் வைத்து சந்திரிகா தெரிவித்துள்ளார். புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு சம்மதித்து, தங்கள் ஆயுதங்களில் ஒரு பகுதியைக் கையளித்து, பேச்சுவார்த்தைக்கான ஒரு கால அளவை நிர்ணயித்தால் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் நாங்கள் முட்டாள்தனமாக ஆயுதங்களை கையளிக்கும்படி கோராமல் விட்டோம் என்று கூறிய அவர் எட்டு மாதப் பேச்சுவார்த்தைகளில் ஒரு தடவை கூட அரசியல் தீர்வு பற்றி பேச சம்மதிக்கவில்லை என்றும் தனக்கு தெரிந்தவரை உலகில் எந்த அரசும் தீவிரவாதிகளுக்கு இவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

தான் நியூ யோர்க்கிற்கு புறப்பட முன்பாக சுமார் பத்தாயிரம் தாய்மார் யுத்தத்தை நிறுத்தும்படி புலிகளுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதி ஒன்றைப் பார்வையிட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

# திறந்த கனடிய விசா° வெறும் வதந்தியே!

கனடாவிற்கு வருவதற்கு திறந்த விசா வழங்கப்படுவதாக வெளிவந்த வதந்திகளில் உண்மை இல்லை என கொழும்பில் உள்ள கனடியத் தூதுவரகம் மறுத்துள்ளது. தூதுவரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு ஒன்றில் அவ்வாறு பரவி வரும் செய்தியில் உண்மை இல்லை என்றும் ஆங்கிலம், அல்லது பிரஞ்சு மொழியில் பாண்டித்தியம் உள்ளவர்கள் மட்டுமே குடியேற அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கனடாவில் தேவைப்படும் தொழில் ஒன்றில் ஒரு வருட வேலை அனுபவம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் விண்ணப்பப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படுமே அன்றி நேரில் வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்மராட்சியை பாதுகாப்பு பிரதேசமாக அறிவிக்க கோரிக்கை

தற்போதைய யுத்தத்தில் தென்மராட்சிப் பகுதியை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தும்படி புலிகள் கேட்டுள்ளனர். அகதிகள் தற்போதைய யுத்தப் பிரதேசங்களிலிருந்து மக்கள் கிளிநொச்சிப் பகுதிக்கு கிளாலிக் கடலைக் கடந்து செல்கின்றனர். இதே சமயம் செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா அகதிகள் தூதுவரகம் போன்றவற்றிடம் தென்மராட்சிப் பகுதியை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தும்படி புலிகள் கேட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்களைக் கொன்றதற்கு அமெரிக்கா கண்டனம்

புலிகள் கடந்த வாரங்களில் எல்லைகளில் குடியிருக்கும் சிங்கள மக்களைக் கொன்றதை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் ஆகஸ்ட் 3இல் அரசாங்கம் அறிவித்த சமாதானத் திட்டம் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக அமைய வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது. அரசும் புலிகளும் மக்களைப் பாதுகாப்பதற்கான நடிவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் அகதிகளான மக்களுக்கு உதவும் தொண்டர் அமைப்புகளுக்கு உதவி வழங்க வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது. அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் நிக்கலஸ் பேர்ண்ஸ் கருத்துக் கூறுகையில் 'இந்த தீர்வுத் திட்டம் இந்த துயரமான பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு காணுவதற்கான ஆக்கபூர்வமான பேச்சுக்கு சரியான அடிப்படையாக நாங்கள் நம்புகிறோம்' என்று தெரிவித்தார்.

சிங்கள மக்களைக் கொன்ற விடயத்தை மிகவும் கடுமையாகக் கண்டிக்கிறோம், புலிகள் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அமெரிக்கா கோரியுள்ளது.

# 114 சிங்களவர்கள் வெட்டிக்கொலை

கடந்த ஒரு வாரத்திற்குள் மட்டும் சுமார் 114 சிங்கள குடியேற்றக்காரர்களை புலிகள் கொன்றுள்ளனர். தற்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தாக்குதலில் இருந்து கவனத்தை திருப்புவதற்காக இந்த தாக்குதல் நடைபெறுவதாக ராஜதந்திரிகள் தெரிவிக்கிறார்கள்.

வெலி ஓயா பகுதியில் உள்ள ஹெரத் ஹல்மில்லவ, தம்மன்னவ என்ற கிராமங்களில் தூக்கத்தில் இருந்த கிராமத்தவர்கள் 24 புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஆறு நாள் குழந்தையும் தாயவும் அடங்குவர். துப்பாக்கிகளாலும் கிரெனெட்டுக்களாலும் கத்திகளாலும் இவர்கள் கொல்லப்பட்டனர்.

வெடிச்சத்தம் கேட்டு குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டதும் தான் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு காட்டுக்குள் ஓடி விட்டதாக கதிரகதம்ப என்ற கிராமவாசி தெரிவித்திருக்கிறார். இரு மணி நேரத்தின் பின் வந்து பார்த்த போது தனது குடிசை எரிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அவரது மகள், மருமகன், பேரன் ஆகியோர் அருகில் உள்ள குடிசையில் கொல்லப்பட்டிருந்தனர்.

இதற்கு முன்பு அனுராதபுரம் பகுதியில் 36 சிங்களவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தனர்.

மொனராகலையில் கொட்டியாகல பகுதியில் 19 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் பலரின் தலைகள் வெட்டப்பட்டிருந்தன. 10, 12 வயதான இரு பையன்கள் கைகள் கட்டப்பட்டு கத்தியால் குத்திக் கொல்லப்பட்டிருந்தனர். கொன்ற பின்னர் வீடுகளும் எரிக்கப்பட்டு நான்கு கடைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. இதில் நடந்த தாக்குதல் ஒன்றிற்கு தடித்த பெண் ஒருத்தி தலைமை தாங்கியதாக தப்பிய பெண் ஒருவர் கூறினார்.

# பிரச்சனைக்கு தீர்வு காண கூட்டணி கோரிக்கை

கடந்த மாத யுத்தத்தில் மட்டும் இரண்டாயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாகவும் நாட்டுப் பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்றும் கூட்டணி அரசைக் கோரியுள்ளது. கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் 'வடக்கில் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் பலவந்தமாக இடம்பெயர வைக்கப்பட்டுள்ளனர், அவர்கள் மிகவும் மோசமான நிலையில் வாழ்கின்றார்கள், கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்களும் ஷெல் தாக்குதல்களும் பல அப்பாவி மக்களைக் கொன்று காயப்படுத்தியுள்ளது' என்று கூட்டணி கூறியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் சிறிமாவைச் சந்தித்து கொழும்பில் படையினர் பல தமிழர்களை கைது செய்து துன்புறுத்துவதாக குற்றம் சாட்டினர். 'வடக்கில் உள்ள மக்களின் அவலம் பற்றியும் கொழும்பில் கைது செய்வோர் பற்றியும் சிறிமாவுடன் பேசினோம்' என்று சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தாக்குதலில் ஏற்பட்ட பேரழிவு பற்றி பயம் கொண்டுள்ளோம், தற்போது இரு தரப்பிலும் இரண்டாயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டு காயமடைந்துள்ளனர் என்று சிவசிதம்பரம் மேலும் தெரிவித்தார். கொழும்பில் தினசரி படையினரும் ஊர்காவல் படையினரும் தமிழர்களை கைது செய்து வருவதாகவும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களும் மீண்டும் கைது செய்யப்படுவதாகவும் பலர் மிகவும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 29 பேருக்கு புலிகள் மரண தண்டனை

புலிகள் இராணுவத்திற்கு தகவல் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் மேல் 29 தமிழர்களுக்கு மரண தண்டனை வழங்கியிருக்கிறார்கள். இதில் நால்வர் ஓமந்தையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் பாடசாலை அதிபர் ஒருவர், கிராமசேவகர் ஒருவர் ஆகியோரும் அடங்குவர். இவர்கள் கொல்லப்பட முன்னர் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டன என்றும் மீதிப்பேர் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# செயலிழந்த புலிகளின் வானொலி

புலிகளின் வானொலி தற்போது செயலிழந்துள்ளதாக கூறப்படுகிறது. கடந்த வாரம் இந்த வானொலி செயற்படவில்லை என்று இராணுவ தரப்பில் கூறப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் அங்கிருந்து வரும் மக்கள் யாழ்ப்பாணத்தில் தாம் வானொலியை கேட்பதாகவும் அதன் சக்தி குறைந்த நிலையில் தெளிவில்லாமலே கேட்பதாகவும் கூறினர். இராணுவம் சிலவேளைகளில் அலைகளைக் குழப்பக் கூடும் என்றும் வந்தவர் ஒருவர் தெரிவித்தார்.

சமீபத்திய தாக்குதல்களில் உபகரணங்கள் சிதைந்திருக்கலாம் என்று இராணுவம் கூறிய போதிலும் தற்போதைய யுத்தத்தினால் உபகரணங்களை கிளிநொச்சிப் பகுதிக்கு மாற்றுவதால் இவ்வாறு செயலிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## குண்டுவீச்சில் 10 பேர் பலி

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த விமானக் குண்டுவீச்சில் பத்துப் பேர் கொல்லப்பட்டு 23 பேர் காயமடைந்துள்ளனர். இந்த செய்தியை கொழும்பு வந்த அரசாங்க அதிபர் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கான உணவு வினியோகத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்காக அவர் கொழும்பு வந்துள்ளார்.

## கடும் சண்டை தொடருகிறது

இராணுவத் தாக்குதல்களை புலிகள் கடுமையாக எதிர்கொண்டு வருவதாக அங்கிருந்து வந்த ஒருவர் ரொய்ட்டர் நிருபரிடம் தெரிவித்துள்ளார். இராணுவம் இரவும் பகலும் ஷெல் தாக்குதல்களில் ஈடுபடுவதாகவும் புலிகளால் தாக்குதல்களால் இராணுவம் நகர முடியாதுள்ளதாகவும் வந்தவர் கூறினார். இராணுவமும் புலிகளும் பலத்த இழப்பைச் சந்தித்தாலும் இராணுவம் ஆயுத [illegible] ரீதியில் பலம் வாய்ந்ததாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான மோட்டார்களையும் ஷெல்களையும் நீர்வேலிப் பகுதி மீது இராணுவம் வீசியதாக புலிகள் தெரிவித்திருந்தனர். அத்துடன் மூன்று இராணுவ கவச வாகனங்களை தகர்த்ததாக கூறிய போதும் அவை வெறும் சேதமடைந்ததாக இராணுவம் மறுத்திருக்கிறது.

தற்போது யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் கிளாலியைக் கடந்து கிளிநொச்சிப் பகுதிக்கு வந்துள்ளதாகவும் அங்கு புலிகள் தங்கள் தலைமையகத்தையும் வைத்தியசாலையையும் மாற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## துண்டுப்பிரசுர வீச்சு

யாழ்ப்பாணத்தில் விமானங்களிலிருந்து சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் பற்றி விபரங்கள் அடங்கிய துண்டுபிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன. தற்போதைய தாக்குதல்களின் போது இந்த பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளதுடன் சந்திரிகாவின் திட்டத்தை ஆதரிக்கும்படி தமிழ் மக்களை அந்தப் பிரசுரங்கள் கோரியுள்ளன.

## உதவி மேயர் கொலை

மட்டக்களப்பின் உதவி மேயர் தோமஸ் அன்ரனி புலிகளால் கொல்லப்பட்டுள்ளார். 33 வயதான இவர் கல்லடியில் உள்ள பாடசாலை மைதானம் ஒன்றில் உதைபந்தாட்டத்தில் கலந்து கொணடிருநத போது சுட்டுக கொல்லப்பட்டார். இவர் டெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.


CANADA
SAVINGS BONDS
EVEN BETTER FOR 1995

Invest in what's important

| | | |
|---|---|---|
| 5¼% | 1st | YEAR |
| 6% | 2nd | YEAR |
| 6¾% | 3rd | YEAR |

3-YEAR MINIMUM RATE GUARANTEE & RATE INCREASES IF NEEDED
The 1995 Canada Savings Bonds offer guaranteed minimum rates. Plus these rates will be increased if needed, to keep your bonds competitive. And as always, they're cashable at any time.

NEW RRSP OPTION
Now you can buy Canada Savings Bonds directly in the form of a Registered Retirement Savings Plan. There's no need for a self-directed plan, and no fees.

You don't have to be a Canadian citizen to buy Canada Savings Bonds. All Canadian residents can buy them. Fully guaranteed by the Government of Canada, they're available wherever you bank or invest for as little as $100.

CANADA SAVINGS BONDS
LES OBLIGATIONS D'ÉPARGNE DU CANADA

BUY YOURS BY NOVEMBER 1.
Canada





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் நண்டும் கேள்வி தெரியாத விடையும்

## பாலசுந்தரன்

பொதுவாக பிரச்சனைக்குதான் தீர்வுண்டு. கேள்விக்குத்தான் விடையுண்டு. இது தலைகீழாக குழம்பியுள்ளது கியூபெக் அபிப்பிராய வாக்கெடுப்பில். பொதுவாக கீழைதேச அரசியல்வாதிகட்கும் மேலைதேச அரசியல்வாதிகட்கும் இடையில் பாரிய வேற்றுமை இருக்கும் ஆனால் நாம் கீழைதேச அரசியல்வாதிகளுடன் ஒப்பிடுவது மிக பொருந்தும்.

அநேகமாக தோல்வியை தழுவப்போகும் நபர் ஜாக் பரிஸோ. அப்படியாயின் ஏன் இவர் தோல்வியை தழுவுகிறார்? இவர் மக்கள் முன் வைத்த குழப்பங்கள் அதிகம். இவரின் பல முயற்சிகள் கண்கட்டி கல்யாணம் செய்யும் முயற்சியாகவே உள்ளது.

முதலாவது நாணய விவகாரம். இவர் கூறுகிறார் தனிநாடான கியூபெக்கும் கனடிய நாணயத்தை கொண்டிருக்கலாம். இது முற்றாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவர் இப்படிச் சொல்வதும், ஐரோப்பிய நாடுகள் தமக்குள் ஒரு பொது நாணயத்தை கொண்டுவர முயல்வதும் முற்றும் முரணான சம்பவங்கள். பின்னையது ஒரு கூட்டுறவு முயற்சி. முன்னையது மொத்தத்தில் "புலியள் காசடிக்கப் போறாங்கள்" போன்ற ஒரு சம்பவம். இப்படி சொல்வதன்மூலம் ஒன்றை பரிஸோ ஒத்துக் கொள்கிறார். அதாவது தனிநாடான கியூபெக் தனிநாடான பின்பும்ஏறக்குறைய கனடாவின் அளவிலான பொருளாதார வளர்ச்சியை கொண்டிருக்கும் என்ற அவநம்பிக்கை. எல்லாவற்றுக்கும் மேலாக ஏனைய கனடியர்களின் அபிப்பிராயத்தையும் கேளாமல் தன்னிச்சையாக முடிவெடுத்தமை.

பரிஸோ செய்யும் இரண்டாவது பாரிய தவறு தனது மக்களையே கனவு காண வைப்பதே. தனிநாடான பின்பு தாம் கனடாவுடன் இணைவுபடலாம்என்றும் கனடா அதை நிச்சயமாக செய்யும் என்று கூறிவருகிறார். இது சாத்தியப்படலாம் அல்லது சாத்தியப்படாமல் போகலாம் ஆனால் கியுபெக் மக்கள் இந்த அநுமானத்தை மட்டும் நம்பி அதை ஒரு முடிந்த முடிபாக ஏற்றுக்கொண்டு பிரிவினைக்கு வாக்களிக்க தயார் இல்லை. சமீபத்திய கனடிய தொலைக்காட்சி கருத்து கணிப்பின் 56% வாக்காளர் "ஆம்" என்று வாக்களிப்பார்களாம், கனடா தனிநாடான கியூபெக்குடன் புதிய இணைவை ஏற்படுத்தும் என்றால் மட்டும். கனடா அவ்வாறு உறுதி கொடுக்காவிடின் 30% மட்டுமே 'ஆம்' என்று வாக்களிப்பார்களாம்.

இங்கு ஒன்று மட்டும்வடிவாக புரிகிறது பொதுவான கியபெக்கர்கள் கனடாவுடன் ஒரு உறவை வேண்டி நிற்கிறார்கள். பரிஸோ விற்கு இது முற்றிலும் பிடிக்கா உண்மை. ஆனால் தனது வாக்காளர்களுடன் முட்டி மோத முடியாது அதனாலே மீண்டும் மீண்டும் பிரிந்தபின் இணைவு என்ற கனவுகளுக்குள் கியுபெக்கை மூழ்கடிக்க முனைகிறார். இவ்வாறு சொல்வதை நம்பி "ஆம்" என்று வாக்களித்தால், பிறகென்ன கியுபெக்கினர் கொதிக்கும் நீரில் வீழ்ந்த கடல் நண்டு ஆகிவிடுவார்கள். பரிஸோ சொல்வதன் படிய அவிய வேண்டும். சமீபத்திய கியூபெக்தவிர்ந்த ஏனைய கனடிய பாகங்களில் செய்யப்பட்ட கருத்து கணிப்பு வாக்கெடுப்புக்கள் கியுபெகை பயம் கொள்ள வைத்துள்ளது. பெரும்பாலான கனேடியர்கள் பிரிந்த கியூபெக்குடன் பாரிய உறவை விரும்பவில்லை இந்த முடிவுகள் கியுபெக்கை பிரிவு மாயையிலிருந்து தூர விலக வைக்கிறது.

மூன்றாவது பரிஸோவில் பாரிய நம்பிக்கை இன்மை பிரிவினை வண்டியை செலுத்தும் முறைப்படியான தலைவராக பரிஸோ இருந்தாலும் கியுபெக்கினர் அதிகம் லூசியன் பூசார்ட்டை விரும்புகிறார்கள். இவர் சற்று நிதானமாக பேசுவதும் பரிஸோவைவிட அதிகம் யதார்த்தமாக செயலபட முனைவதும் சில காரணங்கள் ஆகும். கியுபெக் முற்றான பிரிவினையை விரும்பவில்லை என்று அறிந்த லூசியன் பூசார்ட்டை பிரிவினை போக்கில் சில மாற்றத்தை கொண்டுவர விரும்பினால் அவ்வாறு மாற்றத்தை கொண்டுவர முடியாவிடின் வாக்கெடுப்பை சற்று தள்ளிப் போடவாவது விரும்பினார். ஆனால் எல்லாவற்றுக்கும் பரிஸோ சார்பாக இருக்கவில்லை. தனது இஷ்டபடி செயலபட்டார். லூசியன் பூசார்ட் வேறுவழியின்றி பரிஸோவின் ஆட்டத்திற்கு ஏற்ப ஆடவேண்டியாயிற்று. இதுவும் கியுபெக் வீறு இழந்தமைக்கு ஒரு காரணமாகும்.

நான்காவது காரணமாக, ஏனைய கனேடியர்களின் சாந்தப் போக்கை சாரலாம். முற்காலங்களில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏனைய கனேடியர், குறிப்பாக ஆங்கிலேயர், கியுபெக் கொடியெரிப்பு, போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு நடப்பதும் 'ஆம்' வாக்குகளை அதிகரிக்கும். ஆனால் இம்முறை எந்தவொரு கியுபெக் எதிர்ப்பு நடிவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை பாரிய அளவில். அதுமட்டுமன்றி லிபரல், கன்சர்வேட்டிவ் போன்றன மனப்பூர்வமாக சாதாரண அரசியலுக்கு அப்பால் இணைந்து செயல்படுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உறுதியில்லை சுற்றுக்கு 'ஆம்' என்று வாக்களிக்க கேட்பதே பெரிய பலவீனமாகும். மிக நீண்ட காலங்கட்கு முன் மக்களை 'ஆம்' என்று வாக்களிக்கும்படி கேட்டவர்கள், மிக அண்மையிலேயே எதற்கு என்பதை கூறினார்களா? அதுவும் மிகவும் குழம்பிய தெளிவில்லாத சுற்றில் கேட்டார்கள் இதுவும் கியுபெக்கை குழப்ப வைத்துவிட்டது. அதுமட்டுமன்றி 50% +1 வெற்றியே போதும் என்று வாதிடுவது பரிஸோ இன் முட்டாள் தனத்தையே வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு செல்வதன் மூலம் புதிய எதிரியை உள்வீட்டிலேயே தேடிக்கொள்கிறார். ஏனைய கனேடியர்களுக்கு இதை தனக்கு கிடைத்த வெற்றியாக கூறலாம் ஆனால் 50%-1 கியுபெக் மக்களை எதிரியாக்க முற்படுவது முட்டாள்தனம். இது உள்நாட்டு குழப்பத்தையே ஏற்படுத்தும். ஒரு நிதானமான தனிநாட்டை உருவாக்காது. குறிப்பாக ஹல் போன்ற மேற்கு கியுபெக் நகரங்கள் தரமாக விரும்பி கனடாவுடன் இணைய முற்படலாம். புளொக்கியூபெக்குவா எம்.பி ஒருவர் கூறியது போல உலகத்திலேயே அசிங்கமான நகரம் என்று

32ம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yes, Your Hair Grows Back

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி




**ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது**

இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது.

தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

**Tel:922-0478**
239 Carlton St
Toronto, Ont

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




**VITAMOL** சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப்பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

**அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.**

**Universal Foods & Merchandise Co.**
**Toronto, Canada**
**(416) 535-8672**




### CHATAK: CURRY EXCELLENT

**Chatak Madras Curry Powder** இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. **Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix** போன்றனவும் கிடைக்கும்.

### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினுள் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

**அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்**

**BUDGET SUPERSAVINGS DISCOUNT**
**1340 Queen st west (East of lansdowne)**
**Tel:(416) 537-0394**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.ஆர்.கே மார்க்கட்

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்,
இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்

**அனைத்தும் மலிவு விலையில்**

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**
**(416) 421 3429**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதை முகாம்களில் தமிழ் பெண்கள்

மறுநாள் அதிகாலை அவர்களது கண்கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. கை விலங்குகள் அகற்றப் பட்டன. எனினும் அவர்கள் கால் விலங்குகளுடன் அடைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் அன்றிரவு ஒரு பெரிய விருந்துசாரத்தின் பின்னர் விடுதலை செய்யப்படுவார்களென அஷாந்தி நக்கலாகச் சொன்னார். அவர்களைக் குளிக்குமாறு உத்தரவிட்டார். ஏறத்தாழ 50 கைதிகள் அங்கிருந்தனர். அம்முகாம் ஒரு சிறிய ஒற்றையடிப்பாதையுடன் கூடிய தென்னந் தோப்பில் அமைந்திருந்தது. அவர்களது அன்றைய முதல் உணவாக கத்தரிக்காயும் சோறும் மத்தியானம் கொடுக்கப்பட்டது. வரப்போகும் விருந்துபசாரம் பற்றி தொடர்ந்து அபூர்வமாக திரும்ப திரும்ப கூறப்பட்டது.

மாலை 7 மணியளவில் கைதிகள் கட்டப்பட்டு விலங்கிடப்பட்டு இருண்டு அறையொன்றினுள் கொண்டு செல்லப்பட்டனர். ஈவா ஆரம்பித்து வைக்க எதிர்பார்த்த விருந்து தொடங்கியது. ஈவா அடிப்பதை ஆரம்பித்து மற்றவர்களையும் தடிகளை எடுத்து அடிக்குமாறு கூறினார். அடிப்பட்டவர்களுள் பாட்டிமார்களிலிருந்து பல பிள்ளைகளுக்கு தாயானவர்களும் அடங்குவர்.

அந்நாட்களில் சித்திரவதை தொடர்ந்தது. சில அடிக்கப்பட்டனர். சிலர் கப்பிகளில் தொங்கவிடப்பட்டனர். இரத்தம் ஓட அடிக்கப்பட்ட சிலர் தண்ணீர் மறுக்கப்பட்டு வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டனர். வெய்யிலில் நின்றவர்கள் இடையிடையே நிழலுக்குள் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர் ஒரே மாதிரியான கேள்விகளும் குற்றச்சாட்டுகளும் இயந்திரத்தனமாக மீண்டும் மீண்டும் எழுப்பட்டன.

ஒருநாள் பவளம்மா இரத்தம் சிந்தும் வரை அடிக்கப்பட்டார். பின்னர் வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டார். பலவீனமடைந்து போய பேச முடியாதவராய் நின்ற பவளம்மா தண்ணீர் தருமாறு கேட்டார். மலகூடத்திற்கு பாவிக்கப்படும் தண்ணீர் கோப்பை அவ்வயது முதிர்ந்தவர் முன்னால் வைக்கப்பட்டது. அகலி உயர்த்திய தடியுடன் நின்றார். ஈவா பவளம்மாவை உற்றுப்பார்த்து "உண்மையைச் சொல்! எத்தனை இந்திய இராணுவத்தினருடன் நீ கதைத்திருக்கிறாய்? ஈபிஆர்எல்எப் எத்தனை பேர்? நீ ஒரு நல்ல பெண் என்றும் தங்களுக்கு சாப்பாடு தந்தவர் என்றும் அவர்கள் எங்களுக்கு கூறினார்கள்" என்று உறுமினார்.

அன்று நடு இரவு பவளம்மா அறைக்குள் கொண்டு செல்லப்பட்டார். யாராவது தண்ணீர் கொடுத்தால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டது. மறுநாள் அகலி அவரை வெளியே கொண்டு போய் வெய்யிலில் நிற்க விட்டார். சூரியன் மேலே செல்ல பவளம்மா மயங்கிப்போனார். பழைய குற்றச்சாட்டுக்கள் திரும்பவும் சுமத்தப்பட்டு உண்மையைச் கூறுமாறு கேட்கப்பட்டது. பவளம்மா பேச முயற்சித்தார். சத்தம் வெளிவரவில்லை. அறைக்குள் அவர் விடப்பட்ட பின் தண்ணீர் கொடுக்க வேண்டாம் என மற்றைய கைதிகள் மீண்டும் எச்சரிக்கப்பட்டனர்.

இவ்வாறு பவளம்மா நடாத்தப்பட்டது இது இரண்டாவது தடவையாகும். முன்னர் அவர் மூன்று நாட்கள் தண்ணீர் சாப்பாடின்றி விடப்பட்டார். ஒருநாள் பப்பி என்ற கைதி தனது சகோதரன் ஈபிஆர்எல்எப் இல் இருக்கிறார் என சித்திரவதை தாங்காமல் ஒப்புக்கொண்டவர்– பவளம்மாவிற்கு மிகப்பெரிய ஆபத்தின் மத்தியில் மற்றவர்களுக்குத் தெரியாமல் தண்ணீர் கொடுத்தார்.

மறுநாள் காலை பவளம்மாவிற்கு வெறும் தேநீர் கொடுக்கப்பட்டது. பின்னர் மதிய உணவும் கொடுக்கப்பட்டது. அன்று அவர் சித்திரவதைக்கு ஆளாகவில்லை. அடுத்தநாள் காலை ஈவா வந்தார். "ஓ உனது குரல் திரும்பிவிட்டது" என அச்சுறுத்தும் வகையில் கூறினார். முதலில் பலாமரமொன்றின் கீழ் வைத்து பவளம்மா விசாரிக்கப்பட்டார். பின்னர் தொங்க விடப்படும் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் அடித்து நொறுக்கப்பட்டு, நிலத்தில் எறியப்பட்டு சப்பாத்து கால்களால் மிதிக்கப்பட்டார். அவரது பல் உடைப்பட்டு ரத்தம் சிந்தியது.. பவளம்மாவை தண்ணீர் எடுத்து வரவைத்து நிலத்தில் சிந்திய ரத்தத்தை துடைக்க வைத்தனர். "நீ இனி சாகப்போகிறாய். உண்மையைக் கூறி விடு" என அஷாந்தி கூறினார். பவளம்மாவின் கைகள்.. உள்ளங்கை உட்புறமாக இருக்குமாறு மேசையில் கிடையாக வைக்கப்பட்டன. எலும்பு தெரியும் இடங்கள் தடித்த பொருள் ஒன்றினால் அடிக்கப்பட்டன. தனது குற்றங்களை ஒப்புக்கொள்ள முடிவு செய்யும் வகையில் இருட்டறையில் அவர் அடைக்கப்பட்டார். தண்ணீர் கொடுக்கப்படவில்லை. மறுநாள் காலை ஈவா வந்து "நீ பேசுவதற்கு முடிவு செய்து விட்டாயா ? எனக் கேட்டார். தான் எல்லாவற்றையும் ஏற்கனவே சொல்லி விட்டதாக பவளம்மா சொன்னார். உண்மையைத் தெரிந்து கொண்ட பின் விடுதலை செய்யுமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதாக ஈவா சொன்னார். மூன்று நாட்களின் பின் அகலி பவளம்மாவை விசாரித்து விட்டு சுடப் போவதாக பயமுறுத்தினார். அதன் பின் எவ்வித விசாரணையும் நடக்கவில்லை.

சலீம் அதன் பிறகு வந்தார். அதிருப்தியுடன் பேசிய அவர், கைதியை அடித்துத் தான் விஷயம் எடுக்க

**மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றும் தானே அக்காரியத்தைச் செய்ய போகிறேன் என்றும் கூறினார்.

மோகனா குற்றவாளியின் ஒப்புதல் வாக்குமூலமென ஒன்றை சலீமுக்கு வாசித்துக் காட்டினார். இரண்டு நாட்களின் பின்னர் பவளமமாவின் கைகளில் உருக்கிய மெழுகு ஊற்றப்பட்டது. தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை கைதியை வாசிக்க வைத்து வீடியோ எடுக்கப் பட்டது. இவ்வாக்குமூலத்தில், அவர் ஒருபோதுமே சொல்லாத விடயங்கள் இந்திய சமாதானப்படைக்குச் சாப்பாடு கொடுத்தது போன்ற விடயங்கள் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் பங்கர் கட்டுவது போன்ற வேலைகளில் அவர் ஈடுபடுத்தப்பட்டார். யுத்தம் மீண்டும் தொடங்கிய (ஜூன் 11) ஒரு நாள் விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்று மேலே வட்டமிட்டது. கைதிகள் மீண்டும் மட்டுவில் முகாமுக்கு அனுப்பப்பட்டனர். கால்விலங்கு மீண்டும் மாட்டப்பட்டது. அக்காலத்தில் பவளம்மாவுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

சிறிது காலத்தில் ஈவா இடம் மாற்றப்பட்டு சுதா என்பவர் தலைமைக்கு வந்தார். சுதாவின் தாயாரான பரமேஸ்வரி ராஜரத்தினம் பவளம்மாவின் தாயாரினது பாடசாலை நண்பி. இக்காரணத்தால் பவளம்மாவிற்கு இனி அடிக்க வேண்டாமென சுதா உத்தரவு பிறப்பித்தார். ஏதாவது தேவையென்றால் தன்னை தனிப்பட்ட முறையில் அணுகுமாறு சுதா சொன்னார். பால் கோப்பி கொடுக்கப்பட்டு பவளம்மாவின் வயிற்றுப்போக்குக்கு சிகிச்சை செய்யப்பட்டது.

ஆகஸ்ட் ஆரம்பப் பகுதியில் ஐந்து கைதிகளை சுதா எழுந்து நிற்கச் சொல்லி அவர்களை விடுதலை செய்வதாகக் கூறினார். கால் விலங்குகளின் பூட்டைத் திறப்பதற்காக காலையிலிருந்து மதியம் பன்னிரண்டு மணி வரை காவலர்கள் முயற்சி செய்தனர். திறப்புகள் முதலில் வேலை செய்யவில்லை துருப்பிடித்த பூட்டுகளைத் திறப்பதற்கு அவற்றை அடித்தும் மண்ணெண்ணெய் ஊற்றியும் பூட்டுகள் திறக்கும்வரை அவர்கள் முயற்சித்தனர். மேலும் மூன்று வாரங்கள் இன்னொரு முகாமில் வேலை செய்ய வைக்கப்பட்டபின் பவளம்மா இறுதியில் முத்திரைச்சந்தையில் வைத்து விடுவிக்கப்பட்டார். அவர் கைது செய்யப்பட்ட போது உடுத்திருந்த அதே சேலை அவர் விடுதலையானபோது உக்கிக் கிழிந்து கந்தலாகி முழங்கால் வரை தான் நின்றது. அவரது சங்கிலி மட்டும் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அவரது பணம் (54,000) ரூபா மோதிரம் ஆகியவை ஒப்படைக்கப் படவில்லை அது களவெடுத்த பொருட்களென கைது செய்தவர்கள் கூறிக்கொண்டனர்.

பிற்குறிப்பு: தனக்கு நடந்த அனுபவங்கள் பற்றி வெளியே சொல்ல கூடாதென பவளம்மா விடுதலையாகும் போது எச்சரிக்கை செய்யப்பட்டார். அதே சமயம் அவரது வீடு விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. வடக்கில் இருந்து வெளியேறுவதற்கான விசாவை புலிகளிடமிருந்து அவர் பெற்றிருக்கவே முடியாது. மிகுந்த மன உறுதி வாய்ந்த பெண்ணாயிருந்ததனால் அவர் 1992ல் சில உதவிகளுடன் புலிகளுக்குத் தெரியாமல் வழமைக்கு மாறான பாதையொன்றால் வடக்கிலிருந்து தெற்கையடைந்தார்.

1990 அக்டோபரில் சாவகச்சேரியிலிருந்து உடமைகள் பறிக்கப்பட்டு பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் பவளம்மாவுக்கு இன்று அடைக்கலம் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இம்முஸ்லிம் மக்களின் ஒரு பகுதியினர் தற்போது வவுனியாவின் தென்பகுதியில் வசிக்கின்றனர். அவர்கள் மிகவும் ஆதரவாகவும் அன்பாகவும் தன்னுடன் நடப்பதாயும் தனது நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாயும் பவளம்மா கூறினார். தான் எங்காவது சென்று நேரம் கழித்து வர நேரின் அவர்களில் யாராவது ஒருவர் சைக்கிளில் வந்து தான் ஆபத்தின்றி வீடு சேர்ந்ததை உறுதிப்படுத்தியே போவரென்றும் கூறினார். ஒருமுறை பவளம்மா வவுனியாவில் இருந்த கோவில் ஒன்றுக்கு வணங்கச் சென்றவிடத்தில் மட்டுவிலைச் சேர்ந்த ஒருவரைச் சந்தித்தார். அவர் பவளம்மாவின் மூத்த மகன், இளைய மகன் (மெக்கானிக்) ஆகியோர் பற்றிய செய்திகளைத் தெரிவித்தார். புலிகள் கைதியாக வைத்திருந்து விடுவித்த ஒரு நபரிடமிருந்து பவளம்மாவைச் சந்தித்தவர் செய்தி அறிந்திருந்தார். மூத்த மகன் புலிகளால் கொழும்பிலிருந்து துணுக்காய் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, வழமையான சித்திரவதைக்குள்ளாகி கண் கட்டப்பட்டு, கால் விலங்கிடப்பட்டு பங்கருக்குள் சுமா 300 பேர்களுடன் மூன்று மாதம் சிறை வைக்கப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது. இளைய மகன் முகாமொன்றில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. மெக்கானிக் மகனின் தொழில் நுட்பத்திறனை புலிகள் தங்களுக்காகப் பயன் படுத்துவதாகவே கருதலாம் இரு மகன்மாரிடமிருந்தும் பவளம்மா இன்னும் எத்தகவலையும் பெறவில்லை.

புலிகளின் அதீத இயல்பைத் தெரிந்து கொண்டும் தமது குடும்பங்களை விட்டு விட்டு இந்திய இராணுவத்துடன் பின்வாங்கிய ஈபிஆர்எல்எப் இனரை பவளம்மா சாடினார். இறுதியாக அவர், "நான் எனது அனுபவங்களின் ஒரு சிறு பகுதியை உங்களுக்கு கூறினேன். எந்த ஒரு சுயமரியாதையுடைய பெண்ணும் தான் கேட்டவைகளையும் பார்த்தவைகளையும் அனுபவித்தவைகளையும் மீண்டும் வெளியில் சொல்ல முன்வரமாட்டார். எந்தவொரு பெண்ணுக்கும் இவ்வாறான அனுபவங்கள் ஏற்படக்கூடாது" என கூறினார். (சமூகத்தில் பொதுவாக பேசத்தடையான வார்த்தைகள் வரும் போது இவர் தனது தன்னடக்கத்தின் நிமித்தம் அவ்வாறான பதில்களைத் தவிர்த்த வந்தார். தன்னைப் பிடித்து வைத்தவர்களின் குணஇயல்புகளைப் பற்றியும் கூறுவதைத் தவிர்த்துக் கொண்டார்.) அவர் மேலும் தெரிவித்ததாவது குடும்பப்பெண்ணும் தாயுமான எனக்கு இத்தகைய அனுபவம் ஏன் ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை இது ஒரு பயங்கர கனவோ என்று கூட தான் நினைப்பதுண்டு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புலிகள்

கலவரங்களுக்குப் பின்பு நூற்றுக்கணக்கான தமிழ் பாடசாலை, கல்லூரி மாணவர்கள் உள்ளூர் இயக்கத் தலைவர்களை அணுகி தங்களைச் சேர்க்கும்படியும் ஆயுதம் தரும்படியும் கேட்டுக் கொண்டனர். பலர் தங்கள் வீடுகளை விட்டு ஓடினார்கள். அவர்களில் பலர் தாங்கள் ஈழத்திற்காக போராடப்போவதாகக் கூறிக் கொண்டு கடிதங்களை எழுதி வைத்து விட்டுச் சென்றார்கள். டெலோ எந்த வித இலட்சியமும் இல்லாமல் இந்த பைத்தியக்காரத் தனத்தான அவசரத்தில் வந்து சேர்ந்தவர்களில் நூற்றுக்கணக்கானவர்களைச் சேர்த்துக் கொண்டது. மற்றவர்களும் சேர்த்துக் கொண்ட போதிலும் குறைந்த அளவிலேயே சேர்த்தனர். 'டெலோ போன்ற குழுக்கள் ஏதோ பிக்னிக் போவது போல இந்தியாவுக்கு கொண்டு சென்றன' என்கிறார் யாழ்ப்பாணக் கல்விமான் ஒருவர். இந்த பெருமளவிலான ஆட்சேர்ப்பு ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அமைப்புகளைத் தான் அதிகம் பாதித்தது. ஏனெனில் புதிதாய் சேர்ந்த பையன்கள் ஆயுதங்கள் தரும்படி தான் கேட்டார்களே ஒழிய, மார்க்சிச வகுப்புகளை அல்ல.

ஜி என்ற ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர் ஒருவர் நிலைமையை விளக்குகிறார். 'நான் யாழ்ப்பாணத்தில் மாணவனாய் இருந்தேன். எனது குடும்பத்தினர் கூட்டணியின் ஆதரவாளர்கள். நான் ஆயுதப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டிருந்த போது கூட்டணியின் மிதவாதப்போக்கில் திருப்தியற்றிருந்தேன். நான் உண்ணாவிரதம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டிருந்தேன். எனது பாடசாலை நாட்களில் நான் இடதுசாரி கொள்கைகளில் பிடிப்புள்ளவனாக இருந்தேன். வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்களுடன் நான் திரிகிறேன் என்று எனது குடும்பத்தினர் மகிழ்ச்சியற்றிருந்தால் குடும்பத்தினருடன் பிரச்சனைகள் வந்தன. நான் பிடிபட்டு இறக்கலாம் என்று என் தந்தை கவலையுற்றிருந்தார். எனது தாய் ஓரளவு பிரச்சனைகளை விளங்கிக் கொண்டவர். உணவு பரிமாறும்போது நான் சொல்பவற்றை அவர் கேட்டுக் கொண்டிருப்பார். எனவே எங்கள் முதல் யுத்தம் குடும்பத்திற்கு எதிரானது.

82ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இனரான நாங்கள் காணிகளற்ற மக்களுடன் சேர்ந்து செயற்பட்டோம். அவர்களின் வீடுகள் கட்டப்பட்ட காணிகளை அவர்களுக்கு கிடைக்கச் செய்ய முயற்சித்தோம். நாங்கள் வன்முறையில் இறங்கவில்லை. நாங்கள் யாழ்ப்பாணத்தில் குறைந்த சாதியினரின் இயக்கமாக முத்திரை குத்தப்பட்டோம். நாங்கள் கசிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பல இடங்களில் தயாரிப்பு நிலையங்களை தாக்கினோம். அரசியல் வேலை செய்வதற்காக நாங்கள் கிராமங்களில் பயமுறுத்தப்பட்டோம். புளொட், புலி இயக்கத்தினர் எங்களை சுவரொட்டிகளுடனும் வாளியுடனும் கண்டபோது பசைவாளி இயக்கம் என்று கிண்டல் செய்தனர்.

புளொட், புலி இயக்க உறுப்பினர்கள் வித்தியாசமானவர்கள். அவர்கள் எங்கிருந்தோ திடீரென்று வந்து துண்டுப்பிரசுரங்களை கொடுத்துவிட்டு மறைந்து விடுவர். அவர்களின் இடுப்பில் பிஸ்டல்கள் இருக்கும். அவற்றைப் பார்க்க திரிலலாக இருக்கும். இயற்கையிலேயே யாழ்பபாண மக்கள் எங்களை கிண்டல் செய்தனர். 'எப்போது நீங்கள் ஆயுதம் தூக்கப் போகிறீர்கள்?'. நாங்கள் வெறும் சுவரொட்டி எழுதுவதாகவும் எதுவுமே செய்யாதிருப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டினர். ஆயுதம் தூக்க எவரும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் புலிகளும் புளொட்டினரும் முக்கியமாக புலிகள் குற்றவாளிகளையும் சமூக விரோதிகளையும் கொல்லத் தொடங்கினர். இவ்வாறான கொலைகளுக்கு எதிராக நாங்கள் வாதிட்டோம். இருபாலையில் ஒருதடவை எலக்ரோனிக் பொருள் ஒன்றை வீடொன்றில் திருடிய ஒருவனைப் பிடித்து அவனை மின்கம்பத்தில் கட்டினோம். புலி உறுப்பினர் ஒருவர் அவனைக் கொண்டு போய் சுட்டார். நாங்கள் இந்தக் கொலைக்கு எதிராக சுவரொட்டி ஒட்டினோம். இவ்வாறான ஆயுத துர்ப்பிரயோகம் தவறான வழிக்கு கொண்டுசெல்லும் என்று எச்சரித்தோம்.

கிராமங்களில் வகுப்புகள் வைத்தோம். அவை குறுகிய கால அறிவிப்பில் நடத்தப்பட்டன. ஆட்களுக்கு கண்கள் கட்டப்பட்டு வகுப்புகள் நடக்கும் இடத்திற்கு கொண்டு வரப்பட்டனர். இவையெல்லாம் பொலிசாரின் கண்காணிப்பினால் அவசியமானவை. எங்கள் வகுப்புகளில் நாங்கள் தேசியப் பிரச்சனை, சர்வதேச நிலை, ஈழம் எவவாறிருகக வேணடும், இலஙகை அரசியல கடசிகள், இந்திய தமிழர்கள் பற்றி எல்லாம் விவாதித்தோம். இந்தியா ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளது, விடுதலைப் போராட்டத்திற்கு சார்பானது, எனவே இந்தியாவுடன் நட்புறவுடன் இருக்க வேண்டும் என்று வாதிட்டோம்.

நாங்கள் எங்கள் அடிப்படைக் கேள்விகளில் தவறவில்லை. ஏன் நாங்கள் சண்டையிட வேண்டும்? யார் எங்கள் எதிரிகள்? யார் எங்கள் நண்பர்கள்? நாங்கள் எப்படி மற்ற குழுக்களுடன் இணைந்து இயங்குவது?

ஆனால் கலவரத்தின் பின்னர் இயக்கங்களில் சேரும் அதிகளவிலான எண்ணிக்கை இளைஞர்களை அரசியல் ரீதியாக வளர்க்கும் எங்கள் திட்டத்தை அழித்து விட்டது. நாங்கள் கொள்கை, அரசியலின் முக்கியத்துவம் பற்றி பேசிய போது பலர் எங்களை விட்டு விலகப் போவதாகக் கூறினர். சிலர் உண்மையிலேயே விலகினர்.'

சென்னையில் றோ அதிகாரிகள் தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக பலவேறு இயக்கங்களை அவர்களுடன் நெருக்கமான ஒரு இலங்கைத் தமிழர் மூலம் அணுகினர். யார் பயற்சி பெற விரும்புகிறார்கள் என்பதை அறியும்படி அவரிடம் கேட்கப்பட்டது. எல்லா இயக்கங்களும் தயாராக இருந்த போதும் புளொட்டும் புலிகளும் றோ தங்களை தனியாகக் கேட்க வேண்டும் என்று வலியுறுத்தின.

இந்தியா பயிற்சி கொடுக்க விரும்புகிறது என்று பிரபாகரனின் சகாக்கள் அறிவித்த போது அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார். சென்னை வந்த போது மற்றக்

எம்.ஆர்.நாராயணசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களுக்கும் பயிற்சி கொடுப்பது பற்றி அவர் கோபம் கொண்டார். புலிகள் இந்தியாவிலிருந்து தனிமைப்படுத்தப்படுத்தப்பட்டு விடுவார்கள் என்று மற்ற சகாக்கள் கூறிய பின்னர் தான் ரே அதிகாரிகளைச் சந்திக்க அவர் இணக்கம் தெரிவித்தார். டெலோ போன்ற அமைப்புகளுக்கு பயிற்சி கொடுப்பது பற்றி பிரபாகரன் ஆத்திரம் கொண்டதன் நியாயத்தை ரே அதிகாரிகள் விளங்கிக் கொண்டனர். ரே அதிகாரிகள் பிரபாகரனைச் சந்திக்க வந்த போது அவரை சாந்தப்படுத்துவதற்காக அவருக்கு ஒரு பரிசுப் பொருளுடன் வந்தனர். அது ஜேர்மன் தயாரிப்பான லூகர் பிஸ்டல்.

ஈரோஸ் கூட இந்திய இராணுவப் பயிற்சியை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஈரோஸின் லண்டனில் உள்ள உறுப்பினர்கள் அதை எதிர்த்தனர். ஆனால் இலங்கையில் உள்ள பெரும்பாலோர் அதை விரும்பினர். இதை விட இந்திய நக்சலைட்டுக்கள் இதை விரும்பவில்லை. 'நாங்கள் இந்தியாவின் குடைக்குள் வருவதை அவர்கள் விரும்பவில்லை. இந்தியா எங்கள் விடுதலைப் போராட்டத்தை சிதைக்கும் என்று அவர்கள் எச்சரித்தனர்' என்கிறார் ஈரோஸின் தலைவர் ஒருவர்.

ரே முதலில் ஈ.பி.ஆர்.எல்.எப் உடன் அதன் நக்சலைட் தொடர்பு காரணமாக தொடர்பு கொள்ள விரும்பவில்லை. இந்தியாவின் மாவோயிஸ்டுகளுடன் தொடர்புகளை பத்மநாபா துண்டித்த பின்பே ரே அவர்களை சேர்த்துக் கொண்டது. ரேவின் தொடர்பு ஆளுடன் சிறி சபாரத்தினத்திற்கு ஏற்பட்ட நெருக்கம் காரணமாக டெலோ முதலில் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னையில் உள்ள தீவிரவாத தலைவர் ஒருவர் ரே பல குழுக்களை பயிற்சி கொடுப்பது பற்றி கூறிய போது தனக்கு சந்தேகம் இருந்ததாக கூறினார். அதற்கு முன்பு ரே இலங்கைத் தீவிரவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவில்லை. 'நான் இன்டெலிஜன்ஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டேன். அவர்கள் கவலை கொள்ள வேண்டாம் என்றனர்'

(அடுத்த வாரம்...தேரா தன்னில் பயிற்சி)


# தமிழர் ஊடக ஆய்வு வட்டம்

பல்வேறு வெகுஜன ஊடகங்கள் பற்றிய ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் 'தமிழர் ஊடக ஆய்வு வட்டம்' என்ற அமைப்பு ரொறன்ரோவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

சினிமா, அரங்கு, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற ஊடகங்கள் பற்றிய விரிவுரைகள், கலந்துரையாடல்கள், விமர்சன அமர்வுகள் போன்றவற்றை கிரமமாக நடத்துவதன் மூலம் அமைபின் இலக்கு எய்தப் பெறும்.

அங்கத்தவர் ஆவதற்குரிய வருட சந்தா 25 டொலர்கள். அத்துடன் அமர்வின் தன்மைக்கேற்ப தேவையேற்படும் பட்சத்தில் அங்கத்தவர்களிடம் சிறுதொகைப் பணம் அறவிடப்படும். அமர்வுகளை சிறந்த முறையில் நடத்துதல் வேண்டி அங்கத்தவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

அங்கத்தவராவதற்கு ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகளுக்கு

**(416) 439 5260**



# Blue Line Printing

கண்வணக் கவரும் வண்ணங்களில் தரமான அச்சுவேலைகளுக்கு.

☞குறைந்த விலை
☞குறித்த தவணை
☞குன்றாத தரம்

**Tel:299 5979**
**Fax:299 8171**

**335 Nugget Ave, Unit 6**
(McGowan/Sheppard)
Scarborough

**Books, Flyers, Business Cards, Wedding Cards**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! என் யாழ்ப்பாணமே!



## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

வாய்க்காலில் ஓடிக் கொண்டிருந்த நீரிலிருந்து புகை கிளம்பியது. சுற்றி வர இருந்த தோட்டங்களில் பயிர்களின் மேல் பனிமூட்டம் மூடிக் கிடக்கிறது. சின்னத்துரையர் இரண்டு மணிக்கு வாட்டர் பம்ப் பூட்ட முன்னர் இந்த ஆறாயிரம் கண்டு புகையிலைக் கண்டுக்கும் தண்ணி இறைத்தாக வேண்டும். புற்களின் மேல் துளிர்த்திருந்த பனித்துளிகளில், தூரத்தில் நின்ற தென்னை மரங்களின் ஊடாக வந்த கதிர்கள் நுழைந்து நியோன் விளக்குகளாய் பிரகாசித்துக்கொண்டிருந்தன. தூரத்தில் லாண்ட் மாஸ்டர் ஒன்று போகும் சத்தம் பனிக்குளிரில் நீண்ட நேரமாய் கேட்டுக் கொண்டிருந்தது. சுன்னாகத்துக்கும் தின்னவேலிக்கும் கீரைப்பிடிகளையும் கத்தரிக்காய் சாக்குகளையும் கரியரில் கட்டிக் கொண்ட "குஞ்சப்புகளும்", வாழைக்குலைகளை மாட்டு வண்டிலில் கட்டிய "சீனியப்புகளும்" சுருட்டுப் புகைகளை புகையிரதம் போல தள்ளிக் கொண்டு வேகமாய் போனார்கள்.

வாய்க்காலுக்குள் இருந்த கோரைப் புற்களை வளைத்து மேவிய நீர் வாய்க்காலை மறித்து வழிவிட பாத்திகளுக்குள் நுழைந்து புகையிலைக் கன்றுகளின் அடியில் சூழ்ந்து பரவிக் கொண்டது.

நதிக்கரை நகரில்தான் நாகரிகம் வளர்ந்தது என்றால் என் கற்பனை வளமும் இந்த வாய்க்கால் கரை ஓரங்களில் தான் வளர்ந்தன. ஆறில்லா ஊரில் குடியிருக்கும் என் குறையைத் தீர்த்தவை இவை. ஆறுபோல் வளைந்து நெளியாமல், தோட்டத்து வரம்புகளில் மேவியுயர்ந்து நேராக போகும் இந்த வாய்க்கால் ஓரங்களில் குந்தியிருந்து "கலிவரின் பயணங்களில்" வரும் எறும்பளவு மனிதர்களும் ரொபின்சன் குறுசோவின் "வெள்ளிக்கிழமையும்" "பளிங்குத் தீவின் "றல்ப் ரேவரும்" இந்த வாய்க்கால்களில்... கணக்குக் கொப்பிகளில் இருந்து கிழிக்கப்பட்ட ஒற்றைகளில் செய்த வள்ளங்களில் பயணம் செய்வதாக கற்பனை செய்ய... வள்ளம் ஈரத்தினால் அமிழ்ந்து விடும்.

பப்பாசி மர இலைகளின் குழாய்களை மண்ணுள் சொருகி, வாய்க்கால்களில் இருந்து நீர்வீழ்ச்சி உருவாக்கி, அதில் புற்களுக்கு நீர் பாய்ச்ச.. முதுகில் பளார்.. போய் குளியடா! குளிக்க விட்டால் பாத்தியை உடைக்கிறார்...

அக்காவிடம் கிண்ணச்சட்டியை வாங்கி வந்து பீலிக்குள்ளால் மண் கலங்காமல் பாயும் நீரை அள்ளி, மேலில் ஊற்றி, அவசரமாய் குளித்து ஓடிப் போய் முற்றத்து வெயிலில் நிற்க.. துவாய் ஒன்றைக் கொண்டு வந்து ஆதரவாய் அணைத்துக் கொண்டு "எங்கட ராசா"வைத் துடைத்து விட... என் நதிக்கரைக் கற்பனைகள் தாழப் பறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடங்கி விடும்.. பள்ளிக் கூடம் ஓட வேண்டுமே..

வெயில் மெதுவாய் ஏற, மேலிலிருந்த சேட்டைக் கழற்றி பூவரசில் தொங்க விட்டு தண்ணீர் கட்ட.. அக்காவின் மகன் கேற்றிலும் கோப்பையுமாக 'டேய் மாமாவுக்காக' தேநீர் கொண்டு வருவது தெரிந்தது. மச்சான் வாங்கிக் கொடுத்த சுவெட்டர் பிய்ந்ததால் அதன் மேல் என் சாரம் ஒன்றை போர்த்தியபடி வந்தான். இவன் இப்போதைக்கு என்னருகே வர மாட்டான். மெஷின் அருகில் நின்று நாடியில் கை வைத்தபடி நீர் பாயும் அழகைப் பார்த்து விட்டு.. என்னண்டு மாமா, பைப்புக்காலே தண்ணி மேல வருகுது?... மைய நீக்க விசை பற்றி எப்படி நான் இவனுக்கு சொல்ல முடியும்?

தண்ணீர் குளிரும் என்ற பயத்தில் தூர நின்று சிறு நீர் கழித்து.. 'மாமா உங்க வருதோ பாருங்கோ' என்று கேட்ட பின்பு தான் கேற்றில் என் கைக்கு வரும். சுடச்சுட தேனீரை கோப்பைக்குள் ஊற்றி ஒரு உறுஞ்சு உறுஞ்சிய பின் வாய்க்கால் கரை மேல் கோப்பையை வைக்க.. அவன் தடியொன்றினால் தண்ணீருடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

நாலு மணிக்கு நல்லூர் மணிச்சத்தம் கேட்டு சீனிவாசகம் 'மேனே, எழும்பு.. போய் பைப்பை பூட்டு' என்ற போது நான் அரிசிச் சாக்கு ஒன்றினுள் காலைப் புதைத்து தூங்கிக் கொண்டிருந்தேன். 'மேனே, அவங்கள் ரெண்டு மணிக்கு பூட்டுறதுக்குள்ள நாங்கள் விட வேணும்' என்று அம்மா பாய் அருகில் தேனீரை வைத்த போது பாயையும் தலைகணியையும் சுருட்டி வைத்து வந்து பூட்டியது தான். எப்படியும் ரெண்டு மணியாகும்.

'மிசின் தண்ணி குளிர், தேத்தண்ணி சூடு... ரெண்டிலையும் எப்பிடி ஆவி வருகுது' என்ற கேள்விக்கான எனது பதிலை எதிர்பார்க்காமலோ, புரிந்து கொள்ளாமலோ சின்னவன் மாயமாய் மறைந்தான். பொயிலைக் கண்டை விட உயரம் குறைவு.. கேட்கிற கேள்வி.. என்னைப் போல இதுக்குள் மாய விடாமல் உவனைப் படிப்பிக்க வேணும்.

அடுத்த துண்டுக்கு தண்ணீரை திருப்பி விட்டு அது போய் சேர்வதற்குள் ஓடிப் போய் மிஷினுக்கு மண்ணெண்ணெயை விட்டு திரும்ப பாத்தி பெருகி உடைத்துக் கொண்டிருந்தது. பாத்திகளில் மண்ணை வெட்டி, உடைப்பை அடைத்து நிமிர.. ஏழரை மணி காலை வெயில் மெதுவாகச் சுட்டது.

அடுத்த தோட்டத்தில் புல்லுப் பிடுங்கும் காமாட்சி மாமிக்கு தேநீரோடு தேவகி மச்சாள் போவது தெரிந்தது. 'ஏரிக்கரை மேலே போறவளே பெண் மயிலே' என்று பாட்டு என்னையறியாமல் வந்தது. முறை மச்சாள். 'அவருக்கும் எண்ணமாக்கும்' என்ற திமிரோ, 'எல்லாரும் அம்மாட்டை வந்து மாமி எண்டு வளைவினம். இவருக்கு மட்டும் லெவல்' என்ற கோபமோ.. நான் ஒரு ஜீவராசி அந்த ஏரியாவில் நிற்பதாக காட்டிக்கொள்ளாமல் போனாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வெளிக்கிட்டு அவள் பள்ளிக்கூடம் போய்விடுவாள். 'மச்சாள், உவன் சின்னவன் மேற்கொண்டு ஒண்டும் படிக்கேலையோ' என்று அம்மாவிடம் மாமி கேட்கும் போது என்ன மனதில் நினைச்சுக் கொண்டிருக்கிறாவோ தெரியாது.

சூரியன் உயர்ந்து உடம்பில் கதிர்களால் குத்தத் தொடங்க.. உடம்பில் பட்ட புகையிலை மச மச என்று ஒட்டி அரியண்டம் தந்தது.

நான் மட்டும் ஏன் இந்த நரகத்துக்கை கிடந்து அவதிப்பட வேணும்.. என்னோடு படித்தவர்கள் ஒன்றில் பல்கலைக்கழகத்துக்கோ, வெளிநாட்டுக்கோ போக.. நான் மட்டும் இந்த பொயிலைப் பாணிக்குள் நிற்க வேண்டியிருக்கிறது. ராஜன் என்னை ஜேர்மனிக்கு கூப்பிட உதவி செய்வதாக கடிதம் போட்டு நாலு மாதம்.. பாஸ்போட் எடுத்து ரெடியாய் இரு என்றவன்.. பதிலைக் காணோம்.

ரவுணுக்கு படிக்கப் போகும் பெண்கள் வெள்ளை யூனிபோர்மில் ஏதோ கலர்களில் டை கட்டி, எங்கோ வந்து கொண்டு பனிக்குளிரினால் அருகில் வருவதாக ஜாலம் காட்டும் பஸ்ஸைப் பிடிப்பதற்காய் செம்பாட்டு ரோட்டுகளுக்குள்ளால் ஓடிப் போனார்கள். நேரம் ஏழரை இருக்கலாம். பென்சன் எடுத்த கிழங்கள் போல் பெருமூச்சு வந்தது. பஸ் ஸ்டாண்ட்.. டியூசன்.. ஸ்கூல் பஸ்.. எத்தனையை இழந்துவிட்டேன். அட்வான்ஸ் லெவல் எடுத்த கையோடு நிசலடைப் பார்த்து எவ்வளவு காலம்..

சீனிவாசகம் பந்தலுக்குள் புடலங்காய்களுக்கு கல்லுக் கட்டிக் கொண்டிருந்தார். முத்திய புடலங்காயோடு சந்திக்குப் போனால் வரும்போது விளைமீனும் வீரகேசரியும் வரும். மனிசனுக்கு சைக்கிள் ஓடத் தெரியாதோ என்னவோ... எப்போதும் பொடிநடை தான்.

மகாவித்தியாலய மாணவக் கூட்டம் சத்தமாய் பேசிக் கொண்டு போனது.. எட்டரை மணியை ஞாபகப்படுத்தியது. வாயினால் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த மருமகன் 'டேய் மாமா.. புட்டோ இடியப்பமோவாம்?' என்றபடி கேட்டுக் கொண்டே நில்லாமல் ஐயர் மோட்டார் சைக்கிள் ஓடிய மாதிரி ஓடிப் போனான்.

சவுதியிலிருந்து வந்ததும் பள்ளிக் கூடப் பெண்களுக்கு விலாசம் காட்டவென்றே மோட்டார் சைக்கிள் வாங்கிய மகேந்திரன் பெல்ஸ் போட்டு பட்டை பெல்ட் கட்டி ஹிப்பி தலை பறக்க.. ஏதோ ஓபீசுக்கு போகும் அவசரம் காட்டி முறுக்கினான். காலம்! படிப்பு ஏறுதென்று ஒன்பதாம் வகுப்போடு படிப்பை முடித்து முட்டாளாகி, மேசனாகி சவுதி போனான். இங்கே இருக்கும் வரை வெள்ளைச்சாரம், சீமெந்துப் பையுள் சுற்றிய மட்டப்பலகை, 'சாந்தேப்பை'.. இப்போது அட்வான்ஸ் லெவல் படிக்கும் பெட்டைகள் கூட சண்கிளாசோடு அவன் போவதைப் பார்த்து நாணத்தோடு சிரிக்கிறார்கள். அவனோடு பின்னால் தொங்கிப் போக இளவட்டங்கள் அப்பொய்ன்ட்மென்ட் வைக்கிறார்கள். எட்டு, பன்னிரண்டு, மூன்றரை மணிகளுக்கு மட்டும் அப்படி என்ன லெவல் என்பது புரிவதில்லை.

வெளிநாட்டால் வந்ததும் இந்த சி.டி. 185 ஓடாவிட்டால் உழைத்த காசில் அர்த்தமில்லை என்ற மாதிரி எல்லோருமே தூக்கி வைத்துக் 'ஹொண்டா'டுகிறார்கள்.

நான் இப்படி இருந்து என்ன செய்யப் போகிறேன் என்ற கேள்வி எழுந்தது. வழமை போல ஏ.எல் முடித்ததும் ஐ.சி.எம்.ஏ மாதிரி ஏதாவது லண்டன் சோதனைக்கு ரெஜிஸ்டர் பண்ணி விட்டு காலத்தை வீணாக்கக் கூடாது. எனக்கு விருப்பம் இல்லாத ஒன்றை யாரை ஏமாற்றுவதற்காக நான் படிக்க வேண்டும்? ரீச்சிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஸ்ட்டுக்கு அப்ளை பண்ணு என்ற நச்சரிப்பையும் காதிற்குள் போடக் கூடாது. வாழ்நாள் பூராவும் ஏதோ ஒரு "கலவன்" பாடசாலையில் நாலாம் வகுப்பு பிள்ளைகளை மேய்த்தபடியே என் ஆயுள் முடிந்து போவதில் எனக்கு உடன்பாடில்லை.

என்ன செய்யலாம்? சவுதிப் பக்கம்.. எனக்கு சரிப்பட்டு வராது. ஐரோப்பா! என் இலட்சிய பூமி.. போனுல் நிச்சயம் கடலில் எறிந்த கல் மாதிரி.. இன்னெரு அகதியாக இருக்க மாட்டேன்.

நினைவைக் கிழித்துக் கொண்டு ஒரு மோட்டார் சைக்கிள் ஊருக்குள் இறங்கிப் போனது. உருவம் புதிதாக இருந்தது. தோட்டப் பாதைகளுக்குள்ளால் போய் முற்றத்தில் நிற்க.. நாய் கடுமையாய் குலைத்தது. யாராயிருக்கும்? என்னைத் தேடி இந்த நேரம்.. அதுவும் மோட்டார் சைக்கிளில்..

அக்காவின் மகன் மோட்டார் சைக்கிளைச் சுற்றி வருவது தெரிந்தது. நாய் தனது எல்லைக் கோட்டுக்கு அப்பால் நின்று ஏதோ விதிமுறை மாதிரி குரைத்துக் கொண்டிருந்தது.

நான் நின்ற பக்கமாய் கையைக் காட்ட.. மருமகன் முன்னுல் வழிகாட்ட.. வரம்புகளில் அவன் வந்து கொண்டிருந்தான். பெல்ஸ், தோள் வரை வளர்த்த மயிர், மெல்லிதாய் வளர்ந்த தாடி.. யாராயிருக்கும்?

முதல் போய் செய்தியை அறிவிக்கும் ஆர்வத்தில் மருமகன் வந்து "மாமா, உங்களோட படிச்சவராம்" ஒலிபெருக்கினுன்.

ராஜன்!

"டேய் மச்சான்"

நான் தான்ரா

வரம்பில் சாண்டல்களை கழற்றி விட்டு பெல்ஸை முழங்கால் வரை மடித்து விட்டு வந்தான். எங்களை அறியாமலே கட்டியணைத்துக்கொண்டோம்... புகையிலைப் பாணி மசமசவையும் பொருட்படுத்தாமல்... என்னவோ பஸ் ஸ்டாண்டில் சைக்கிளோடு "சரக்கு சுழட்டிய" நாட்கள் நினைவில் வந்தன.

"எப்பவடா வந்தனி"

"நேற்று ராத்திரி மச்சான். வந்தவுடன மச்சானின்ரை பைக்கை தூக்கிக் கொண்டு வந்திட்டன்"

"ஏன்ரா கடிதம் போடேலை"

"உன்ரை கடிதம் கிடைச்சதடா.. ஊர்லாப் போனனுங்கள்"

"அதென்னடா, ஊருலாத்தெண்டா"

"சைஸ, மச்சான், எதுக்கெடுத்தால் ஜேர்மன் வருகுது.. ஊர்லாப் எண்டா வச்சேசன். அது சரி, நீ என்ன செய்து கொண்டிருக்கிருய்?"

"பார்க்கத் தெரியேலையே.. ஏரு பூட்டி களை பிடுங்கி நீர் பாய்ச்சுறன்.. நீ என்னடா மொத்தமாய் போனுய்?"

"அது மச்சான், உந்த பியரைக் குடி குடியெண்டு குடிச்சடா வண்டி வைச்சிட்டுது.. நீ அந்தப்படியேதானே இருக்கிருய்"

அட்வான்ஸ் லெவல் முடித்த கையோடு தனது திறமைகளை உணர்ந்துகொண்டவன் அவன். றிசல்ட் வரும் போது பேர்லினில் இருந்தான். அவனுக்கு றிசல்ட் எழுதினதே நான் தான். போன நாள் முதல் மறக்காமல் கடிதமும் இடைக்கிடை ஜேர்மன் மார்க்குகளும் வந்தன. பரீட்சையில் கிடைக்காத மார்க்குகளை விட இவை பயனுள்ளவை. என்னேடு படித்தவர்களில் இவன் மட்டும் தான் தொடர்புகளைப் பேணிக் கொள்ள நினைத்தவன்.

என்னையும் ஜேர்மனிக்கு வரும்படி நச்சரித்தாலும் பணம் வேண்டுமே.. தோட்ட வருமானம் பெரிதாயில்லை. இருக்கிற ஒரே வீட்டுக் காணியையும் எதை நம்பி ஈடு வைக்க முடியும்?

"மாமோய்.. உந்த மாமாட்டை சொல்லி என்னை மோட்டார் சைக்கிளில ஏத்துறியளோ?"

சின்னவன் சத்தம் போட்டான். "ஓமடா, பிறகு" துள்ளிக் கொண்டு ஓடினுன். இனியென்ன.. நாங்கள் போகும்வரை மோட்டார் சைக்கிளுக்கு அப்பால் குந்தி உட்கார்ந்திருப்பான். தொடப் பயம். அம்மாவும் அக்காவும் விட மாட்டார்கள்.

"அப்ப சொல்லு மச்சான்.. எப்படி உன்ரை பாடுகள்"

பிரிவு சில வருடங்கள் என்ருலும் பரஸ்பர அன்பு இன்னமும் குறையவில்லை. அதே நெருக்கம்.

"என்ன மாதிரி.. ஏதும் மடக்கியிருக்கிறியோ"

"இப்ப அது ஒண்டுக்குத் தான் குறைச்சல்"

எரிச்சலோடு பதில் சொன்னேன்.

"எனக்கு ஒரு ஜேர்மன் பெட்டை இருக்கிருள்"

"அவளும் வந்தவளோ?"

"சீ.. இங்க இதுகளோட பிரச்சனை"

தாய், தகப்பனைச் சொன்னுன்.

"அதுவும் சரிதான். பிறகு தங்கச்சியவையைக் கட்டிக் குடுக்கசே பிரச்சனை"

"உங்கவரேக்கை பாத்தன், மணிக்காயள் எல்லாம் போகுது"

"வேற வேலையில்லை. அவளவைக்கு பின்னுல பல்லைக் காட்டிக் கொண்டு திரியிறதுக்கு"

"நீ திருந்தேலை மச்சான்"

"உடன திரும்பிறியோ?"

"ரெண்டு மாதம் நிப்பன். நீயும் என்னேட வாருய். சரியோ?"

மிரட்டலில் உரிமை இருந்தது.

"பாஸ்போட் இன்னும் எடுக்கேலை"

வெடித்த குரலில் ஏதோ சொன்னுன். ஜேர்மன் மொழியில் தூஷணமாய் இருக்கக் கூடும்.

"உனக்கல்லே எழுதினுன். இவ்வளவு நாளும் என்ன பண்ணிக் கொண்டிருக்கிருய்"

"காசல்லோடா வேணும். நான் எங்க போறது"

மௌனமானுன். என் பிரச்சனைகளை விளங்கிக் கொண்டவன் அவன். பள்ளிக் கூட நாட்களிலேயே எந்த கூட்டு முயற்சிக்கும்.. படம் பார்ப்பதற்கு கூட.. பணம் [illegible].

"கவலைப்படாதை.. எல்லாம் வெல்லுவம்"

இடியப்பமும் சொதியும் சம்பலும் வந்தது.

"இடியப்பம் தின்னன்ரா" மத்தியானம் பள்ளிக் கூடத்துக்கு கட்டிச் சென்ற பார்சலை பங்கிட்டுத் தின்ற ஞாபகமோ என்னவோ. கண்கள் பனிக்க.. அப்பால் திரும்பிக் கொண்டான்.

"மணியாயிருக்கு மச்சான். அங்க பண்டி இறைச்சியும் நூடில்ஸ்ஸும் திண்டு நாக்கு செத்துப் போச்சு. அதுசரி, பின்னேரம் என்ன பிளான்"

உங்கினேக்கை வாசிகசாலைப் பக்கம்போய் வொலிபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கலாம்"
"அப்ப நீ ஃபிரீ தானே.. எத்தனைக்கு இது முடியும்?"
"எப்பிடியும் ரெண்டு மணியாகும். ஏன்?"
"சும்மா சுத்துவம்.. எனக்கும் ஆரிருக்கினம். நீ மட்டும் தானே?"

கோப்பை எடுக்க வந்த சின்னவனிடம் "அம்மாட்டை உந்த மாமாவுக்கும் சமைக்கச் சொல்லு" என்று கிசுகிசுக்க.

"உவர் என்னை மோட்டார் சைக்கிள்ல ஏத்திறுத் தான் சொல்லுவன்" என்று சத்தமாக நிபந்தனையோடு போனுன். போகும் போது "ஹிப்பி மாமா. போட்டு வாறன்" என்று அன்னியோன்யமாகவும் முயற்சித்தான்.
"டேய் அப்ப நான் சுத்தியிட்டு வாறன்"
"நில்லடா, சாப்பிட்டுட்டுப் போகலாம்"

★ ★ ★

சாப்பிட்டு புறப்படும் போது "கவனமடா" அம்மா வழமை போல.. எச்சரிப்பா? நச்சரிப்பா? தெரியவில்லை. மறக்காமல் சின்னவனை ஒரு தடவை ஏற்றி அமர்த்தி, முற்றத்தை ஒரு சுற்றுசுற்றி வந்து, அக்காவின் "கவனம்ராசா" வைக் காதில் வாங்கிக் கொண்டு சி.டி.185இன் பின்னுல் ஏறி அமர, வீட்டுவாசலில் இருந்த வாய்க்கால்வரை மெதுவாய் உருட்டி வேகம் பிடிக்க.. முட்கள், புற்களின் நடுவே மனிதக் காலடி பட்ட இடங்கள் மட்டும் ஒற்றையடிப் பாதையாய் இருந்த ஒழுங்கையினூடாக செம்பாட்டுப் புழுதியை கிளப்பிக் கொண்டு 185 வேகம் பிடித்தது. சைக்கிளை நெஞ்சு நோக மிதித்து வேகம் பிடித்து, வியர்த்து விறுவிறுக்க, சேட் உடம்பில் ஒட்டிக் கொள்ள ரவுணுக்கு போனது ஞாபகம் வந்தது. காற்றில் நெற்றிக்கு மேலால் தலைமயிர் பறக்க.. பின்னுல் அமர்ந்திருக்க.. ஒரு குட்டி சுகத்தில் மனம் லயித்தது. இந்த "சுழட்டல் மன்னர்கள்" அனுபவித்த ராஜபோகம் புரிந்தது.
"உங்கட ஊருக்கு வந்தா இது தான் மச்சான் நசல்" எனக்கு கேட்பதற்காக சத்தமாய் சொல்ல.. றோட்டில் போன கிழங்கள் சில ஒரு மாதிரிப் பார்த்தன.
"என்னடா?"
"உங்கட செம்பாட்டுப் புழுதி"

பெரிய றோட்டுக்கு போய் ஏறும் வரை எங்களை வழியனுப்ப வேலிகளுக்குள்ளால் பாய்ந்து வந்த நாய்கள் தங்கள் ஏரியா எல்லை வரை வந்து பிரேக் அடித்து எங்களை வழி அனுப்ப.. நாங்கள் றோட்டில் மிதந்தோம். ரவுணுக்கு போய் சேர இருபது நிமிசம் பிடிக்கும். வேம்படி பள்ளிக் கூடம் விடக் கணக்காயிருக்கும். ஆஸ்பத்திரி வீதியிலும் பலாலி றோட்டிலும் காட்டாறு போல வரும் பெண் பிரசைகளின் பிரவாகத்தில் எதிர்நீச்சலடிப்பதில் இருந்த குஷி.. நினைத்துப் பார்க்க வெட்கமாய் இருந்தது. அது அந்தக் காலம்.

ராஜனுக்கு பெண்களைக் கண்டதும் குஷி பிய்த்திருந்தது. சிறைச்சாலையில் இருந்த கைதிக்கு விடுதலையானதும் வருவது போல.. சைக்கிளில் போகும் பெண்களுக்கு வெட்டி எடுத்து, ஓரமாய் போகும் பெண்களுக்கு ஹோர்ண் அடித்து.. பெண்கள் பற்றி கொமண்ட் சொல்லி..
"மணி மச்சான்"
"அவவின்ரை முஞ்சைக்கு ஒரு லெவல்". உண்மை தான். இந்த ஹொண்டாவில் உட்கார்ந்தால் ஒரு ராஜகம்பீரமும் மோகனக் கணிவீச்சுக்களும் வரத்தான் செய்கின்றன.
"ஜேர்மன் எப்பிடியடா" சும்மா பின்னே உட்கார்ந்திருப்பதில் வந்த சங்கோஜத்தை விலக்கக் கேட்டேன். "அந்த மாதிரி மச்சான்" அனுபவித்த லயிப்பு தெரிந்தது.
"யாழ்ப்பாணம் மாதிரி எல்லாத்தையும் மூடி மறைக்கிறேலை. . அவங்கள் ஒப்பிண் ஆன ஆக்கள்.. நீ வந்து பாக்கத் தானே போருய்"
மற்ற சாரதிகள் அடிக்கடி ராஜனது தூஷண வசவுகளுக்கு ஆளாக..
"டேய்.. சும்மா இரு மச்சான். ஏன் வீண் பிரச்சனை?"
"நீ சும்மாயிரடா.. வந்தால் நான் கவனிக்கிறன். மாட்டு வண்டில் ஓடுறவன் எல்லாம் கார் ஓட வந்தால் உதுதான் பிரச்சனை.. ஏதோ அப்பன் வீட்டு சொத்து எண்ட நினைப்பு. . விட்டால் யாழ்ப்பாணத்தான் மாதிரி றோட்டுக்கும் வேலி போடக் கூடிய ஆக்கள் உவங்கள். ஜேர்மனி எல்லாம் சிக்னல் சிஸ்டம்"

பாடசாலையிலிருந்து வெள்ளைச் சட்டைகளில் வரி போட்ட டைகளை மார்பில் தாங்கி றோட்டோரமாய் கன்னியர்கள் மணமாலைகளுடன் காத்திருக்கும் பிரமையில் இரண்டு ராஜகுமாரர்களும்... அல்லது ராஜகுமாரனும் அவனது நண்பனும் தளபதியுமான நான்.

சைக்கிளில் வந்த ஹீரோக்களின் பொருமையும் எரிச்சலும் கலந்த கோபக் கணைகளை வென்றபடியே வெலிங்டன் சந்தியில் லிங்கம் கூல் பாரில் பைக்கைச் சாத்த... மரத்தூளுக்குள் கிடந்த ஐஸ்கட்டியும் கசகச கொட்டையும் கலந்த சர்பத் உள்ளே போக.. உடம்பு ஜில்லிட்டது. பொக்கட்டுக்குள் ஒரு சதமும் இல்லை. இல்லாட்டி நான் காசைக்குடுக்கலாம். கொடுக்கா விட்டால் ஏதும் தப்பாய் நினைப்பானே?

பாடசாலை நாட்களிலும் களவாய் படம் பார்க்கும் போதும், றிக்கோ கோப்பி பாரில் சர்பத் குடிக்கும் போதும் எல்லாமே இவன் உட்பட்ட நண்பர்களின் தயவு தான். என்றைக்குத் தான் என் பொக்கட்டில் காசு இருந்தது? என் நிலையைப் புரிந்து கொண்டதால் அவர்கள் ஒருபோதும் என்னைக் கேட்டதேயில்லை. ஆனுல் எனக்கு.. எப்போதுமே ஒரு குற்ற உணர்வும் வெட்கமும் இருக்கும். இவங்களுக்கு எல்லாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன்.
"என்னடா யோசிக்கிருய்?"
"ஒண்டுமில்லை மச்சான்"
"உன்னட்டை எவ்வளவு காசு கிடக்கு?"
"ஒரு சதமும் பொக்கட்டுக்க இல்லை"
"இப்ப அதையே கேட்டனுன்.. ஜேர்மன் போறதுக்கு எவ்வளவு வைச்சிருக்கிருய்?"
"இந்த முறை பொயிலை வித்தால் எப்படியும் ஒரு பத்தாயிரம் வரும்"
"அதெல்லாம் வெல்லலாம்... பாஸ்போட் தான் எடுக்கேலை. . போட்டோ எடுத்திட்டியோ?"
"இல்லையடா"
"இவ்வளவு காலமும் என்ன பண்ணிக்கொண்டு கிடந்தனி"
பேசாமல் இருந்தேன். காஷியரிடம் நூறு ரூபாய்த் தாளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியமாய் நீட்ட மனதுக்குள் கனத்தது.

"சரி. இப்ப பாரத்தில ஒரு போட்டோ எடுப்பம். ஏறு"

ஸ்டுடியோகாரன் மாட்டி விட்ட கோட், டையுடன் நிற்க.. கூச்சமாய் இருந்தது.

"மச்சான் எனக்கு உது வேண்டாம், வெறும் சேட்டோட எடுக்கிறன்" வெறும் சேட்டோடு பானுக்கு கீழ் இருக்க.. வியர்த்தது.

வெளியே வந்து ஹெல்மட்டை அவன் மாட்ட

"இப்ப எங்க போறம்?"

"சண்டிலிப்பாயில ஒரு 185 நிக்குதாம். அதை ஒருக்கா பாத்திட்டு.. றீகலிலை ஏதாவது படம் பாப்பம்"

★ ★ ★

சண்டிலிப்பாயில் கனகசுந்தரத்தின் வீட்டை தேடிப்பிடிப்பது சுலபமாய் இருக்கவில்லை. பாடசாலை முடிந்து வீடு வந்து முற்றம் கூட்டிக் கொண்டிருந்த பெண்களின் பார்வையில் விரகதாபம் இருந்ததாய் எனக்குத் தெரிந்தது. அல்லது பிரமையோ? வேண்டுமென்றே அருகில் நிற்பாட்டி கனகசுந்தரத்தின் வீடு எங்கே இருக்கு என்று கேட்க... அன்னிய ஆடவருடன் கதைப்பதால் தங்களுக்கு கெட்ட பெயர் வந்திடுமோ என்ற பயத்தில் ஒரு தடவை வீட்டையும் பின்பு அக்கம்பக்கமும் பாரதது விட்டு "உதாலை போய் அதாலை திரும்ப" வழிகாட்டிக் கொண்டார்கள். எனக்குத் தெரியும்.. இன்றைக்கு கனகசுந்தரம் வீட்டுக்கு நாங்கள் போய் திரும்பும் வரைக்கும் இவர்கள் விளக்குமாத்தோடு தெருவைக் கூட்டிக் கொண்டு. . வழிகாட்டி விட்டதற்கான நன்றிக்காக தங்கள் வாழ்வுக்கு வழிகாட்ட மாட்டார்களா என்று ஏக்கத்தோடு நிற்பார்கள்.

சவுதியில் இருந்து வந்த கனகசுந்தரம் உழைத்த காசில் விலாசம் காட்ட 185 ஐ வாங்கி விட்டு இப்போது திரும்பி போவதற்கு காசில்லாததாலோ, அல்லது மனைவியின் தம்பிக்கு கொடுக்கக்கூடாது என்பதற்காகவோ விற்கிறான். மச்சான்காரன் தூரத்தில் இருந்து பார்த்த எரிச்சல் பார்வை, ஏதோ பட்டத்து இளவரசனின் மணிமுடியை நாங்கள் பறிக்க வந்த மாதிரி இருந்தது. அந்த புழுதிக்குள்ளும் அழகாய் துடைத்து வைத்திருந்தான். சில்வர் பிளேட் பண்ணிய மட்காட் பளபளத்தது.

"ஓடிப பாரப்பதற்காக" முற்றத்திற்குள் வேகம் பிடித்து வெட்டி எடுக்க, திருமதி கனகசுந்தரம் பக்கத்து வீட்டு பையனை வேலிக்குள்ளால் கூப்பிட்டு வாங்கிய நெக்ரோ சோடாவுடனும் இரண்டு கிளாஸ்களுடனும் வந்தாள். தம்பிக்காரன் வாங்கி வர மறுத்திருக்கக் கூடும், பைக்கை விற்கும் கோபம் அவன் முகத்தில் தெரிந்தது.

"இருபத்தெட்டெண்டா தருவன். இப்பதான் இன்னொராள் வந்து பார்த்திட்டு போனவர், திருப்பி வாறன் எண்டு. பிறகு என்னைக் கோபிக்கக் கூடாது"

ராஜன் என்னைப் பார்த்த பார்வை "உவன் ஆரைச் சுத்திறான்" என்றது.

என்னை ஓரமாய் கூட்டிக் கொண்டு போய்

"அவன் தனிப்பாவிப்பில வைச்சிருக்கிறான். இருபத்தைஞ்சுக்கு எடுப்பம்"

அவன் ஆயிரங்களை சுலபமாய் சொன்ன விதம் மனதுக்குள் ஏதோ செய்தது. விளைச்சலை நம்பி கடன் வாங்கி, விற்ற காசில கடனை அடைத்து.. மீதிப்பணத்தில் வாழ்க்கையை ஓட்ட சிரமப்படும் நானும்.. எனக்கு சேமிக்க தலைமுறைகள் ஆகின்ற தொகையை சில மாதங்களில் கரைக்க முயலும் இவனும்..

25 ஆயிரத்திற்கு சம்மதித்து 250 ரூபா அச்சவாரம் கொடுத்து வெளியே வந்து பைக்கில் ஏறும் போது ராஜன் சொன்னான்..

"மணிச் சாமானடா"

"ஓமோம், பைக்கலோ?"

"இல்லையடா, கனகசுந்தரத்தின்ரை மனிசி"

நீண்ட நேரமாய் றோட்டுக் கூட்டிக் கொண்டிருந்த பெண்களுக்கு நிறுத்தி தாங்ஸ் சொல்லி.. சனிக்கிழமை திருப்பி வருவம் என்று அனுவசியமாயும் சொல்ல.. இனியென்ன.. சனிக்கிழமை காலை தொடக்கம் றோட் கூட்டும் படலம் நடக்கப் போகிறது.

"ஏன் மச்சான், போகுமட்டும் உந்த பைக்கிலை ஓடலாம் தானே"

"உது மச்சானின்ரை. ஏன் நமக்கு வம்பு. உழைக்கிறம். காசு வருகுது. பிறகென்ன? ஆக ஒரு இருபத்தைஞ்சு தானே"

நெஞ்சை சுண்டியிழுத்து சுரீர் என்றது.. எத்தனை பனி, வெயில் காய வேண்டும் இத்தனை பணத்தை நான் காண..

★ ★ ★

றீகல் தியேட்டரில் வழமையான அதே கூட்டம். "வயது வந்தவர்களுக்கு மட்டும்" என்ற அடிக்குறிப்பை ஈழநாட்டில் பார்த்து விட்டு தமது ஏக்கங்களை தீர்க்க வந்த இளைஞர் கூட்டம்..

"மச்சான் உங்க பார்.. யாழ்ப்பாணியளை.. சொந்தமாய் ஒண்டும் செயயேலாது.. மற்றவன் செய்யிறதை பாத்து ஆசையை தணிக்கிறதுக்கு வந்திருக்கினம்.. உந்தப் படம் நான் அங்க பார்த்தனான்.. அதில ஒண்டும் இல்லை. அவன் வயது வந்தவர்களுக்கு எண்டவுடன எச்சில் ஒழுக வந்திட்டினம்"..

ஓரிரு கிழவர்கள் ஓலைப் பை சகிதம் சுருட்டுப் புகை விட்டுக் கொண்டிருக்க.. பஸ் ஸ்ராண்டுக்கு வந்த கையோடு "இங்கிலிஸ் பட மெயின் அக்டர்களின்" சாகசம் காண வந்த கிராமப்புற இளைஞர்கள் வெள்ளை சாரம், றெதிலின் சேட்டுடன் நின்று வாசலில் கிடந்த போட்டோ காட்களில் அரைகுறை ஆடைகளுடன் இருந்த படங்களை பார்த்து தங்களை தயாராக்கிக் கொண்டனர்.

"யாழ்ப்பாணம் மாறவேயில்லை. மச்சான் உவங்களும் நாங்கள் முந்தி செய்த மாதிரி டியூட்டரிக்கு போறனெண்டிட்டு இங்கை வந்திருப்பாங்கள்"

நீண்ட காலத்தின் பின்னர் இவனது தயவில் றிசேர்வ்ட் சீட்கள் கிடைத்தன. மற்றவர்கள் வழமை போல, நாங்கள் முன்னர் ஆக்கிரமித்திருந்த முன் வரிசை ஆசனங்களை நிரப்பிக் கொண்டார்கள். மற்றவர்கள் சிரிக்கும் போது சிரித்தும் சண்டைக்காட்சிகளில் சுயமாக விசிலடித்தும் முன்னே இருந்த சிலர் பாத்திரங்களுடன் ஒன்றிக் கொண்டார்கள். படம் முடியும் போது மற்றவர்கள் கண்களில் படாதிருக்கவும், விரைவாக சைக்கிளை எடுத்து ஓடித்தப்பவுமாய் வாசல் ஓரங்களில் நின்றவாறே படத்தை ரசித்தனர் சிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்து பஸ் ஸ்ராண்டை நோக்கி புழுதி கிளப்ப இருண்டு போய் பஸ் ஸ்ராண்டின் நியோன் விளக்குகள் மனதைச் சிலிர்த்தன. லேக் வியூ ஹோட்டலில் நுழைந்து புரியாணி ஓடர் பண்ணி விட்டு, சர்வர் பெடியனின் காதில் கிசுகிசுக்க.. விஸ்கியோடு வந்தான்.

"நீ குடிக்கிறனியோடா?"

"இல்லே மச்சான்"

"நீ இன்னும் திருந்தேலே. இந்த யாழ்ப்பாணத்தான் மாதிரி கிணத்துத் தவளையாய் இருக்காதை. சேர்ந்து நீயும் அழியப் போருய்"

பிறிஸ்டல் பக்கட்டை உடைத்து நீட்ட சிரித்தேன். அவன் விஸ்கி மிடறை விழுங்கியபடி சுருளாய் புகை விட, அடி மனதில் ஏதுவோ நெருடியது.

நான் பள்ளி நாட்களில் கண்ட ராஜன் இல்லே இது. அசட்டுத்தனமாய் சத்தம்போட்டு அப்பாவியாய் திரிந்தவன் அவன். இவன் ஒருவேளே முதிர்ச்சி அடைய.. நான் தான் யாழ்ப்பாணத்தான் மாதிரி கிணற்றுத் தவளேயாக இருக்கிறேனே?

மெதுவாய் கண்கள் சிவக்க.. அடிக்கடி ஐஸே போட்டான்.

"மச்சான், நீ நான் எண்டு கதை.. ஐஸே எண்டு நீ சொல்ல ஒருமாதிரிக் கிடக்கு"

கோழிக்கால் ஒன்றைக் கடித்துக் கொண்டிருந்தவன் மெதுவாய் சிரித்தான். "சொறியடா"

காற்றுப் படப்பட அவனுக்கு மெதுவாய் ஏறியிருக்க வேண்டும்.

"மச்சான் மெதுவாய் ஓடு. பொலிஸ்காரன் பிடிச்சாப் பிரச்சனே"

துாஷணத்தில் பேச்சு வந்தது. பைக் ரேட்டில் கிடங்குகளுக்குள்ளால் ஏகிற..

"மச்சான், என்னே இதில இறக்கி விடு. நான் நடந்து போறனடா.."

"இல்லே. வீட்டை கொண்டுந்து விடுறன்"

"வேண்டாம்.. உங்க ஒழுங்கைக்குள்ள நாயள் விடாது"

கவனமாய் போய் சேர் என்றது கேட்டதோ என்னவோ, நின்ற நிலேயில் காலே ஊன்றி பைக்கை லாவகமாய் வெட்டித் திருப்பி வேகம் பிடித்தான். உந்த வெறியோட என்னண்டு போய்ச் சேரப் போருனே?

ஒழுங்கையில் இறங்கி நடக்கும் போது மனம் கனத்தது. வீட்டு வாசலில் கொண்டு வந்து விட்டாலும் அவன் போதையில் நிற்பதை வீட்டார் காண்பதற்கு மனம் ஒப்பவில்லே. ஒன்று அவன் மீதான மதிப்பு தகர்ந்து போகலாம். மற்றது இனிமேல் அவனது பைக்கில் பயணம் செய்யும் பாக்கியம் கிட்டாது போகலாம்.

★ ★ ★

சனிக்கிழமை கனகசுந்தரம் வீட்டுக்கு பஸ்ஸில் போக.. தெருக்கூட்டல் வேகமாய் நடந்தது. ராஜன் "சரோசா.. குப்பையா கொட்டுருய்... கொட்டு" என்று ஜோக்கடிக்க.. காத்திருந்தவர்கள் போல வெட்கப்பட்டு சிரித்துக் கொண்டார்கள். சில தலேகள் முற்றத்துக் கிணற்றடிகளிலிருந்து எட்டிப் பார்த்தன.

"பார் மச்சான். உந்தப் பெட்டையளே.. உவளவை இப்ப வரச் சொன்னுலும் வருவாளவை.. ஆனுல் தாய், தகப்பன், சமூகம் எண்டு தங்கட சந்தோசங்களே வைச்சு அமுக்கிக் கொண்டு இருக்கிருளவை.. இனியென்ன.. தாய் தகப்பன் தங்கட சந்தோசத்துக்காக ஆராவது மொட்டை விழுந்தவனேக் கட்டி வைக்க அதுகளின்ரை வாழ்க்கை இப்படியே போடும். உதுதான் மச்சான், எனக்கு யாழ்ப்பாணத்தானேக் கண்ணில காட்டேலாது"

ராஜன் தத்துவம் பேசினுன்.

"அப்பிடியில்லே மச்சான், வெள்ளேக்காரன் மாதிரி நாங்கள் திறந்து விட்டு திரியேலாதடா.. இது நாங்கள் வாழ்ந்த முறை. நீ ஏன் வெள்ளேக்காரனேப் பாத்திட்டு அதைக் கொப்பியடிக்க வேணும் எண்டிருய்"

"மச்சான், நீ இத்தனே வருசம் யாழ்ப்பாணத்தில இருக்கிருய். உனக்கு யாழ்ப்பாணத்தை தெரியாது. நான் வெளிநாட்டுக்கு போனவுடன தான் இவ்வளவு நாளும் நான் இருட்டுக்கை கிடந்திருக்கிறன் எண்டு தெரிஞ்சுது.. இங்க நாங்கள் எந்த அலுவல் எங்கட திருப்திக்காக செய்யிறம்.. உடுக்கிறது தொடங்கி, கலியாணம் செய்யிறது வரை மற்றவனே திருப்திப்படுத்தத்தானே.. சமூகம் எண்டு சொல்லிப் போட்டு தனிமனிசன்ரை விருப்பு வெறுப்புகளே மறுக்கிறது எவ்வளவு அநியாயம் சொல்லு பார்ப்பம்.. வெள்ளேயன் திறமெண்டு நான் சொல்ல வரேலே.. ஆனுல் அவன் எல்லாற்ரை உணர்ச்சியையும் மதிக்கிருன். அண்டைக்கு படம் பார்க்கேக்கை பாத்தியோ.. படம் பாக்க வந்தது முழுக்க பொடி கூட்டம். வந்த ரெண்டு கிழவனுகளேயும் நக்கல் பார்வை.. இந்த வயதிலேயும் வந்திட்டினம் எண்டு.. ஏன் வயது போனுல் அந்த கிழவனுகளுக்கு உணர்ச்சியில்லேயே. இவை என்னத்துக்கு வந்தவை. இவையும் அவளவையின்ரை நிர்வாணத்தைப் பாக்கத் தானே வந்தவங்கள்"

பாடசாலே நாட்களில் நடந்த அதே இன்ரலெக்சுவல் சம்பாஷணேகளே மீண்டும் நடத்துவதில் எழுந்த சந்தோசத்தை அனுபவிப்பதற்குள் கனகசுந்தரத்தின் வீடு வந்து விட்டது.

ராஜன் பைக் வாங்குவதை விட, கனகசுந்தரத்தின் மனேவியோடு பேசுவதில் அதிகம் அக்கறை காட்டினுன்.

"நீங்கள் சுண்டுக்குளியில படிச்சனீங்களோ?"

கனகசுந்தரம் பார்த்த பார்வை, தற்போதைக்கு சவுதிப் பயணத்தை அவன் ஒத்தி வைக்கக் கூடும் என்பதைக் காட்டியது. குசினி வாசலில் திரைச்சீலே அருகில் சாய்ந்திருந்தவளே கனகசுந்தரத்தின் பார்வை உள்ளே துரத்தியது. பைக்கோடு வெளியில் வரும் போது மனது பரிதாபப்பட்டது.

"இதுதான் பார்.. யாழ்ப்பாணம். அவளேக் கட்டிப் போட்டு ஒரு இடமும் கூட்டிக் கொண்டு போகாமல் அவர் அந்தப்புரத்தில வைச்சிருக்கிருர். அவருக்கு சமைக்கவும், படுக்கவும். உவங்களுக்கடா தங்களில சந்தேகம்.. அதுதான் தங்களே விட்டுட்டு ஓடியிடுவாள் எண்ட பயம்." மெதுவாய் முணுமுணுத்தான்.

"ஹை ஹனி" கூட்டிக் கொண்டிருந்த பெண்களிடம் நெருக்கமாக, அவர்கள் வெட்கத்துடன் அதை எதிர்பார்த்தவர்கள் போல சிரித்துக் கொண்டார்கள். அழகான பெண்ணேடு போன கிழவனே மறித்து மானிப்பாய்க்கு வழி கேட்டான். இடையில் பெண்ணேப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து "நீங்கள் மானிப்பாய் லேடீஸில படிச்சனீங்களோ?"

ஹொண்டாவின் வெள்ளி மட்காட்டில் புழுதி படிய அவன் வீட்டுக்கு போன போது இருட்டியிருந்தது. அவன் வீட்டு நாய் இரண்டு பேரையும் அன்னியர்களாக நினைத்து மாமரத்தின் கீழ் நின்று குரைத்தது. அவனது அம்மா "வாங்கோ பிள்ளையள்" என்றவாறு வரவேற்றாள். ஹோலில் மகன் வெளிநாட்டில் இருப்பதற்கான அறிகுறிகள்.. ஷோ கேஸில் பீங்கான்கள், கிளாஸ்கள், ரேடியோவின் நடுவில், வீதியில் நிறுத்தியிருந்த கார் வரிசைக்கு அருகில் ஜக்கட் ஒன்றை மாட்டியபடி ராஜன் போஸ் கொடுத்தபடி நின்றிருந்தான். போன புதிதில் எடுத்திருக்க வேண்டும். கதவுகளில் திரைச்சீலைகள் ஆடிக்கொண்டிருந்தன. நஷனல் பனசோனிக்கு இன் வண்ணில் பொனி எம்மின் ரஸ்புடின் மாயம் செய்து கொண்டிருந்தான். சுவரில் இவன் இம்முறை கொண்டு வந்திருக்கக்கூடிய போஸ்டரில்.. வெள்ளிப்பனி மலை, ஆறு, காடுகள்..

"தம்பி ரீ குடியும்"

"தாங்க்ஸ் அக்கா"

"நீர் முந்தி இவர் போக முன்னம் அடிக்கடி வருவீர். பிறகு எங்களை மறந்து போனீர்"

இவன் என்ற ஒற்றை விளிப்பு "இவராக" மாறியதற்கு அவன் கொண்டு வந்த சீதனக்காசு காரணமாய் இருக்கலாம்.

"எங்கயக்கா நேரம் கிடக்கு.. தோட்டத்திலயே நேரம் போயிடும்"

அக்கா இவன் கொழும்பில் வாங்கியிருக்கக் கூடிய டென்மார்க் பிஸ்கட்களை ட்ரேயில் வைத்து கொண்டு வந்தாள். இந்த பிஸ்கட்டுகளை நியூ மார்க்கட்டில் உள்ள பான்சி ஹவுஸ்களில் கண்டதன்பிறகு இப்போது தான் தொட்டுப் பார்க்கிறேன். ராஜன் சேட்டை வீசியெறிந்து விட்டு சிகரெட்டை தூக்க அக்கா ஆஷ் ட்ரேயை அருகில் நகர்த்தினாள். காலம்.. இவனது பொக்கட்டில் சிகரட் மணம் வீசியதற்காகவே கட்டி வைத்து அடித்த அப்பா முகத்தில் தெரிந்த அதிருப்தியை பலவந்தமாய் மறைத்துக் கொண்டு ராஜன் கொண்டு வந்திருந்த சுங்கானை வாயில் வைத்து "பப்"பிக் கொண்டிருந்தார்.

உள்ளே போன ராஜன் ஒரு "இம்போட்டட் சேட்டுடன்" வந்து கைக்குள் திணித்தான்.

"வேண்டாம் மச்சான்" எனக்கு வெட்கமாய், கூச்சமாய் இருந்தது.

★ ★ ★

"மச்சான், என்ரை ஜேர்மன் கார பிரெண்ட் ஒருத்தன் அடுத்த மாதம் வாறான்"

வரம்பில் நின்று வெறும் காலால் ஓடும் நீரை கிழித்து விளையாடியபடியே சொன்னான்.

"ருறிஸ்டாய் வாறானே.. அப்படி என்னடா இங்க கிடக்கு பாக்கிறதுக்கு.. கீரிமலையும், கசூவறினாவுமோ?"

அவன் சிரித்தான்.

"மச்சான், எனக்கொரு சாமான் வேணும்"

குரலைத் தணித்தபடியே கேட்டான்.

"என்னடா, கள்ளோ? பிரச்சனையில்லை. செல்லத்துரை மாமா மரத்தில தான் நிக்கிறார். சொன்னால் உதில தந்திட்டுப் போவார்"

"அதில்லையடா, மற்றது?"

"பனங்கள்ளெண்டா கொஞ்சம் உள்ளுக்க போக வேணும். வடலிப் பக்கம். என்னையும் நெடுக தனிப்பனைக் கள்ளு குடிக்க சொல்றதுகள். எனக்கெண்டா ருசி பிடிபடேலை"

"நீ மச்சான் இன்னும் மாறேலை. உலகம் பிடிபடேலை.. நீ இந்த யாழ்ப்பாணத்துக்க கிடந்த மாளப் போறாய். நான் என்னமோ கேட்கிறன். நீ என்னமோ சொல்றாய்?"

"அப்ப கசிப்போ? எங்கட ஊர் தானே கசிப்புக்கு பேர் போனது.. வா உன்னை கூட்டியிட்டு போறன்"

அவன் சிரித்தான்.

"நான் சொன்னது சரக்கு, மச்சான்"

எனக்கு ஒரு உறைத்தது

"என்ரை பிரெண்ட்க்கு தமிழ் பெட்டையளில ஒரு கிக்"

"ஏன் அவனும் தமிழ் படம் பாத்தவனே?"

"உந்த பொம்மை, பிலிமாலயாவைப் பாத்திட்டுத் தான்.. அதை விடு.. சொல்லன்ரா.. உனக்கேதும் சரக்குகளைத் தெரியுமோ?"

"என்ன மச்சான், யாழ்ப்பாணத்தில வந்து இதைக் கேக்கிறாய்? இங்க என்ன ரெட் லைட் ஏரியாவே இருக்கு. ஒருத்தி அப்படி போனாள் எண்டால் சமூகத்தில எவ்வளவு அவமானம் தெரியுமே? குடும்பப் பெட்டையள் ஒருத்தியும் உந்த வேலையளுக்கு போவாளவையோ?"

"நீ யாழ்ப்பாணத்துக்க கிடந்து தவளையாய் போனாய். இங்கை இவ்வளவு காலமும் இருக்கிற உனக்குத் தெரியாது. ஆனால் இங்க இருந்து வாறவங்கள் அங்க சொல்ற கதையள். இங்க நிறைய பெட்டையள் உப்படி இருக்கிறாளவையாம். உனக்குத் தெரியும் எண்டு வந்தால் நீ பண்பாடு கதைக்கிறாய்"

"அடே.. எனக்குத் தெரிஞ்சது அந்த சோடா மூடி தான்"

சோடாமூடி.. இது காரணப் பெயரா, அல்லது இடுகுறிப் பெயரா.. எனக்குத் தெரியாது. சோடா மூடி மாதிரி பெறுமதி இல்லாதவள் என்றா? அல்லது இருட்டிலே சோடாமூடியைப் பணம் என்று கொடுத்து ஏமாற்றி போன வித்துவான்கள் பற்றிய கதை உண்மை தானா? அல்லது சோடாமூடியைப் பிடுங்கியதும் வீரிட்டுப் பாயுமே சோடா, அதை அடக்கி வைக்கின்ற மூடி போல, ஆண்களின் உணர்ச்சிகளை வீரிட்டெழச் செய்பவள் என்று கவிதை நயத்துடன் யாராவது வைத்த பெயராக இருக்குமோ?

கறுத்துப் போன பற்கள். அழுக்குப் படிந்த சேலை. ஸ்பிறிங் பூட்டிய மாதிரி பக்க வாட்டில் ஆடும் தலை. அதில் தொங்கும் குடுமி. காலை நிலத்தோடு தேய்த்து நடக்கும் போதே வாயிலிருந்து தூஷணம் சாவகாசமாய் பறக்கும்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் தோடம்பழக்காரர்கள், கடலைக்காரர்கள், டாக்ஸிக்காரர்களோடு அன்னியோன்னியமாய் மரத்தின் கீழ் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு நெருக்கம் தெரியும். அருகால் போய் காதுக்குள் "மூடி" என்று கத்தி விட்டு அவளது பதிற்கணைகளைக் கேட்பதற்கு முன்னால் வேகமாய் சைக்கிளை மிதிக்கும் மாணவ கூட்டம்.. விசயம் தெரியாமல் மூடி என்று கூப்பிட்டு "உங்கட கொப்பர் மாரும் என்னட்டத் தானே வாறவனுகள்" என்று பஸ் ஸ்ராண்ட் வரை பேச்சும் கல்லெறியும் வாங்கி வரும் வேம்படி மாணவிகள்.

இவளோடு உறவு கொள்பவர்கள் ஒன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணநுகர்ச்சி சோலைகள் செயலிழந்தவர்களாக.. உயிரியல் படித்த பாதிப்பு.. அல்லது வேறிடங்களில் அதை அறவே பெற முடியாதவர்களாக இருக்க வேண்டும் என்பதான் என் அபிப்பிராயம்.

"பஸ் ஸ்ராண்டிலே முட்டை தூக்கிறவங்கள் தான் ஐஞ்சாறு ரூபாய்க்கு உவளிட்ட போறவங்கள்" என்பது பள்ளி நாட்களில் ஜெயந்தனின் முடிவு.

என்னடா, சத்தத்தை காணேலை.. சிந்தனையை ராஜன் கலைத்தான்.

"ஊருக்க இதெல்லாம் எங்கயடா கிடக்கு? அப்பிடியெண்டால் பஸ் ஸ்ராண்ட் பக்கம் தான் போக வேணும்"

"உன்னட்டை கேட்ட எனக்குத் தான் செருப்பாலே அடிக்க வேணும்.. சோடா மூடி மாதிரி ஆக்களிட்டை போய் என்ன நசலே வாங்கிக் கொண்டு வாறதே.. உனக்கு இன்னமும் உலகம் பிடிபடேலை மச்சான்"

"எனக்குத் தெரிஞ்ச அந்த மாதிரிப் பெம்பிளை அவள்தான். எங்கட யாழ்ப்பாணத்துப் பெம்பிளையள் சமூகத்துக்கு பயந்ததுகள். அதுகள் உந்த மாதிரி எளிய வேலையள் செய்யாதுகள். முந்தி ஈழநாட்டிலே பாக்கிறனீ தானே.. பஸ் நிலையத்தில் இரவுராணிகள் தொல்லை, கிளிநொச்சியைச் சேர்ந்த அன்னக்கிளி, சின்னக்கிளி கைது எண்டு வரும். அந்த தோட்டக்காட்டில இருந்து வந்த சனம் தான் கஷ்டத்தில உங்கினேக்கை வந்து உதுகள் செய்யிறது"

"உதுகள் ஐஞ்சு பத்து ரூபாய்க்கு போறதுகளடா.. எனக்குத் தேவை கொஞ்சம் ஸ்ராண்டட்டா!"

"அது சரி.. எப்ப வாறான் உன்ரை ஆள்"

"ரெண்டு கிழமை இருக்கு"

"அதுக்கிடையில தேடிப் பாப்பம்"

பேச்சுக்குத்தான் சொல்ல முடிந்தது. யாரிடம்போய் கேட்க முடியும்? கொஞ்சம் படிச்ச பெடியன் என்ற மதிப்பு வேறு ஊருக்குள். இந்த லட்சணத்தில் விபசாரியைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்று எப்படி, யாரிடம் கேட்பது? இங்கே பழம் திண்டு கொட்டை போட்டு, கோவில் முன்றிலில் நின்று தங்கள் காமலீலைகளைச் சொல்பவர்கள் எல்லாம் இந்த கிளிநொச்சி இரவு ராணிகளைக் கூட்டி வந்து பள்ளிக்கூடங்களுக்குள் வைத்து சரசம் புரிந்தவர்கள் தான்... அதுவும் கடைச் சாப்பாடும் கைச்செலவுக்கு காசும் கொடுத்து..

பிள்ளையோடு வந்த பெண்ணை.. பிள்ளையை மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்க.. ஆள் மாறிப் போய் உறவு கொண்டதை பெருமையாய் சொல்லிச் சிரிக்கும் போது எனக்கு உள்ளூர குமட்டிக் கொண்டு வரும்.. மிருகப் பிறவிகள்.

"அவன் ரெண்டு கிழமை நிற்பான். அவனோடை அவ்வளவு நாளும் திரிய வேணும்"

"அப்ப அவன் இடம் பார்க்க வரேலை. உதுக்குத் தான் மினக்கெட்டு வாறான்"

"உனக்கு அதின்ரை ருசி தெரியாது மச்சான். அங்க இருக்கிறாளவை ஹம்பேர்க்கில செண் போலி எண்ட இடத்தில பெரிய ரெட் லைட் ஏரியா. எல்லா நாட்டுப் பெட்டையளும் இருக்கிறாளவை"

"எங்கட பெட்டையளுமோ?"

"சீ. பிறீமர் ஹாவனில இந்தியன் தமிழ் பெட்டை ஒருத்தி இருக்கிறாள். அவளுக்கு இடியப்பம் தின்ன ஆசை எண்டு அவிச்சுக் கொண்டு போய் குடுத்தனுங்கள்"

"ரெட் லைட் ஏரியா எண்டால் புஷ்பா தங்கத்துரையின்ரை 'சிவப்பு விளக்கு எரிகின்றது' புத்தகத்தில வந்த மாதிரியோ?"

"உனக்கு ஞாபகமிருக்கோடா. அவன் வசந்தன் தான் அந்தப் புத்தகம் கிளாசுக்கு கொண்டு வந்தவன். அவன் இப்ப எங்கயடா?"

"நோர்வேயில இருக்கிறான். அந்தப் பெட்டையோட கதைச்சனியோ? ஏன் உப்பிடி வேலை செய்யிறாள் எண்டு. . ஆரும் கடத்திக் கொண்டு வந்திருப்பாளவை. அவள் தப்பி போக நீ உதவி செய்திருக்கலாமே"

"மச்சான், நான் என்ன புத்தகம் எழுதவே போனனான். போனமா, விசயத்தை முடிச்சமா எண்டு வந்திட்டன்"

"உப்பிடித் திரிஞ்சால் கண்ட கண்ட வருத்தம் அல்லே வந்திடும்"

"வராது மச்சான், அவளவையிட்ட போனால் கேப்பாளவை .. மிற் கும்மி ஓடர் ஓனே கும்மி எண்டு"

"அது எண்டா"

"றப்பரோடயோ? றப்பர் இல்லாமலோ? நான் எப்பவும் மிற் கும்மி தான். வருத்தத்தை வாங்கிப் போட்டு ஆர் கஷ்டப்படுறது"

"அங்க பொலிஸ் அவளவையை பிடிக்கிறேலையோ?"

"அது அவளவன்ரை ஏரியா. சட்டப்படி விடுறுங்கள். உள்ளுக்கை ஒண்டும் போடாமல் ஓவர் கோட்டோட நிண்டு போற வாற ஆக்களுக்கு திறந்து காட்டி வரச் சொல்லுவாளுகள்."

"சீ.. ரெட் லைட் ஏரியா எண்டால் எல்லா இடமும் ரெட் லைட் போட்டிருக்குமோ?"

"நீ மச்சான் சரியான டியூப் லைட். அப்பிடி அங்க ஒண்டும் இல்லை. அங்க ஒரு றோட் இருக்கு. ஜன்னல் கரையில அந்த மாதிரி எல்லாத்தையும் காட்டிக் கொண்டு இருப்பாளவை. நாங்கள் போய் பார்த்து பிடிச்சு விலை பேசி உள்ளுக்க போக வேண்டியதுதான்"

"நீ நெடுக போறனீ போல"

"சீ.. போன புதிசில போனனான். பிறகு ஜேர்மன் பெட்டையளோட பழக்கம் பிடிச்சிட்டன். பிறகு என்னத்துக்கு? அது சரி. உன்ரை எக்ஸ்பீரியன்ஸ் என்ன மாதிரி?"

"ஓ.. இப்ப அது ஒண்டு தான் இல்லாத குறை"

"மச்சான், தமிழீழம் வந்தால் ஜேர்மன் மாதிரி ஒரு ரெட் லைட் ஏரியா திறக்க வேணும் ஆசையள மனதுல அடக்கிக் கொண்டு மனிசன் வாழப்படாது. இங்க பார்.. எல்லாத்தையும் மூடிப் போட்டு மனதுக்குள் குமைஞ்சு கொண்டு சனம் இருக்கு.. பொடியளைப் பார்த்தால் பெட்டையளைக் கண்டவுடன அவங்களுக்கு கெட்ட எண்ணம் தான் மனதுக்க வருகுது.. அதுக்கெல்லாம் என்ன காரணம்.. சைஸ யாழ்ப்பாணம்"

"அதென்னடா, சைஸ"

"அதெண்டா சனியன். இந்த பரதேசி வாறான். அதுக்கிடையில செற் பண்ண வேணுமே?"

"முந்தி உங்க பெடியள் படம் முடிஞ்சு வரேக்கை கூட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து பள்ளிக்கூடத்துக்க செய்யிறவங்கள்"

"அதுகள் சீப் மச்சான்"

"என்னண்டு தான் இவ்வளவு பேர் ஒருத்தியோட..?"

"மச்சான் ஆத்தில போறதை அண்ணை குடி, தம்பி குடி.. பிறகு மற்றவன் கை வைச்சதெண்டு பாக்க இதென்ன.. அணில் கடிச்ச பழம் தான்ரா ருசிக்கும்"

"அப்ப கலியாணம் செய்யேக்கையும் அப்படி யோசிப்பியோ?"

"எனக்கு உதெல்லாம் பிரச்சனையில்லை. நான் உந்த யாழ்ப்பாணி மாதிரி இல்லை. என்னோட வந்தாப் பிறகு ஒழுங்கா இருந்தாச் சரி. அவள் கற்போட இருக்க வேணும் எண்டு நினைச்சால் நானும் அப்படி இருந்திருக்க வேணும். எனக்கு அப்பிடி இருக்கேலாமல் போச்சு. பிறகு எப்பிடி நான் அதை அவளிட்டை எதிர்பார்க்கிறது?"

★ ★ ★

ஜேர்மன்காரன் வர ஒரு கிழமை இருந்தது. காலையில் வந்து என்னைக் கூட்டிப் போனால் எங்கள் வாழ்க்கை பஸ் ஸ்ராண்டில் தான். தியேட்டர்களில் பல்கனியில் உட்கார்ந்து படம். பாடசாலை நாட்களில் உண்டியல் குலுக்கி, காசு சேர்த்து கலரியில் சேட்டைக் கழற்றி வைத்து பக்கத்திலிருப்பவனின் வெற்றிலைத் துப்பலுக்கு இடையில் படம் பார்க்கும் கஷ்டம் இல்லை. தமிழ் படங்களுக்கு போனால்.. தாய், தந்தையுடன் வரும் பெண்கள் பார்வைகளை வீச.. செக்கண்ட் கிளாசில் இருக்கும் வட்டங்கள் பொருமையுடன் எங்களைப் பார்க்க..படம் முடிந்து பைக்கை எடுக்கும் போது சைக்கிளில் வந்த கூட்டம் எரிச்சலோடு பார்க்கும்.

சுபாஸ் கபேயில் புரியாணி.. முதன் முதலாக நான் புரியாணி சாப்பிட்டது இங்கே..இவன் தயவில்தான். அவனுக்கு குடிக்கத் தோன்றினால் ஹோட்டல் பரடைஸ்.. உடுப்புத் தோய்க்கும் வண்ணான் குளத்தைப் பார்த்தபடி நிற்கும் லேக் வியூ ஹோட்டல்.. என்ன பொருத்தமான பெயர். டீ பார்களில் டீ, சர்பத்.. ஒரு சுற்றுப் பருத்த உணர்வு.

★ ★ ★

அடுத்த கிழமைகளில் ஹொண்டா யாழ்ப்பாணத் தெருக்களில் கூவியது.. கசுவரைனா பீச்..

"மச்சான், எனக்கு நீந்தத் தெரியாதடா.."

"நல்லது, கரையில இருந்து சிப்பி பொறுக்கு" அவன் சற்று தள்ளி நின்ற பெண்களுக்குள் தன்னை நுழைத்துக் கொண்டான்.

கீரிமலை, கூவில் கள்ளு..

"மச்சான், முந்தி இங்க செல்வநாதனோட வாறவன் அவன் இப்ப எங்கயடா"

"பிரான்ஸிலயாம்".

ஒரு மாதிரியாக, பஸ் ஸ்ராண்டின் பக்கத்தில் கமல் ரஜனியின் படத்தைக் கீறிப் பழகிய யாரோ ஒருவன் எழுதிய சைன் போர்டின் கீழ் ஒற்றை அறையில் டீயும் சோட் ஈற்ஸ் உம் விற்கும் கோப்பி பாரில் அழுக்கான சாரத்தை மடித்துக் கட்டி மேசைகளைக் கவனிக்கும் பையனுடன் வலிந்து சிரித்து அறிமுகமானேம். விட்டுச் சென்ற சில்லறைகளுக்கு அவன் நன்றியுடையவனாய் இருந்தான்.

மெதுவாய் அவன் காதுக்குள் ராஜன் கிசுகிசுக்க.. நெற்றியைச் சுருக்கிய பையன் அங்குமிங்கும் பார்த்து விட்டு "நியூ மார்க்கற்றுக்க ரெண்டு பேர் நிப்பினம். உங்க பெடியள் அவையைக் கூட்டிக் கொண்டு படத்துக்கெல்லாம் போறவங்கள்" என்றான். தணிந்த குரலில் "எங்கட பிரெண்ட் ஒருத்தன் ஜேர்மனியிலிருந்து வாறான். அவனுக்குத் தான்" என்று நான் சொல்ல.. பையன் பார்த்த பார்வை "உப்படித்தான் எல்லாருக்கும் எங்களுக்கு விடுறவை" என்று சொன்னது.

நியூ மார்க்கட்டின் றெக்கோடிங் பாரில் ஒலித்த பாடல்களைக் கேட்டுக் கொண்டே கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த ஜப்பானிய கமெராக்களையும் ஓடியோ டெக்குகளையும் "வாய் பார்த்துக்" கொண்டிருந்தது கொப்பிகளுடன் நின்ற இளம் கூட்டம். அப்பால் நடமாடி விடுப்புப் பார்க்க.. படிகளில் இரண்டு பெண்கள். பளிச்சிடும் கலரில் சேலையுடுத்தி உட்கார்ந்திருந்தார்கள். நட்பு நாடிச் சிரிக்க.. இடைவெளி விழுந்த பற்கள் அசிங்கமாயிருந்தன.

"படத்துக்குப் போறியளோ?" ஒருத்தி கீச்சிட்ட குரலில் கேட்க, "மச்சான், மரியாதையில்லை, போவமடா"

"அட, அந்த விசரன் உதுகளையோ சொன்னவன். உதுகளைப் படத்துக்கு கூட்டிக் கொண்டு போய் என்ன பரிநாசம் செய்யிறுங்களோ? யாழ்ப்பாணத்தான் திருந்த மாட்டானடா"

ராஜன் தீர்ப்பு வழங்கினான்.

தன் முயற்சியில் சிறிதும் தளராத ராஜன் வெளியே வந்து சுபாஸ் கபேயின் முன்பாக நின்ற மோட்டார் சைக்கிளில் ஏறிக் குந்தி.. அருகில் நின்ற டாக்ஸிக்காரனிடம் பேச்சுக் கொடுத்தான். நைஸாக "555" ஐ நீட்ட, அவன் பவ்யமாக கைகளைக் கட்டாத குறையாக "தம்பி, வெளிநாட்டிலயிருந்து வந்திருக்கிறியள் போல".. ராஜன் அலட்சியமாக "இங்கிலண்டில இருந்து" அடப்பாவி. . தன் பெருமையை ஏன் குறைக்க வேண்டும் என்ற எண்ணமோ?

"அண்ணை, எங்களுக்கு ஒரு பெட்டை வேணும்"

ராஜன் நேரடியாக விசயத்துக்கு வந்தான்.

"எங்களுக்கெண்டா, எங்களுக்கில்லை. எங்கட பிரெண்ட் ஜேர்மனியில இருந்து வாறான். அவனுக்கு"

இது நான் இதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று காட்ட எடுத்த முயற்சி.

"கரையூருக்க ஒண்டு இருக்கு"

டாக்ஸி மீட்டர் ஓடும் வேகத்தில் அவன் பேசிக் கொண்டிருந்தான். தாய், மகள்.. இரண்டு பேரும் தொழில். பெண்ணுக்கு கணவன் உண்டு. லொறி ட்ரைவர்.. அடிக்கடி கொழும்பு பயணம். இவள் தாசன் அம்மணமாய் சுத்திச் கொண்டிருந்த குழந்தைகளை விலத்திக் கொண்டு டாக்ஸி ஒழுங்கைக்குள் இறங்க.. மதில் ஓரங்களில் தலைகள் விடுப்புப் பார்த்தன. தகரப்படலையைத் தள்ளி உள்ளே நுழைய.. உள்ளே பெரும் போர் நடந்து கொண்டிருந்தது. வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்து இரண்டு பெண்கள் கூச்சல் போட. மறுபக்கத்தில் ஓலை வீடு ஒன்றுக்குள் இருந்து ஒரு பெண்ணின் குரல் பலமாய் கேட்டது. அவள் வேலி ஓரத்தில் நின்று நேருக்கு நேர் பொருதாமல் குசினிக்குள் சமைத்துக் கொண்டே தனது போரைத் தொடர்ந்திருக்க வேண்டும். நாங்கள் ஆரோடயும் படுப்பம். உனக்கென்னடி செய்யுது?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போங்கடி. எளிய தூமையள். வருத்தம் வந்தல்லேடி சாகப் போறியள்"

"ஏனடி, உன்ரை மனிசனை நாங்கள் பிடிச்சனுங்களே?"

எனக்கு உடம்பு கூசியது. தெருவில் சண்டையை வேடிக்கை பார்க்கும் சனக்கூட்டம்.. இதற்குள் நாங்கள் மாட்டுப்பட்டு விட்டோம். எனக்கு நிமிர்ந்து பார்க்கவே விருப்பமில்லாதிருந்தது.

"என்ன மச்சான், இந்த நரகத்துக்குள்ள கொண்டு வந்திட்டாய்"

ராஜன் எதுவும் சொல்லாமல் பரிதாபமாய் பார்த்தான். டாக்ஸிக்காரனைக் கண்டதும் அவர்கள் யுத்த முனையிலிருந்து பின்வாங்கினர். மழைவிட்டது போலிருந்தது. இது தினசரி சண்டை போலிருக்கிறது. மீன் மணம் குமட்டிக் கொண்டு வந்தது. சண்டை வரும் போதெல்லாம் அஸ்திரங்களாக மீன் கழுவிய நீர் தான் வேலிக்கு மேலால் வீசப்பட்டிருக்க வேண்டும்.

டாக்ஸிக்காரன் நெருக்கமாய் போய் கிசுகிசுக்க.. வாங்கோ தம்பியவை.. தாயாக இருக்க வேண்டும். மற்றவள் வலிந்து வெட்கப்பட்டு சிரித்தாள்.

"போங்கோடி உங்கட கள்ளப்புருசன்மார் வந்திருக்கினம்" இது எங்களைத் தான். பக்கத்து வீட்டுக்காரியின் குரலில் பெருமிதம் தெரிந்தது.

ராஜன் மெதுவாக டாக்ஸிக்காரனை அழைத்து காதில் "அண்ணை, உது சரிப்பட்டு வராது" என்றபடி வெளியே வந்தான். உள்ளே சொல்லி வரப் போன டாக்ஸிக்காரனுக்கு தாறுமாறாய் பேசும் சத்தம் கேட்டது "வந்திட்டானுகள் காற்சட்டை மாட்டிக் கொண்டு" இப்போது எங்களுக்கு நடக்கிறது. டாக்ஸிக்குள் ஏறி இருந்த எனக்கு தலையை தூக்கி, சுற்றி வர வேலிகளின் மேலால் தெரியும் தலைகளை பார்க்கும் தைரியம் வரவில்லை.

டாக்ஸிக்காரன் அவர்களை பதிலுக்குத் திட்டிக் கொண்டே "தம்பியவை, பயப்படாதையுங்கோ. நான் உங்களுக்கு நல்ல இடத்தில பிடிச்சுத் தாறன்". அவன் சொன்னதில் எங்களுக்கு ஆறுதல் சொல்லும் நோக்கம் இருந்ததா, கிடைக்க இருந்த தரகுப் பணத்தை நழுவ விடக் கூடாது என்ற நோக்கம் இருந்ததா என்பதை ஆராய்ச்சி செய்யும் மனநிலையில் நான் இருக்கவில்லை.

இறங்கும் போது "சதாசிவம் எண்டு கேட்டால் என்னைக் காட்டுவினம்" என்று அடையாளமும் சொன்னான்.

மனதில் அடக்கிக் கொண்டிருந்த கோபத்தை எப்போ வெளிக்காட்டுவோம் என்றிருந்தது.

"என்ன வேலை பார்க்கிறாய்? உங்கயெல்லாம் நான் வந்து இழுபடுறன்"

"சொறி மச்சான், எனக்கு நீ ஒருத்தன் தான் சினேகிதன் எண்டு இருக்கிறாய். எனக்கும் தெரியாது. தெரிஞ்சிருந்தால் உன்னைக் கூட்டிக் கொண்டு போயிருக்க மாட்டன்"

வீட்டில் பைக்கில் கொண்டு வந்து விடுவதாகச் சொன்ன ராஜனிடம் கேளாமல் பஸ்ஸிலேயே வீட்டிற்கு புறப்பட்டேன். என்ன வாழ்க்கை இது? பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில ஏற வேண்டும் என்ற மாதிரி.. இவனிடம் உதவி கேட்கப் போய்.. இந்த அசிங்கங்களுக்கு எல்லாம் இழுபட வேண்டியிருக்கிறது. ஏதோ மாமா வேலை பார்க்கிறவன் மாதிரி.. யாரோ ஒருத்தன் வருகிறான்.. அவனுக்காக நாங்கள் பெண்கள் தேடி அலைய வேண்டிய இருக்கிறது. இவன் அங்கே போன போது அவன் வஞ்சகமில்லாமல் உதவி செய்திருப்பான். அந்த நன்றிக்கடனைத் தீர்க்க.. நீ ஊருக்கு வா என்று அழைப்பும் விடுத்து புழுகியிருப்பான். இப்போ நான்.. சே.. எனக்கு வெட்கமாயிருந்தது. இன்னொருவனிடம் உதவி கேட்கப் போனாலே இதுதான் பிரச்சனை. தன்மானத்தை அடகு வைக்க வேண்டியிருக்கிறது. பேசாமல் எங்காவது தொலைந்து போனால் என்ன என்று தோன்றியது. மச்சான், நான் இங்கே வேலை தேடப் போறன் என்று சொல்லி விட்டு காய் வெட்டிக் கொள்ளலாம் போலிருக்கிறது.

ஆனால் இங்கே இருந்து என்ன தான் செய்ய போகிறேன்? இதே தோட்டம், இதே புகையிலை.. இல்லாவிட்டால் கத்தரி.. அல்லாது போனால் உருளைக் கிழங்கு.. ஒவ்வொரு போகம் வரும். விளைச்சல் விற்பனையாகும். கடன் கொடுத்து முடிய.. மீண்டும் பயிர் செய்ய இன்னொரு கடன்.. இந்த நரகத்திலிருந்து புறப்பட வேண்டும் என்றால்.. எத்தனை நரகத்தை தாண்ட வேண்டியிருக்கிறது?

இரவு நித்திரையே வரவில்லை. எனக்கும் பெண் சகோதரிகள் இருக்கிறார்கள். இருந்தும் நான் இப்போது யாரோ ஒருவனின் சகோதரியை முகம் தெரியாத ஒருவனுடைய சந்தோசத்துக்காக விலை பேசிக் கொண்டிருக்கிறேன். யோசித்துப் பார்க்க இதுவும் பரவாயில்லை போலிருக்கிறது. அக்காமாரைத் திருமணம் செய்து கொடுக்க எத்தனை கஷ்டப்பட வேண்டியிருந்தது. தங்கள் திருமணத்திற்காக என்றே சீதனம் சேர்ப்பதற்கு தோட்டங்களில் புல் பிடுங்கி, கூலி வேலை செய்து சீட்டுக்கட்டி எவ்வளவு கஷ்டப்பட வேண்டி வந்தது. சேர்த்த பணத்தை வந்தவனுக்கு கொடுக்க.. அது கூட ஒருவகையில் விபசாரம் தானே. படிப்பதற்காக ஆணுக்கு ஆயிரக்கணக்கில் கொடுக்கிறோம்.. யாழ்ப்பாணத்தில் இந்த விபசாரத்திற்காகத் தானே எல்லாரும் படிக்கிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். ஒன்றில் கொடுப்பதற்காக அல்லது வாங்குவதற்காக!

இன்று விபசாரம் செய்யும் பெண்களும் இப்படியாக சீதனப் பிரச்சனைக்காகத் தான் இப்படி மாறினார்களோ? மனம் குழப்பமாயிருந்தது.

★ ★ ★

மறுநாள் ராஜன் வந்தான்.

"மச்சான், சரியான இடம் ஒண்டு அம்பிட்டிருக்கு"

ஆஸ்பத்திரிக்குள் போனால் நினைச்ச மாதிரி கிடைக்குமாம். நேர்ஸ்மார், அட்டெண்டண்ட்மார் எல்லாம் அதில் அடக்கமாம். நைட் ஷிப்ட் என்று தொழில் நடக்கிறதாம். ஒவ்வொரு விலையில், ஒவ்வொரு வயதில் இருக்காம்.

ஓ.பி.டிக்குள் போகுமுன் கண்கள் சோடாமூடியைத் தேடின. ஆளைக் காணேம்.. எங்கே போயிருப்பாள்? செத்துப் போனாளோ? பாவம். இரவுகளில் அவளைத் தேடி விட்டு பகலில் காறித் துப்பிய கூட்டம் அவளை சுமக்கும் நாலு பேராய் நின்றிருக்குமோ? என்னவோ, இந்த யாழ்ப்பாணத்தை விட, அதிலே தோடம்பழம் விற்றவர்களும் முட்டை தூக்கியவர்களும் மேலானவர்கள்.

இவளை விட பஸ் ஸ்ராண்டில் குழந்தைகளைக் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சை எடுத்துக் கொண்டிருந்த அந்தப் பெண்கள் எங்கே போனார்கள்.. அந்தப் பெண்களுக்கும் பிள்ளையைக் கொடுத்து விட்டு மறைந்ததும் இந்த யாழ்ப்பாணத்தின் வாரிசுகள் தானே.

ஓ.பி.டிக்குள் நாலு பக்கமும் நடைபோட ஒருத்தி வந்தாள். கண்ணுக்கு கறுப்பாய் மை பூசி.. முகத்தில் அப்பிக் கிடந்த பொன்ட்ஸ் பவுடர் வியர்வையில் ஒட்டி வழிந்திருந்தது. அருகில் வர சென்ட் வாசனை கமகமத்தது. . அட.. இவள்? எங்கள் பக்கத்து ஊரவள்.. இவளது தந்தை எங்கள் தோட்டங்களில் தன் மாட்டுக்கு புல் பிடுங்க வருபவர். இவளா இப்படி? இரண்டு பிள்ளைகள்.. புருசனை எனக்குத் தெரியாது. காலையில் எட்டு மணிக்கு பள்ளிக்கூட பஸ்ஸில் போகும் நேரங்களில் ஏதோ வேலைக்கு போற மாதிரி வெளிக்கிட்டு வருவாளே.. சீனிவாசகத்தாரிடம் அவளது தகப்பன் தன் மகள் ஆஸ்பத்திரியில் நோயாளிகளை சம்பளத்திற்காக கவனிப்பதாக சொன்ன ஞாபகம். நல்ல காலம் அவளுக்கு என்னைத் தெரிந்திருக்க நியாயமில்லை. இவள் ஏன் இப்படி ஆனாள்?

நாங்கள் நின்ற இடத்திற்கு பக்கத்தில் "மயிந்திக்" கொண்டு எங்களைப் பார்த்தபடியே நின்று "ஆரையோ தேடுறியள் போல".. ராஜன் எதுவுமே பேசாமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"வெக்கப்படுறியள் போல" அவள் மௌனத்தை உடைக்க.

.

"நாங்கள் சரோ அக்காவைத் தேடுறம்" அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

"அவவும் எங்கட ஆள் தான்". எனக்கு கஷ்டமாய் இருந்தது. ஆஸ்பத்திரிக்கு ஆட்களைப் பார்க்க வரும் நம்ம ஊர்க்காரர்கள் கண்டால்... போச்சு..

"ஏன் அவவிட்ட போறியள்? என்னட்டையும் நல்ல ஆக்கள் இருக்கினம். காசும் குறைவு"

ராஜன் அவளைக் காய் வெட்டிக் கொண்டே நகர்ந்தான்.

சரோ அக்கா சிவப்பாக இருந்தாள். வயது நாற்பத்தைந்து இருக்கலாம். சத்தம் போட்டு வார்டுகளின் ஊடாக நடந்து திரிந்தாள். அவளைக் கண்டதும் பலர் அடக்க ஒடுக்கமானார்கள். அவளின் வாய்க்கு அப்படி ஒரு பயம் போலும். மெதுவாக ராஜன் "சரோ அக்கா, நீங்கள் தானே" "ஓமோம்"

"என்னை ராசலிங்கம் அனுப்பி விட்டவர்"

மெதுவாக எங்களை தனது அலுவலகப் பக்கம் நகர்த்திச் சென்றாள். ராஜலிங்கம், ராஜனின் ஊரைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும், இதற்குள் எங்களைப் பற்றி எங்கோ அறிமுகம் செய்திருக்க வேண்டும். எங்களை ஏற்கனவே தெரிந்து கொண்ட மாதிரி..

"என்னட்ட இங்க கன பெட்டையள் இருக்கிறாளவை. நீங்கள் என்ன எதிர்பாக்கிறீங்கள்"

"ஒரு இருபது இருபத்தைஞ்சுக்குள்ள எண்டால் நல்லது. எங்களுக்கு அடுத்த கிழமை வேணும்" ராஜன் எதிர்பார்ப்பைச் சொன்னான்.

சரோ அக்கா திடீரென்று ஜன்னலுக்குள்ளால் ஒரு நர்ஸைக் கூப்பிட்டாள்.

"என்னக்கா" வெள்ளை உடுப்பில் தளதளத்திருந்தாள். மூக்குத்தி வேறு இருந்தது. எங்கள் முகத்தைப் பார்ப்பதை தவிர்ப்பதை உணரக் கூடியதாக இருந்தது. அக்கா அவளை பச்சைத் துணிகளால் அடைக்கப்பட்டிருந்த பிரேம்களின் பின்னால் கூட்டிச் சென்று கிசுகிசுத்தாள். இருவரும் வெளியே வந்த போது நர்ஸ் குனிந்த தலையுடன் வெளியே போனாள்.

"அவள் இந்தக் கிழமை வீட்டை போறாளாம். இருங்கோ. நான் மற்ற ஆக்களை விசாரிக்கிறன்" அவளின் பின்னால் நாங்கள் போக, கட்டிலில் இருந்தவர்கள் பார்த்த பார்வைகள் குத்தின.

வெள்ளை சட்டைகளில் இருந்த நர்ஸ்மார், வெள்ளைச் சேலையில் நீல நிறக் கோட்டுக் கரைகள் உடுத்திய அட்டெண்டண்ட்மார்.. மெலிந்து, கண்களில் ஏதோ சோகம் காட்டி நின்றார்கள். குடும்பக் கஷ்டமோ? அல்லது இரவு வேலைகளில் ஆண்களுடன் தங்கி வேலை செய்வதால் ஏற்பட்ட நிர்ப்பந்தமோ? ஏன் இவர்களால் எனது ஊர்ப் பெண்கள் போல, கூலி வேலை செய்தென்றாலும் மானத்தோடு சீதனம் சேர்க்க முடியவில்லை. தங்களுக்கு கணவனாய் வரப் போகிறவனுக்காக பணம் கொடுக்கின்ற அவர்களால் முடியும் என்றால் இவர்களுக்கு ஏன் முடியாதிருக்கிறது? ஒருவேளை அவர்கள் ஊரை விட்டு போக முடியாததால் கண்காணிப்புகளுக்குள்ளாவதால் தவறிப் போக சந்தர்ப்பங்கள் இல்லாது போயிருக்கலாம். இவர்கள் கண்காணிப்புகளை மீறி தனியே வந்திருப்பதால் தொடர்புகள் அறுந்து சுதந்திரம் கிடைத்திருக்கலாம். குடும்பத்தினரும் வருமானத்தை நினைத்து கண்டும் காணாமலும் இருந்திருக்கலாம். கூட இருந்தவர்களின் அழுத்தம் கூட இதை ஊக்குவித்திருக்கக் கூடும். மனதுக்குள் என்னவோ செய்தது.

சரோ அக்கா போய் கதைத்த பெண்கள் எல்லாம் எங்களை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே கதைக்க.. சரோ அக்கா எங்களைப் பார்த்த பார்வைகள் அந்தப் பெண்களின் முடிவைச் சொல்லி நின்றன. தங்களை நாங்கள் முழுமையாக அடையாளம் காணக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தது தெரிந்தது. ரவுண்ட் முடித்து வந்த சரோ அக்கா "மூண்டு பேர் ஓம் எண்டிருக்கிறாளவை" என்று அறிவித்தாள்.

"அக்கா, எங்களுக்கு இல்லை, எங்கட பிரெண்ட் ஒருத்தன் ஜேர்மனியிலிருந்து வாறான், அவனுக்கு"

இடையில் குறுக்கிட்ட என்னை அவள் பார்த்த பார்வை என்னவோ செய்தது.

"ஜேர்மனியில இருந்தெண்டா, வெள்ளைக்காரனோ?" அவளின் குரலில் ஏன் முதலில் சொல்லவில்லை என்ற கோபம் இருக்கிருக்க வேண்டும்.

"ஓமோம், அவன் வந்தால் ஒரு கிழமை அவனோட சுத்த வேண்டி வரும்"

அவள் வந்த கோபத்தை தணிக்க கடுமையாக முயற்சித்தது தெரிந்தது.

"அவளவை சம்மதிப்பாளவையோ தெரியாது. எதுக்கும் கேட்டுப் பாக்கிறன்"

முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வந்தாள். "ஒரு கிழமை அவளவை வர மாட்டாளவை. அது கஷ்டம். அவளவை வெள்ளைக்காரன் எண்டவுடன பயப்பிடுறாளவை. அவங்கள சிப்பிலியாட்டிப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவாங்கள்"

ராஜனுக்கு கோபம் வந்தது. கைபிடியில் குத்தினுன்.

"தம்பி, கோபிக்காதையுங்கோ. ராசலிங்கம் எனக்கு வேண்டப்பட்டவர் தான். அவளவை மாட்டன் எண்டால் ஒண்டும் செய்யேலாது. உங்களுக்கு தேவையெண்டால் சொல்லுங்கோ... ஒரு நாளைக்கு"

ராஜன் கேட்காமலே எழுந்து வந்தான்.

அவனைத் திட்டிக் கொண்டே வந்தான்.

"பெட்டையள் திறமடா, ஆனுல் லெவல் அடிக்கிருளவை. காசைத் தூக்கி வீசினுல் எத்தினை பெட்டையள் வருவாளவை" எனக்கு அவனது திட்டுதலில் மனம் செல்லவில்லை. அந்தப் பெண்களின் முகங்கள் கண் முன்னுல் வந்து நின்றன. ஏன் இப்படியெல்லாம் வாழ வேண்டியிருக்கிறது?

வழியில் இரண்டு நர்ஸ்கள் 'ஆட்டக்காறியள். இங்க இருந்து எங்கட பேரை நாசமாக்குருளவை' என்று திட்டிக் கொண்டு போனுர்கள். எங்களைப் பார்த்த பார்வையும் ஏதோ அற்ப புழுவைப் பார்த்தது மாதிரி இருந்தது.

★ ★ ★

சிவாஸ் கபேயில் புரியாணி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும் ராஜனின் கோபம் தணியவில்லை. நான் மௌனமாயிருந்தது அவனுக்கு ஆச்சரியமாயிருந்திருக்கலாம்.

"என்னடா, பேசாமல் இருக்கிருய்"

"ஒண்டுமில்லை. யோசிச்சுப் பாக்கிறன். யாழ்ப்பாணத்தில இப்பிடியெல்லாம் இருக்கு எண்டு தெரியாமல் இவ்வளவு காலமும் இருந்திருக்கிறேனே"

"உது பெரிய விசயமில்லை நீ கிணத்துத் தவளை தானே"

"சும்மா கிணத்துத் தவளை எண்டு திருப்பித் திருப்பிச் சொல்லாதை. பண்பாடு கதைக்கிற யாழ்ப்பாணத்தில இப்பிடியோ?"

"தமிழனே? பண்பாடாய் இருந்தவனே?" அவனது குரலில் கேலி தொனித்தது.

"தமிழன்ரை பம்மாத்து உனக்குத் தெரியாதடா.. தான் கலியாணம் செய்யிறதுக்கு அவருக்கு கன்னிப்பெண் வேணும். கைபடாத ரோஜா வேணும். ஆனுல் அவர் வேலி பாய்ஞ்சு கொண்டு திரிவார்"

"அதுகள் அருமை பெருமையாய் ஒண்டிரண்டு தானே"

"ஒண்டிரண்டோ, இது தமிழனுக்கோ, யாழ்ப்பாணத்துக்கோ புதிசில்லை. தமிழன் தேவதாசி எண்டு வைச்சிருந்தவன் என்னத்துக்கு? ஏன் தாயைத் தெய்வம் எண்டு சொன்னவன் தானே இந்த தேவதாசியை வைச்சிருந்தவன். ஏன் அவளவே தாய் இல்லையோ, தெய்வம் இல்லையோ. உவங்கள் உந்த சின்னமேளக் காரியளைக் கூட்டிக்கொண்டுவந்து என்ன செய்தவங்கள். கொழும்பில இருந்து வந்த அந்த சிங்களவனுக்கு தமிழ் பெட்டை செற் பண்ணிக் குடுத்தங்கள் தானே இந்த வால்பிடியள்."

"அது பொலிடிக்ஸ். அவன் செல்வாக்குள்ள ஆள். அடுத்த வாரிசு. அவனைப் பிடிச்சால் அலுவல் நடக்கும் எண்டதுக்காக உவங்கள் செய்தது. அதுவும் வதந்திதான். உண்மை பொய் ஆருக்கும் தெரியாது"

"தமிழன் பண்பாடு கதைக்கிறதெல்லாம் தன்னை வசதிக்கும் தன்ர பொட்டுக்கேட்டை மூடி மறைக்கிறதுக்கும் தான்" மூச்சு விடாமல் பொரிந்து தள்ளினுன். அவன் மறுத்த கோபம் அவனுக்கு இருக்க வேண்டும்.

"உவங்கள் உந்த வேலி அடைக்கிறது என்னத்துக்கு? மற்றவன் தன்ரை வளவுக்குள்ள வராமல் இருக்கவும் உள்ளுக்கு இருக்கிறதுகள் ஓடாமல் இருக்கிறதுக்கும் எண்டில்லை. தன்ரை பொட்டுக்கேட்டை மறைக்கிறதுக்கு. எல்லாம் மனசுக்குள்ள இருக்கடா.. நீ வேலியைக் கட்டி என்ன, மதிலைக் கட்டி என்ன? குறைஞ்ச சாதிக்காரனேட ஓடிப்போனவளை குடும்ப கௌரவம் எண்டு பிடிச்சு இழுத்துக் கொண்டு வந்து சொந்த சாதியில வயது போனவங்களுக்கு கட்டி வைக்கிறதை விட வேசித்தனம் வேற என்ன இருக்கு? உவங்கள் எப்பவாவது தன்ரை பிள்ளையளுக்கு உணர்ச்சி இருக்கு எண்டு நினைச்சவங்களே. . சும்மா சொத்துப்பத்து அழியக் கூடாது எண்டு சொந்தத்துக்க கிழடு கட்டையளுக்கு கட்டி வைக்கிறது. எத்தனை பேர் பிள்ளையள் தாங்கள் விரும்பினவனேட வாழ விட்டிருக்கினம்.

ஆம்பிளையளைக் கூட அடக்கி அடக்கி வைக்கிறது. வேள்விக்கிடாய் வளக்கிற மாதிரி. சீதனம் வாங்கிறதுக்கு. அதுதான் அவங்கள் இங்க காய்ஞ்சு கொண்டு இங்கிலிஷ் படம் பாக்க அலையிருங்கள். அங்க வந்தால் அவங்கள் தான் முதல் ரெட் லைட் ஏரியாவுக்கு போறது. அங்க எண்டால் உந்த செக்ஸ் படங்களுக்கு ஜேர்மன் காரன் போறது குறைவு.

இங்க பார், இண்டைக்கு என்ரை அக்காவுக்கு சீதனம் தேட நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறன். ஜேர்மன்காரன் எங்களைக் கண்டவுடன கோப்பை கழுவிறதுக்கு சுடுதண்ணி பாவிக்காமல் பச்சைத்தண்ணி பாவிச்சவன். அந்த வின்ரர் குளிருக்குள்ள நான் ஏன் கஷ்டப்பட்டனுன்? எனக்கே? என்ர அக்கா, தங்கச்சிக்காக. உவங்கள் ஆர் சீதனம் இல்லாமல் கலியாணம் கட்ட ரெடி? இவங்கட வாழ்க்கையே ஒரு வேசித்தனம். அதுக்குள்ள அந்தப் பெட்டையள் கெட்டுப் போறதில என்ன மனக்கஷ்டம்"

அவனது பேச்சில் விரக்தியா, கோபமா தெரியவில்லை. பள்ளிநாட்களில் விவாதித்த சுவாரஸ்யமான நாட்களின் பின்னர் இந்த சம்பாஷணை மனதுக்கு இதமாக இருந்தது. "மச்சான், இது காலங்காலமா வாறது. இதை நீயோ நானே மாத்தேலாது"

"மாத்தேலாது எண்டால் பிறகேனடா அவளவை கெட்டுப் போனதைப் பற்றி புலம்பிருய். அதையும் எங்களால மாத்தேலாது எண்டு நினையன்"

"மாத்துறது, மாத்தேலாது எண்டதுபல்ல. எங்களுக்கு ஒரு மனச்சாட்சி இருக்குத் தானே"

"எனக்கென்ன அது இல்லையே.. எனக்கும் பெம்பிளைச் சகோதரங்கள் இருக்கு.. நாங்கள் இப்ப ஒருத்தியை ஏமாத்தி கெடுக்கவா போறம். ஏற்கனவே இந்த தொழிலுக்கு பழக்கமான ஒருத்திக்கு காசைக் குடுக்கிறம். அவளுக்கு தேவை எங்கட காசு. எங்களுக்கு தேவை அவளின்ரை உடம்பு"

"இதென்னடா, சந்தையில சாமான் வாங்கிற மாதிரியே?

"அதை விடு. பண்பாடு அது இதில எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. ஜேர்மன்காரனைப் பார். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கு வேலி போட்டு அடிபட்டு கோட்டுக்கு ஏறேலே. பண்பாடு அது இது எண்டு தன்னை ஏமாத்தேலே. மற்றவன்ரை உணர்ச்சியை மதிக்கிறுன். பிள்ளையள் வளர்ந்தாலும் தாய் தகப்பன் வேற கலியாணம் செய்யுதுகள். ரெட் லைட் ஏரியா வைச்சிருக்கிறுங்கள். தேவையானவன் போய் வாறுன். தேவையில்லாதவன் போகேலே. போலி வேசம் போட்டு அவன் அலையேலே. அவனைப் பார். எவ்வளவுக்கு வளர்ந்திருக்கிறுன். நாங்கள்? இப்பவும் நல்லூரில தேர் இழுக்கிறம். செய்யிறது அநியாயம். அதுக்குள்ள எத்தனை பக்தி? சிங்களப் பிள்ளையளையும் தோட்டக்காட்டுப் பிள்ளையளையும் வேலைக்கு கொண்டுவந்து வைச்சு பிள்ளை குடுத்தவங்கள் தானே இவங்கள்"

அவனுக்கு மூச்சிரைத்தது.

"ஏன்ரா உனக்கு யாழ்ப்பாணத்தானிலே இவ்வளவு கோபம்?"

"அவ்வளவுக்கு அனுபவப்பட்டிட்டன் மச்சான். உனக்குத் தெரியுமோ ஜேர்மனியில மனிசிமாரை வீட்டில வைச்சுப் பூட்டிப் போட்டு வேலைக்குப் போற இந்த யாழ்ப்பாணத்தானை"

"அட அப்பிடியோ!"

"ஆனால் கதைக்க விட்டால் காணும், உலகத்தில தன்னை விட்டால் ஆளில்லை எண்ட மாதிரி. எப்ப பார்த்தாலும் மற்றவனைப் பற்றின கதை தான். தன்ரை ஓட்டையளை மறந்திட்டு மற்றவனை நெளிக்கிறதுதான் வேலை."

"அட அதுசரி, இதில ரெண்டு விசயம் இருக்கு. ஒண்டு நீ சொல்ற இந்த யாழ்ப்பாணியளில நீயும் நானும் அடக்கம். மற்றது நீ சொல்ற இந்த யாழ்ப்பாணப் புத்தியால பாதிக்கப்பட்ட பிள்ளையள் தான் இண்டைக்கு இந்த தொழிலைச் செய்யுது. அதுகளுக்கு குடும்பம் வாழ்க்கை எண்டு வாழ வேணும் எண்ட ஆசையிருக்காதோ. யாழ்ப்பாண மனநிலையால பாதிக்கப்பட்டதுகளை நீ கூட ஒரு வகையில பயன்படுத்தத் தானே பாக்கிறுய். அப்பிடிப் பார்த்தால் எல்லாம் பெட்டையளும் உப்பிடி தொழில் செய்தால் யாழ்ப்பாணம் திருந்தியிடும் எண்ட மாதிரியல்லோ இருக்கு உன்ரை கதை"

"நீயும் நானும் யாழ்ப்பாணம் தான். ஆனால் இப்பிடி ஒரு பிரச்சனை இருக்கு எண்டதை ரெண்டு பேரும் ஏற்றுக் கொள்ளுறம் தானே. அப்பிடி எத்தனை பேர் யோசிக்கத் தயார்? சீதனம் குடுக்கக் கூடாது எண்டு மேடை போட்டுப் பேசினவன் எல்லாம் பிறகு சீதனம் இல்லாமல் கட்டமாட்டன் எண்டது எனக்குத் தெரியும். லவ் பண்ணிறவன் கூட சீதனம் வாங்கிறதுக்காக வேற பெட்டையளைக் கட்டுறாங்கள். இது தான் யாழ்ப்பாணம். நான் யாழ்ப்பாணத்தில பிறந்தவன் எண்டாலும் எனக்கு யாழ்ப்பாணத்தான் எண்டு சொல்ல வெக்கமாய் கிடக்கு. மற்றது யாழ்ப்பாண புத்தியாலேதான் இந்தப் பிள்ளையள் பாதிக்கப்பட்டது எண்டது உண்மை. இரவில உவளவையிட்ட போறவங்கள் தான் பகலில உவளவையைப் பார்த்து விசிலடிக்கிறது. நான் செய்யிறது ஒரு வேளை பிழையாயிருக்கலாம். எனக்கு ஜேர்மனியில இருந்ததாலே அப்பிடியெல்லாம் யோசிக்க வரேலே. நான் அங்குள்ள மாதிரி யோசிச்சிட்டன். ஆனால் யாழ்ப்பாணத்தான் இதை மூடி மறைக்கிறது எனக்குப் பிடிக்கேலே. அதுதான் நேரடியாய் போய் கேட்கிறன்.. எங்களுக்கு ஒரு பெட்டை வேணும் எண்டு. நீ உடன யாழ்ப்பாணப் புத்தியில.. எங்களுக்கு இல்லை, எங்கட ஜேர்மன் பிரெண்டுக்கு எண்டு இழுக்கிறுய். என்ன வெட்கம் வேண்டிக் கிடக்கு"

"எனக்கு இதில கூச்சம் ஒண்டும் இல்லை. மூடி மறைக்கவும் இல்லை. எனக்கு இது ஒழுக்கக் குறைவான விசயம் மாதிரி இருக்குது. எனக்கு அந்தப் பெம்பிளையளைப் பாக்க என்ரை அக்காமாரின்ரை ஞாபகம் தான் வருகுது. சிவப்பு விளக்கு எரிகிறது வாசிச்சனீ தானே.. ஒரே ஒருத்தி தானே புருசனிட்டை கிடைக்கேலே எண்டு அங்க போனவள். மற்றதெல்லாம் ஏமாத்தப்பட்டு, கடத்தப்பட்டு வந்ததுகள் தானே. எனக்கு அந்தப் பெட்டையளில ஒண்டைக் கட்டி வாழ்வு குடுத்தால் என்ன எண்ட மாதிரிக் கிடக்கு. எங்களுக்கும் பெம்பிளைச் சகோதரங்கள் இருக்கு. ஏன் எங்களால அதுகளில ஒண்டை அவனுக்கு குடுக்கேலாமல் இருக்கு? அது தான் ஒழுக்கம். இதில யாழ்ப்பாணப் புத்தி எண்டு ஒண்டும் என்னட்டை இல்லை. அதோட இந்த பிரச்சனை எல்லா இடமும் இருக்கு. இது செக்ஸ் சம்பந்தப்பட்டது. மனிசன் இருக்கிற இடமெல்லாம் இருக்கு"

"உலகமெல்லாம் இருக்கு. யாழ்ப்பாணத்தான் தன்னட்டை இல்லை எண்டு மூடி மறைக்கேக்கை தானே எரிச்சல் வருகுது"

"எரிச்சல் வரட்டும். ஆனால் ஏன் எதுக்கு எடுத்தாலும் ஜேர்மனை உதாரணம் காட்டுறுய்? எங்கட வாழ்க்கையில இருக்கிற குடும்ப உறவு அவங்களிட்டை இருக்கே? வளர்ந்தவுடன தாய் தகப்பனைக் கைவிட்டுப் போகிற வாழ்க்கை தானே அது"

"அட கைவிட்டுப் போயிட்டாங்கள் என்று அங்க தாய் தகப்பன் அழுகிறேலே. தங்கட சுதந்திரத்தில மற்றவை தலையிடக் கூடாது எண்டு தாய் தகப்பனும் பிள்ளையளும் நினைச்சுப் பிரிஞ்சு போகினம். தாய், தகப்பன் இருக்கக் கூடியதாக பிள்ளையள் தங்கள் லவ்வர்ஸோட வந்து வீட்டை படுக்கிறுங்கள். மற்றவன்ரை உணர்ச்சியை அவன் மதிக்கிறுன். அங்க பிரிஞ்சு இருந்தாலும் அரசாங்கம் காசு குடுக்குது. தாய் தகப்பன் பிள்ளையளை எதிர்பார்க்கத் தேவையில்லை. இங்க மனிசிமாரின்ரை கதையைக் கேட்டு தாய் தகப்பனை வீட்டை விட்டு துரத்தினவன் எத்தனை பேர்? தாய் தகப்பனும் தன்ரை கட்டுப்பாட்டை மீறி கலியாணம் கட்டினதுக்காக சேர்க்காமல் இருக்கிற பிள்ளையள் எத்தினை?"

"அங்க தானே இத்தனை பேர் விவாகரத்துச் செய்யிறுங்கள்? குடும்பங்கள் சிதறிப் போகுது"

"விவாகரத்துச் செய்யிறுன், ஏனெண்டா எனக்குப் பிடிக்காத நரக வாழ்க்கையிலே நான் ஏன் வாழ்நாள் பூராவும் அழுந்த வேணும் எண்டு. இங்கயும் எத்தனை பேர் சமூகத்துக்கு பயந்து தான் வழக்கு கணக்குக்கு போறேலே ஒழிய.. இங்கயும் விவாகரத்து இருக்குத் தானே. நீ மித்திரன் படிக்கிறேலேயே.. ஜீவனும்ச வழக்கு எண்டெல்லாம் வரும்"

நீண்ட நேரம் ஒரு புத்திபூர்வமான சம்பாஷணை நீண்ட காலத்துக்குப் பிறகு.. உடம்பில் புத்துணர்ச்சி தென்பட்டது. அவன் மௌனமாகி எதையோ யோசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் இருந்தான்.

★ ★ ★

மேசையைக் கவனித்த சாமி டிப்ஸாக கிடைத்த பத்து ருபாவை தன் வாழ்நாளிலே கண்டிராத மாதிரி ஆச்சரியப்பட்டான். புருட் சலாட்டுக்கு ஓடர் கொடுத்து விட்டு காத்திருக்கும் போது சாமியின் காதில் விசயத்தைப் போட..

"பிரச்சனையேயில்லை" என்றான். நானும் வழமை போல "எங்களுக்கு இல்லை. எங்கட பிரெண்ட் ஜேர்மனியிலிருந்து. ." ராஜன் பார்த்த பார்வையில் வசனத்தை இடையில் நிறுத்த வேண்டி வந்தது.

"நல்ல இடங்கள் இருக்கு.. ஆனால் சரியான கனக்ஷன் வேணும். அவை எல்லாரிட்டயும் கண்ட மாதிரி வர மாட்டினம். ஹை பையான ஆக்கள். அதுவும் யாழ்ப்பாணத் தொடர்புள்ள ஆக்கள் எண்டால் வர மாட்டினம். கொழும்பில இருந்து வாற ஒபீசர்மாருக்கு ஒழுங்கு பண்ணிக் குடுக்கிறவை. மற்றும்படி கிராமப் பக்கங்களில இருந்து யாழ்ப்பாணத்தில தையல், நெசவு வேலைக்கு வாற பெட்டையள் கொஞ்சம் இருக்கினம். ஒரு பெடியன் தன்ரை கேர்ள் பிரண்டை விட்டு உழைக்கிறவன்"

"என்ன" அதிர்ச்சியில் எனக்கு புரைக்கேறியது. ராஜன் நிதானமாக கேட்டுக் கொண்டிருந்தான். "தன்ரை கேர்ள் பிரெண்டை விட்டு உழைக்கிறவனோ?" நான் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

"தம்பியும் வெளிநாடு போய் கனகாலம் போல. இங்கத்தை நிலைமை தெரியாது போல இருக்கு" என்னையும் வெளிநாடு போனதாக சொன்னதை மறுக்கும் நிலையில் நான் இருக்கவில்லை. "பெட்டை அவனை நம்பி லவ் பண்ணியிருக்கு. பிறகென்ன. அவன் அப்பிடியான ஆள். உழைப்பிக்கிறான். உங்க இன்னொருத்தன் இருக்கிறான். கட்டின மனிசியை விட்டு உழைக்கிறவன்"

ராஜன் என்னை பார்த்த பார்வையில் கிணற்றுத் தவளை தெரிந்தது.

"இன்னொரு பெட்டை இருக்கிறாள். நல்ல வடிவான பெட்டை. எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் இருக்கிறார். அவர் வந்தால் ஒழுங்கு பண்ணித் தாறன்"

வருபவன் ஜேர்மன்காரன், தங்க வேண்டியது ஒரு கிழமை என்ற இரு விடயங்களையும் முன்ஜாக்கிரதையாகவே சாமியிடம் சொல்லி வைத்தேன். இன்னொரு தடவை ஏமாறக் கூடாது என்பதற்காக. சாமியிடம் உறுதிமொழியைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தோம்.

"மச்சான், கிட்டத்தட்ட ஒரு பிரச்சனை தீர்ந்திட்டுது. ஹோட்டல ஒழுங்கு பண்ண வேணும்

"ஹோட்டலோ? பரணி ஹோட்டல் அதுகள் ஆஸ்பத்திரிக்கு முன்னால இருக்குது. அங்க செய்யலாம் தானே"

"அடப்பரதேசி நாயே, நீ எந்த உலகத்திலயடா இருக்கிறாய். அவன் வெள்ளைக்காரன். உங்கையே அவனை இருத்திறது? பக்கத்து றீகல் தியேட்டர் ஒழுங்கை மணத்தைக் கண்டிட்டே அவன் ஓடித் தப்பியிடுவான். உங்க தானே நெடுக முந்தி பொலிஸ் பிடிக்கிறவங்கள். பெரிய ஹோட்டல் ஏதும் பாப்பம்"

"அப்ப சுபாஸ்?"

★ ★ ★

மறுநாள் சாமியைப் பிடிப்பதற்காக சிவாஸில் மீண்டும் புரியாணி. எங்களைக் கண்டதும் வெற்றிப் பெருமிதம் சாமியின் முகத்தில் தெரிந்தது.

"அந்தப் பெடியனைக் கண்டனான். அவள் இந்தக் கிழமை வரேலையாம். ஏதும் வயித்தில பிள்ளை வந்து அழிக்கப் போயிருப்பாள்" சாமி சாதாரணமாக சொன்னான்.

"மற்ற பெட்டையின்ரை புருசனைக் கண்டனான். அவள் இண்டைக்கு பத்தரைக்கு படத்துக்கு ஆரோடயோ போறாள். அவள் இந்தக் கிழமை பிசியாம். மற்றப் பெட்டை தான் சரி வந்திருக்கு"

"எங்க ஆளை மீட் பண்ணலாம்?"

அந்தப் பெண்ணிற்கு தெரிந்த ஒருவரை சாமி அறிமுகம் செய்து வைத்தான். எனக்கு அவனைப் பார்க்கவே பிடிக்கவில்லை. இதிலேயே வைத்து அவனை பூண் போட்ட மண்வெட்டிப் பிடியால் மண்டையில் போட்டு பொயிலைக் கண்டுக்கு குழை தாட்கும் போது அவனையும் சேர்த்து புதைக்க வேண்டும் போலிருந்தது. ஆள் வாட்டசாட்டமாய் இருந்தான். வெலிங்டன் தியேட்டருக்குப் போயிருக்கிறாளாம். வருவதற்கு ஒரு மணியாகக் கூடும். ஒரு மணிக்கு சந்திப்பதாகக் கூறி விட்டு சுற்றி வந்து அவன் சொன்ன இடத்தில் ஆஸ்பத்திரிக்கு பின்னால் உள்ள பஸ்ஸ்ராண்டில் காத்திருக்க.. அவன் வந்தான். உவனுக்கு எல்லாம் ஒரு பெல்ஸ், 80/20 சேட்.. சீக்கோ மணிக்கூடு. . எனக்கு அவனைக் காண கோபம் மேலிட்டது. உழைப்பதற்கு வக்கில்லாமல் ஒரு அப்பாவிப் பெண்ணை ஏமாற்றி உழைப்பவனுக்கு ஒரு ஆடம்பரம் வேண்டிக் கிடக்கிறது. ஊரில் உன்னைக் கண்டால் மகனே விசயம் வேறு. பொயிலைக் கண்டுக்கு உரமாகி இருப்பாய்.

படம் முடிந்து வாய்க்காலில் வரும் நீர் போல சனக் கூட்டம் வர.. அங்க வாறு, அவ தான் என்றான். அவளோடு திறந்து விட்ட சேட்டின் உள்ளே கரிய உடம்பில் தெரிந்த தடித்த சங்கிலியும் கைவிரல்களில் தடித்த மோதிரங்களுமாக ஒருவன் வந்து கொண்டிருந்தான். எங்காவது கரையோரப் பகுதிகளில் மீன்பிடி வள்ளம் வைத்திருப்பவனாக இருக்க வேண்டும்.

"ஏனடா, உங்களுக்கு எல்லாம் ரவுணில படிச்ச பெட்டையளோடா கேக்குது" மனதுக்குள் திட்டிக் கொண்டேன். இவனைக் கண்டதும் அவள் அவனிடம் சொல்லிக் கொண்டு றோட்டைக் கடந்து இவன் நிற்கும் இடத்திற்கு வந்தாள். பணப் பரிமாற்றம் தியேட்டருக்குள்ளேயே, அல்லது அதற்கு முன்பே நடந்து முடிந்திருக்க வேண்டும். அவளைக் கண்டதும் எனக்கு அதிர்ச்சி.. இவளா? இவளா இப்படி?

அவன் முன்னால் எப்படி என் அதிர்ச்சியைக் காண்பிக்க முடியும். அவள் வருவதைக் கண்ட இவன் மெதுவாக அவளிடம் போய் கதைத்துக் கொண்டே பஸ் நிலையம் வரை போய் விட்டு விட்டு வந்தான். எனக்கு எதுவும் பேச முடியவில்லை. வந்தவன் "நாளைக்கு எத்தனை மணிக்கு?" என்றான். பிறகு நெளிந்தான். ராஜன் "காசு நாளைக்கு முழுக்க தாறன்" என்றதும் அவன் நழுவிக் கொண்டான்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் போன கையோடு "டேய் மச்சான், உவளை உனக்குத் தெரியுமோடா?" என்றதும் ராஜன் உதடுகளைச் சுழித்தான்.

"உவள் தான்ரா முந்தி பொன் இன்ஸ்டிட்டியூட்டில செக்கிரட்டரியாய் இருந்தவள்"

"அட அவளோ?"

அட்வான்ஸ்ட் லெவல் காலங்களில் டாக்டராவதும் என்ஜினியராவதும் தவிர்ந்த வேறெந்த கனவும் இல்லாமல் பாடசாலைக்கும் டியூட்டரிகளுக்கும் மாறி மாறிப் பறந்திருந்த காலம்.. அட்வான்ஸ் லெவல் படித்து பாஸ் பண்ணுததால், மற்றவர்களைப் படிப்பிக்க வந்த இளைஞர்கள் எல்லாம் ஹீரோக்களாகியிருந்தனர். நடிகர்கள் போல செல்வாக்கு இருந்ததால் படிக்கப் போன மாணவிகள் பலரும் மாணவர்களை விட மாஸ்டர்மாரைப் பார்த்து சிரிப்பதிலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர். வகுப்பு முடிந்து மாணவர்கள் வெளியே போவதற்கு முன்னே பாய்ந்து சென்று ஹொண்டாக்களில் பறந்து அடுத்த இடங்களுக்கு பறந்து கொண்டிருப்பர்.

அங்கே எங்கள் வகுப்பில் பாதி இரசாயனவியல் படிப்பதற்காக பொன் இன்ஸ்டிட்டியூட்டில் தஞ்சம் புகுந்தது... பாடசாலையில் படிப்பித்த ஆசிரியரின் துன்பம் தாங்காமல். அங்கே இந்தப் பெண்ணும் இன்னொருத்தியும் எங்களைப் பதிவு செய்வதற்காகவும் பணத்தை அறவிடுவதற்காகவும் செக்கரட்டரிகளாக இருந்தார்கள். அந்த நேரங்களில் டியூட்டரிகள் எல்லாம் அழகான பெண்களை வேலைக்கு அமர்த்தியதற்கு பல காரணங்கள்.. ஆசிரியர்கள் இளவட்டங்கள். படிக்க வருபவர்களும் இளவட்டங்கள். ஒரே கல்லில் பல மாங்காய்கள். கிட்டத்தட்ட நடிகைத் தோற்றத்தில் தமிழ் கலாசாரத்தைப் பேணும் இறுதி முயற்சியில் சேலையும் உடுத்து எங்காவது தொலைவிடங்களில் இருந்து பஸ்ஸில் வருகின்ற பெண்கள் தான் அங்கே வேலை செய்வார்கள்.. தொலைவிடங்களில் இருந்து வருபவர்களுக்கு வீட்டே தாமதித்துச் செல்வதற்கு காரணங்கள் எதுவும் இல்லாவிட்டாலும் அவர்களை இ.போ.ச கைவிடுவதில்லை.

அதிலே இவளை விட இருந்த மற்றொருத்தி மீதுதான் எனக்கு தீராத மையல். அவளது முகத்தைப் பார்ப்பதில் ஒரு திருப்தி. அசல் நடிகைகள் போன்ற தோற்றம். இரண்டு பேருமே அழகாக சாறியுடுத்தி பொட்டு வைத்து புன்முறுவலைத் தவழ விட்டபடி எங்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டிருப்பார்கள். அந்த நேரங்களில் பின்னால் ஒரு கதிரையில் அடுத்த வகுப்புக்கு கிளாஸ் எடுப்பதற்காக காத்திருக்கும் மாஸ்டர் யாராவது "சள்ளடித்துக்" கொண்டு வழித்து கொண்டிருப்பார். டியூட்டரியின் மேலே ஆசிரியர்கள் தங்குவதற்கும் இளைப்பாறுவதற்கும் பெட்ரூம் எல்லாம் இருப்பதாகவும் பொடி மட்டங்களில் கதை உலாவியது. அதை விட அங்கே வேலை செய்கின்ற கிழவன் ஒருவன் (இது பொடி மட்டங்கள் பொறுமையால் செய்த இழிவு சிறப்பாக இருக்க வேண்டும். கிழவன் என்றால் நாற்பது வயது இருக்கக் கூடும்) இந்தப் பெண்களை மயக்கி லீலைகள் செய்வதாக வேறு கதை அடிபட்டது. அந்தப் பெண்களின் தோளில் கைவைத்து அந்தக் கிழவன் கதைத்துக் கொண்டிருந்ததை தான் கண்டதாக நேசகுமார் கோபத்தோடு சொல்லியிருந்தான். பரீட்சை நேரமவநததும இவர்களைப் பார்க்க முடியாமல் போகிறதே என்ற கவலை வேறு எனக்கு இருந்தது. அது ஒரு ஒருதலைக்காதல் தான்.

அவளா இப்படி ஆனாள்? அந்தக் கிழவன் தான் இவளைப் பழுதாக்கியிருப்பானோ?

"அட அவளோ" ராஜனுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

"அந்த நேரமே அவளில எனக்கு ஒரு கண். மச்சான், இந்த முறை சான்ஸை விடுறேலை"

போனவுடன் முதல் அலுவலாக சாமியிடம் கேட்டேன்..

"அந்தப் பெட்டை பொன் இன்ஸ்டிட்டியூட்டில செக்கியாக இருந்ததல்லோ?"

"ஓமோம். அவள் அங்க இருக்க அவங்கள் மாஸ்டர்மார் எல்லாம் அவளை ஏமாத்தி எல்லா இடமும் கொண்டு திரிஞ்சு போட்டு கையை விட்டுட்டாங்கள். அவள் உப்பிடித் திரிஞ்சு இவன் எங்கயோ கொழுவிப் போட்டான். இப்ப வைச்சு உழைக்கிறான்"

கடவுளே.. அந்தப் பெண்ணுக்கு இந்தக் கதியா? ஒரு காலத்தில் எங்கள் மட்டங்களுக்கே கனவுக்கன்னியாக இருந்தவள் இன்றைக்கு இந்த சகதியில்? திடீரென்று வந்த பகட்டுகளுக்குள் பலியாகி விட்டாளோ? எனக்கு சாப்பிடப் பிடிக்கவில்லை.

★ ★ ★

இன்றைக்கு ஜேர்மன்காரன் வருகிறான். முல்லர் என்று பெயராம். அவனுக்கு புல்லர் என்று வைத்தால் நல்லாயிருந்திருக்கும். அந்தப் பெண்ணுடன் அவன் பத்து மணிக்கு நியூ மார்க்கட்டில் நிற்பதாக ஏற்பாடு.. காலை எட்டு மணிக்கே ராஜன் வீட்டே வந்து விட்டான். பைக்கை சுபாஸ் கபே முன்பாக விட்டு அவனைத் தேட.. அவனும் அவளும் ஒரு டெக்ஸ்டைலஸிலிருந்து வெளியே வந்தார்கள். அவள் ஹைஹீல்ஸ் போட்டு உதட்டில் ஏராளமான சிவப்பு பூசியிருந்தாள். முகத்தில் பவுடர் அப்பி, அதற்கு மேலாக சிவப்பாக எதுவோ பூசப்பட்டிருந்தது. சிவப்பு நிற மினிஸ்கேட்.. அது எல்லைகள் மீது சேஷ்டை புரிந்து கொண்டிருந்தது. தோளில் ஒரு ஹாண்ட் பாக்.. கண்ணுக்கு கறுப்பாக எதுவும் பூசியிருக்கவில்லை. ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் எதிர்பார்க்கின்ற பண்பாட்டுடன் சேலையுடுத்தி அடக்கமாக இருந்த அவளா இன்று இப்படி?

எங்களைக் கண்டதும் அவன் வந்தான். அவனையும் ராஜனையும் தனியே விட்டு நான் றெக்கோடிங் பாருக்கு அருகில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

கொடுக்கல் வாங்கல்களை முடித்துக் கொண்டு அவன் அவளை எங்களிடம் கூட்டிக் கொண்டு வந்து விட்டான். என் முகத்தை அவள் பார்ப்பதை அவள் தவிர்த்துக் கொண்டாள். எனக்கும் அவளைப் பார்க்கப் பிடிக்கவில்லை. மனதுள் பரிதாபம் வந்தது.

"டாக்ஸியில போவம்" அவளே ஆலோசனை சொன்னாள். வெளியே வந்து டாக்ஸியைப் பிடிக்க.. அவள் பின்னே ஏறிக் கொள்ள ராஜன் முன்னே டாக்ஸிக்காரனோடு உட்கார்ந்தான். அவளுக்கு அருகில் உட்கார்வதைத் தவிர வேறு வழியில்லை. அநியாயமே... ஆராவது ஊர்க்காரர் பார்த்தாங்கள் எண்டால் வீட்டுக்கு கதை போய்.. மெதுவாக சீட்டில் பதிந்து கொண்டேன்.

அவள் கண்ணாடிக்குள்ளால் நாடியில் கை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். இடையில் திரும்பிப் பார்த்ததும் அவளும் திரும்பிப் பார்த்தாள். சலனமில்லாத கண்களைப் பார்த்து மெதுவாகச் சிரித்தேன். "நீங்கள் முந்தி பொன் இன்ஸ்டிட்டியூட்டில செக்கியாய் இருந்தனீங்கள் அல்லோ?" அவள் மறுத்து தலையாட்டிய சிரிப்பில் விரக்தி தெரிந்தது. அவள் மேலே பேசவிரும்பவில்லை என்று தெரிந்தது. ஒருவேளை என்னையும் தன்னிடம் சுகம் பெற வந்ததாக நினைத்து.. என் பூர்வீகம் எல்லாம் உனக்கு எதுக்கு ராஜா, வந்தால் வந்த வேலையைப் பார்த்திட்டுப் போயேன் என்ற கோபமோ?

அவளுடைய சகாவும் என் மாஜி மானசீக காதலியுமானவள் என்ன செய்கிறாளோ என்பதை அறிய இருந்த ஆர்வம் காற்றில் கரைந்து போனது.

ராஜன் எதுவும் பேசாமல் முன்னே உட்கார்ந்திருந்து அடிக்கடி மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுபாஸ் ஹோட்டல் உள்ளே டாக்ஸி போனது. அவள் தானாகவே இறங்கிக் கொண்டாள். அவளுக்கு அது புதிய இடமாக இருந்ததாக தெரியவில்லை. அந்த சூழலிற்கு அவள் பரிச்சயமானவள் போலும். வாசலில் றிசெப்சனிஸ்ட் பெண் எங்களைக் கண்டதும் புன்னகை மாறாமல் வரவேற்றாள். அந்தப் புன்னகை சம்பளத்திற்கானதாக இருக்க வேண்டும். இவள் அடிக்கடி வந்திருப்பதை அவள் அறிந்திருக்கக் கூடும். வழமையான பெண்ணின் எரிச்சல் அவள் முகத்தில் தோன்றியிருக்க வேண்டும். அதைக் காட்டாமல் புன்சிரித்தாள். திறப்பையும் அறை இலக்கத்தையும் கேட்டு மேலே போக.. அவள் ஹாண்ட் பாக்கை கழற்றி கட்டிலில் எறிந்து விட்டு கட்டிலிலேயே உட்கார்ந்தாள். அவள் இயல்பாகவே நடந்து கொண்டாள். இந்த இடத்திற்கான பரிச்சயம் துலாம்பரமாகத் தெரிந்தது.

ராஜன் வாஷ்ரூமை எட்டிப் பார்த்தான்.

எனக்கு பரிதாபமாக இருந்தது.

"உங்களுக்கு சாப்பிட ஏதாவது வேணுமா?" அவள் தலையசைத்தாள்.

"மச்சான், சாப்பிட ஏதாவது வாங்கிக் குடுக்க வேணும்" இரண்டு பேரும் வெளியே வந்தோம். "எளிய ராஸ்கல், காசை வாங்கியிட்டுப் போயிட்டான். அவளுக்கு சாப்பாடு ஒண்டும் குடுக்காமல்" எனக்கு வந்த கோபத்தில் அவனைத் திட்டினேன். காத்துக் கொண்டிருந்த டாக்ஸிக்காரனிடம் சொல்லியனுப்பி விட்டு காத்திருக்க..

"மச்சான், நானும் ஒரு நாளும் தமிழ் பெட்டையளை ருசி பார்க்கேல்லை. உவளில அந்த நேரமே எனக்கு ஒரு கண் இருந்தது. இப்ப தான் சான்ஸ் அடிச்சிருக்கு. நீயும் தேவையெண்டால் சொல்லு மச்சான், வெக்கப்படாதை"

எனக்கு எரிச்சலும் கோபமும் வந்தது.

"நீ என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய். எனக்கு அவளைப் பாக்க பரிதாபமாய் கிடக்கு. அவள் பசியில கிடக்கிறாள். நீ உடம்புப் பசியிலை அலையிறாய்"

"அட, நான் எவ்வளவு காசு குடுத்தனான் தெரியுமே.. அவளைக் கடத்திக் கொண்டே வந்திருக்கிறம்"

"உனக்குத் தேவை எண்டால் போ. என்னைக் கூப்பிடாதை"

அவன் எதுவும் பேசவில்லை.

"ஏன் விறு டாக்ஸிக்காரனை மறிச்சு வைச்சுக காசு குடுக்கிறாய். பேசாமல் அவனை அனுப்பு"

"அட, இப்ப ஸ்டேஷனுக்கல்லே போக வேணும்"

"அது உதுக்காலை நடந்து போகலாம். அவன் வந்தாப் பிறகு ஸ்டேஷனில விட்டு ஒரு டாக்ஸியைப் பிடிக்கிறது"

புரியாணியோடு வந்த டாக்ஸிக்காரன் என்னோடு நிற்க ராஜன் மேலே போனான்.

"தம்பி, நீர் போகேல்லையோ"

"இல்லை" ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னேன்.

"வீட்டுக்காரருக்கு பயம் போல"

"ம்"

இவன் என்னைச் சீண்டி விடப் பார்க்கிறானோ? அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டு முன்னால் இருந்த பூக்கன்றுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ராஜன் வந்ததும் டாக்ஸிக்காரனின் பணத்தைக் கொடுத்து வெட்டி விட்டோம்.

"மச்சான், நான் அதில விக்ரர்ஸ்டியில நிக்கிறன். முடிஞ்சவுடன வந்து என்னைக் கூப்பிடு" என்று அவன் பதிலைக் கேளாமலே வெளியில் வந்தேன்.

எனக்கு மனதுக்குள் பெரும் சஞ்சலமாயிருந்தது. கண்ணாடிக்குள்ளால் தெரிந்த இறக்குமதிப் பொருட்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பணம் கிடைத்தவனால் இதையும வாங்க முடிகிறது. உடலையும் வாங்க முடிகிறது. முடியாதவன் இப்படி கண்ணாடிக்குள்ளால் பார்த்துப் பெருமூச்சு விட வேண்டியது. முடியாதவள் தன்னை விற்று பணத்தை சம்பாதிக்க வேண்டியிருக்கிறது.

எனக்கு யாழ்ப்பாணத்தில் இருக்கவே பிடிக்கவில்லை. ஆணை வைத்து சீதனம் என்ற விபசாரம். பெண்ணை வைத்து பணத்திற்காக விபசாரம். ராஜன் யாழ்ப்பாணத்தானை திட்டுவது நியாயம் தான். ஆனால் அவன் திட்டிக் கொண்டே இதைச் செய்வதைத் தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பின்னால் வந்து தட்டினான்.

"வா,மச்சான், றெயின் வரப் போகுது"

"என்னடா, அதுக்கிடையில போனதும் வந்ததுமா?"

"இது என்ன, முதலிரவே? அவள் பால் கொண்டு வந்து காலில் விழுகிறதுக்கு? எண்டாலும் மச்சான், தமிழ் பெட்டையள் தமிழ் பெட்டையள் தான். அந்த மாதிரி" அதில் அனுபவித்த லயிப்பு தெரிந்தது.

நடந்து ஸ்டேஷனுக்குப் போய்.. பிளாட்போர்ம் டிக்கட் எடுத்துக் கொண்டு வாங்கில் காத்திருக்க.. வருபவர்களை வரவேற்க பெரும் கூட்டம் நின்றது. இரைச்சல்.. இப்படியே இந்த இடத்தில் குண்டு ஒன்று வெடித்து எல்லாரும் இறந்து போனால் என்ன? எல்லாம் வேசங்களோடு வாழ்கின்ற மனிதர்கள். வேலிகளால் தங்கள் அவலங்களை மறைத்தது போல, தங்கள் அலங்காரங்களால் அசிங்கங்களை மறைக்கும் மனிதர்கள்..

ஜேர்மனியிலிருந்து வரும் ஒருவனுக்காக மாமா வேலை செய்து விட்டு இரண்டு பேரும் உட்கார்ந்திருக்கிறோம். எனக்கு என்னை நினைக்க வெட்கமாக இருந்தது. வெளிநாட்டுக்கு போக உதவி செய்வான் என்ற ஒரே நம்பிக்கைக்காகவோ, அல்லது இங்கே மிஞ்சியிருக்கிற, என்னை மறக்காத நண்பன் என பதறாகவோ இவனோடு நான் இழுபட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருக்கிறது.

புகையிரதம் வந்தது. அசல் ஹிப்பி தோற்றத்தில் முதுகில் ஒரு அழுக்கான பை சகிதம் அவன் வந்து இறங்கினான். கிழிந்த டெனிம் ஜீன்ஸ். உள்ளூர் சாமிமார் வைத்திருப்பது மாதிரி ஒரு பை. ராஜன் அவனைக்கண்டதும் ஓடிப் போனான். இரண்டு பேரும் ஜேர்மன் மொழியில் பேசிக் கொண்டனர். ராஜன் என்னை அறிமுகம் செய்ய.. அவன் ஆங்கிலத்தில் ஹலோ சொல்லிக் கொண்டான்.

ராஜன் டாக்ஸி பிடிப்பதற்காக வெளியே வந்தான்.

"மச்சான், நான் போகப் போறன்"

"நில்லடா"

"இல்லை, நாளைக்கு பொயிலை வெட்டுக்கு ஆக்கள் வருவாங்கள். வேலை கிடக்கு"

"நில், டாக்ஸியிலேயே போகலாம்"

"வேண்டாம், நான் உதுக்குள்ளாலை போனன் எண்டால் ஆரியகுளத்தடியில பஸ் எடுக்கலாம்"

அவனுக்கும் கைகுலுக்கிக் கொண்டு வெளியே வந்தேன். மனது கனத்துப் போய் தொண்டைக்குள் எதுவுவோ செய்தது. பொருளாதார நெருக்கடிக்காக அவள் வேலைக்கு கிராமப்புறத்தில் இருந்து வந்திருக்கக் கூடும். யாராவது தன்னைத் திருமணம் செய்வார்கள் என்று நம்பி ஒப்படைக்கப் போய் ஏமாற்றப்பட்டிருப்பாள். இப்போது விபசாரியாகி நிற்கிறாள். இவளை சுவைத்தவர்கள் எல்லாம் கற்புக்கரசிகளைத் தேடிக் கொண்டு இவளை திட்டிக் கொண்டிருக்கக் கூடும்.

பாவம் அந்தப்பெண். இவனோடு ஒரு கிழமை நிற்கப் போகிறாள். அவனது வக்கிரங்களுக்கு வடிகாலாக. விதவிதமான நாட்டு உணவுகளை உண்பது போல. இந்தப் பெண்ணையும் அவன் ருசி பார்க்கப்போகிறான். ஐரோப்பிய நாடுகளின் புத்திரிகளிடம் தங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொண்ட யாழ்ப்பாண மண்ணின் மைந்தர்கள் பட்ட கடன்களை அடைப்பதற்காக இங்கே இவன் வந்திருக்கிறான்.

யாழ்ப்பாணம் மீது கோபம் வந்தது. இந்தியா போன்று இங்கே பலாத்காரமாக கடத்தப்பட்டு இந்த தொழிலில் ஈடுபடுபவர்கள் இருக்க முடியாது. பொருளாதாரப் பிரச்சனை, சமூகப் பிரச்சனைகள் தான் இந்த அபலைப் பெண்ணை இந்த நிலைக்கு தள்ளியிருக்க முடியும். இப்படியே போய், கூடாத நோய்கள் வந்து.. இவளும் அந்த சோடா மூடி மாதிரி... எனக்கு கண்களில் நீர் நிறையும் போலிருந்தது.

ஓ! எனது யாழ்ப்பாணமே! உன் நிலங்களில் விதை விதைக்க புதியவன் ஒருவன் வந்திருக்கிறான். உன் சகதிகளை வேலிகளுக்குள் மறைத்து விட்டு, இரு கரம் கூப்பி அவனை வரவேற்றுக் கொள். ■

**சுபமங்களா ஈழக்குறுநாவல் போட்டிக்கு அனுப்பப்பட்டு பரிசு எதுவும் கிடைக்காமல் நிராகரிக்கப்பட்ட குறுநாவல் இது!**

# 1983
# போரும் மனிதனும் சூழலும் (7)

## வ.ந.கிரிதரன்

மல்லிகாவும் தாய் கருணாவதியும் காய்கறி வாங்குவதற்காகப் புறப்பட்டிருந்தார்கள். ஒரு விதமான அமைதி பரவிக்கிடந்தது. அதனைக் கிழித்துக் கொண்டு வீதியில் வாகனங்கள் ஓடிக் கொண்டிருந்தன. பாஸ்கரன் ஹலிலிருநது சோபாவில் சாய்ந்திருந்தவனாகச் சிந்தனையில் மூழ்கியிருந்தான். யமுனாவின் நிலை ஓரளவு தேறியிருந்தது. சிறிது நேரம் நடப்பாள். சிறிது நேரம் படுப்பாள். அவளால் இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து முற்றாக விடுபட முடியவில்லை. வாடிய கொடியாகிக் கிடந்தாள்.

ஊரிலிருக்கின்ற குடும்பத்தவர்கள் துடித்துக் கொண்டிருப்பார்களென்று பட்டது எப்படிச் சொல்லி அனுப்புவது? நிலைமை இன்னும் சீராகவில்லையே? யமுனாவின் குடும்பத்தவர்க்கு அரியரட்ணத்தின் குடும்பத்தவர்க்கெல்லாம் சொல்லி அனுப்பவேண்டும். கொட்டாஞ்சேனை 'ரும்' பக்கமும் போய்ப் பார்த்து வரவேண்டும். இதற்கிடையில் பொழுதைச் சிறிது பிரயோசனமாகக் கழிக்க வேண்டுமென்று பட்டது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அகதி முகாம்கள் திறக்கப்பட்டிருந்தன. அவற்றிலேதாவதில் சென்று உதவலாமென்று பட்டது. காலையிருந்து இருண்டு வந்து கொண்டிருந்த வானம் இலேசாகச் சிணுங்கத் தொடங்கியது. விரைவிலேயே சிணுங்கல் பெரியதொரு அழுகையாக மாறும் போல் பட்டது. மழை இயற்கை நிகழ்வுகளில் பாஸ்கரனிற்கு மிகவும் பிடித்தமானதொரு நிகழ்வு. இருண்டு வரும் வானைக் கோடு கிழிக்கும் மின்னலை ரசிப்பதும், தரையோடு தரையாகப் பறந்து வரும் குருவிகள் அடிக்கொருதரம் நனைந்த சிறகுகளைச் சிலிர்ப்பதை அவதானிப்பதும் அவனிற்குப் பிடித்தவை தற்போதிருந்த சூழலில் அவனது மனதை ஒருவித அமைதியில் ஆழ்ந்து உதவி செய்தது இயற்கையின் இந்த மாறுதல்.

"பாஸ்கி....."

யாரோ மெல்ல முனகி அழைக்கும் ஒலி. யமுனாதான் அழைத்திருக்க வேண்டும். சிந்தனையிலிருந்து நீங்கியவனாக யமுனாவின் அறையை நோக்கி நடந்தான். யமுனா கட்டிலில் எழுந்து அமர்ந்திருந்தாள். பால் வடியும் வதனம் அதன் சோபையையிழந்திருந்தது. ஒருவித அச்சமும் கலக்கமும் விரவிக் கிடந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை




- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்

★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்

★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**TEL:(416) 750 9969**
**FAX:(416) 750-9967**

**2155 LAWRENCE AVE EAST, SUITE 10**
**(AT BIRCHMOUNT), SCARBOROUGH**

- **WHEEL CHAIR ACCESS**
- **FREE PARKING**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**MONDAY-SATURDAY**
**9 AM-9 PM**
**SUNDAYS**
**12 NOON-5 PM**
**SUNDAY by APPOINTMENT ONLY**
**24 HRS EMERGENCY SERVICE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யமுனா.. என்னம்மா செய்யுது...." பாஸ்கரன் அருகில் அமர்ந்தான் இந்த ஒரு கிழமையாக யமுனா அவன் நெஞ்சில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டாள். அவளிற்கேற்பட்ட நிலைமை அவளது நிலை இவையெல்லாம் அவளை மட்டுமல்ல அவனையும் பெரிதும் தாக்கின. யமுனாவைத் தனது இன்னுமொரு குடும்ப உறுப்பினராக அவனது மனம் ஏற்றுக் கொண்டது அரியரட்ணம் தான் பாவம் நல்ல காலம் அந்தச் சிங்களக் குடும்பம் இருந்ததால் அவரது உடம்பை அநாதரவாக வீதியிலேயே விட்டுவிடாமல் அடக்கமாவது செய்ய முடிந்தது.

"பாஸ்கி.. எனக்கு வீட்டை போக வேண்டும் போலையிருக்கு..."

யமுனாவைப் பரிதாபமாகப் பார்த்தான் பாஸ்கரன்.

"யமுனா.... இன்னும் போக்குவரத்து சரியாகவில்லை. இந்த நிலையில் எப்படிப் போறது... நான் பின்னேரம் சரஸ்வதி ஹோல் முகாமிற்குப் போகலாமென்று நினைக்கிறேன். நிலைமையை விசாரிச்சுக் கொண்டு வாறன். கெதியிலை கப்பல் விடுவாங்கள் போலையிருக்குது...."

யமுனா சிறிது நேரம் அமைதியாகயிருந்தாள்.

"யமுனா... ஏதாவது குடிக்கக் கொண்டு வரட்டா......"

'ஓமென்று தலையை அசைத்தாள் யமுனா. 'ஹார்லிக்ஸ்' கரைத்துக் கொண்டு வந்தான். தனக்கும் ஒரு கப்கோப்பி போட்டுக் கொண்டான். ஹார்லிக்ஸ் குடித்ததும் யமுனாவிற்கு இதமாகவிருந்தது. அந்த இதமான உணர்வுடன் அப்படியே மீண்டும் தூங்கிப் போனாள். பாஸ்கரன் மீண்டும் ஹலிற்கு வந்தான்.

சிணுங்கிக் கொண்டிருந்த மழை பெரிதாக அழத் தொடங்கிவிட்டிருந்தது. மல்லிகாவும், தாயும் இன்னும் வரவில்லை... பலத்த மழைக்குள் அகப்பட்டு விட்டார்கள். வானம் அதிகாலையிலிருந்தே இருண்டிருந்தது அவர்கள் குடை கொண்டு போயிருக்க வேண்டுமென்று பட்டது. மல்லிகாவின் நினைவு அவைப் பலமாகத் தாக்கத் தொடங்கியது. அந்தச் சிவந்த சிறிய உருவமும், அது முழுக்கப் பரவிக்கிடந்த கருணையும் பலமாகவே நெஞ்சைத் தாக்கின. விரைவிலேயே மல்லிகா விடயத்தில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். 'எனக்கு இருக்கிற பொறுப்புகளோடு.. இவள் என்னைக் கட்டி என்ன இன்பத்தைப் பெறப் போகின்றாள்? இவளிற்கிருக்கிற வடிவிற்கும் குணத்திற்கும் எத்தனைபேர் போட்டி போடுகின்றார்கள். . விசரி.. அப்படியென்ன என்னிடம் கண்டு விட்டாள். இனம்,மதம் எல்லாவற்றையும் மீறி அப்படியென்ன பெரிய ஈடுபாடு...' பலவிதமான சிந்தனைகள் வளையமிடத் தொடங்கின.. 'இருக்கிறதே சின்னஞ்சிறிய ஒருவாழ்க்கை. அந்த ஒரு சிறு வாழ்க்கையிலும் கூட ஒன்றைச் செய்தவற்கு முன்னால் எத்தனைவிதமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. மல்லிகாவைப் போன்ற ஒருத்தியை அடைவதற்கு உண்மையிலேயே நான் அதிர்ஸ்டம் செய்திருக்க வேண்டும் இனம் மதம் என்றெல்லாம் நினைப்பதே அவளிற்கும் அவளது தூய அன்பிற்கும் களங்கம் விளைவிப்பதாக அமைந்து விடும்.'

வெளியில் மழை இன்னும் ஓய்ந்த பாடில்லை. கூடவே இடியும் மின்னலும் தங்களது வித்தைகளை அடிக்கொருதரம் காட்டிக் கொண்டிருந்தன. தொடர்ந்து கொண்டிருந்த மழை அவனை கனவுலகிலிருந்து ஒருவித கனவுலகிற்கு இழுத்துக் கொண்டு போனது. இலேசாகக் கண்களை மூடியபடி அதனை மனம் ரசிக்கத்தொடங்கியது. ஓயாது மழை பெய்து கொண்டிருந்தது நாட்களாக, மாதங்களாக, வருஷங்களாகப் பெய்து கொண்டிருப்பது போல் பட்டது. வயற்புரங்களிலிருந்து தவளைகளின் கச்சேரிகள் கேட்கத் தொடங்கிவிட்டன. கட்டடங்களையோ, வீதிகளையோ எவற்றையுமே காண முடியவில்லை, எங்கு திரும்பினாலும் மரங்கள், மரங்கள், மரங்களே தான் பசுமை பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. இயற்கையின் அரவணைப்பில் நிலமடந்தை தூங்கிக் கொண்டிருந்தாள். ஆங்காங்கே மனிதர்கள் நிர்வாணமாகக் காணப்பட்டார்கள். சோடி சோடியாகக் காணப்பட்டார்கள், கிடைக்கின்ற காய்கனிகளை உண்டார்கள் வரிந்து கிடந்த வானையும், நிலையையும், சுடர்களையும் பார்த்து அடிக்கடி வியந்து கொண்டார்கள். கலவி செய்தலும் உலவித்திரிதலுமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களிற்கிடையில் போர்கள் இல்லை, பூசல்களில்லை, அசுத்தமடையாத சூழலிற்குள் ஆரோக்கியமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களிலொருவனாக அவன். வளர்ந்திருந்தது தலை முடி அவனுடன் கூடவே பின் தொடைகள் வரை நீண்டிருந்த கூந்தலுடன் வளைய வருவது யார்.... மல்லிகாவைப்போலல்லவாயிருக்கின்றது.

பாஸ்கரன் மீண்டும் நனவுலகிற்கு வந்தான். தனது பகற்கனவை எண்ணிப் பார்த்தான். சிரிப்பாகவிருந்தது. தானேனவ்விதம் கனவு கண்டான் என ஆராய்ந்து பார்க்கலாமென்று பட்டது. மல்லிகாவை அவன் மனதும் ஆழமாக விரும்புகின்றது. சககாலச் சூழல்தான் அவனைத் தடுத்துவைக்கின்றன. அதனால்தான் கனவில் முற்றிலும் சககாலச் சூழலிற்கெதிரானதொரு சூழலில் அவனால் மல்லிகாவுடன் சேர்ந்து திரிய முடிகின்றது போல்பட்டது. பொதுவாகவே போர்களை பாஸ்கரனின் மனது மிகவும் வெறுத்தது. போர்களினால் முட்டி மோதிக் கனன்று கொண்டிருக்கும் உலகை அவனது மனம் அதிகமாக வெறுத்தது. போர்களை வெறுக்கின்ற அவனால், அவன் வாழ்ந்த சூழல் காரணமாக வெடிக்கின்ற போர்களின் நியாயத்தையும் மறுக்க முடியாமலிருந்தது எவ்வளவு விரைவில் ஒழிய முடியுமோ அவ்வளவு விரைவில் இந்தப் போர்களெல்லாம் ஒழிந்து விடவேண்டும். சமாதானமும் அன்பும் உலகமெல்லாம் பரவி விடவேண்டும். மனிதர்கள் ஒருவரிற்கொருவர் மனிதரென்ற ரீதியில் வாழும் உலகொன்றை அவன் மனம் விரும்புவதும் அக்கனவுலக உலகிற்குக் காரணமாகயிருக்கக் கூடும். போர்களையடுத்து அவன் மிகவும் வெறுப்பது இந்தச் சூழல் அசுத்தம். நாகரீகம் என்று சொல்லிக் கொண்டு இயற்கையின் அழகைச் சிதைப்பதில் மனிதர் காட்டும் தீவிரம் தான் சூழல் அசுத்தமடைவதற்கு முக்கிய காரணமென்று பட்டது. வீட்டைப் பாதுகாப்பதைப்போல், நாம் வாழும் இந்தக் கிராமம் மனிதர்களாகிய எமது வீடு. இதனைப் பாதுகாக்கவேண்டும் என்றும் பட்டது. செயற்கையின் அசுத்தத்திற்குள் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் அவனிற்குக் கனவில் வந்த சூழல், இயற்கையின் அரவணைப்பில் தூங்கிக் கிடந்த சூழல், ஆனந்தத்தைத் தந்திருக்க வேண்டும். பாஸ்கரனிற்கு இவ்விதம் கனவை ஆராய்வதே ஒருவித இன்பகரமான உணர்வைத் தூண்டியது. 'மனிதர்கள் ஒவ்வொருவரும் இவ்விதமான கனவுகளை அடிக்கடி கண்டு வரவேண்டும் அப்படிக் கண்டுவந்தால் காலப்போக்கில் இக்கனவுகளெல்லாம் ஒன்று சேர்ந்து உறுதியாகி, போர்ச்சூழலால், அசுத்தச்

32ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறு(சு)வை




# சஞ்சயனும் வின்டோஸும்

அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

கொஞ்ச நாளுக்கு முன்னால் கம்பியூட்டர் உலகில் பெரும் பரபாப்பு.. வின்டோஸ் 95 வெளிவருகிறதாம்.. முதலில் சிக்காக்கோ, வின்டோஸ் 4 உட்பட பல்வேறு பெயர்களில் வருவதாக இருந்து.. பல்வேறு விளம்பரங்களுடன் விழாக்கோலம் பூண்டு வந்திறங்கியது. உலகமெங்கும் ஒரே நாளில் வெளியீடு... ஒரே நேரத்தில் நான்கு நாடுகளில் வெளியாகும் பத்திரிகை மாதிரி.. பெரும் வெளியீட்டு விழா.

ஏதோ நம்ம ஆளுங்க மாதிரி.. வெளியீட்டு விழா என்றதும் நாலு கவிதை எழுதி பத்திரிகைகளில் வந்ததும் இன்னும் நாலு கவிதை எழுதி புத்தகம் வெளியிட.. பட்டு வேட்டியுடன் ஒரு கூட்டம் மேடையில் நின்று.. எழுத்தாளரை புழுகோ புழுகு என்று புழுகித் தள்ள.. அப்புறமாய் தொழிலதிபர்கள் பதினைந்து பேர் முதல் பிரதி வாங்க.. அதில் எது முதல் பிரதி என்று யாருக்கையா தெரியும்?.. அப்புறமாய் வந்தவர்கள் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும் பணச்சடங்கில் காசு கொடுத்த மாதிரியும் வரிசையில் நின்று புத்தகம் வாங்கிச் செல்ல..

ஒரு எழுத்தாள நண்பர் சொன்னார்.. இன்னொரு எழுத்தாளரின் வெளியீட்டு விழாவிற்குப் போய் புத்தகம் வாங்கி ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்தாராம்.. அப்புறமாய் தனது நூல் வெளியீட்டு விழாவிற்கு அவர் வந்து ஏதோ பணச்சடங்குக் காசு மாதிரி அதே அளவு பணத்தைக் கொடுத்து புத்தகம் வாங்கிச் சென்றாராம். இதிலும் பார்க்க பேசாமல் புத்தகங்களை மாத்தியிருக்கலாம்.

மகத்தான வெளியீட்டு விழா..

ஏதோ எம்.ஜி.ஆர் படம் மாதிரி நள்ளிரவு வெளியீடு. . எம்.ஜி.ஆர் ரசிகர்கள் மாதிரி நள்ளிரவில் கியூவில் நின்று ஏதோ அதை வாங்கி முதலில் கம்பியூட்டரில் போட்டால் தான் நிம்மதி என்ற மாதிரி பெருங்கூட்டம்.. இந்தியாவிலேயே ஹோட்டல் ஒன்றில் வெளியீட்டு விழாவிற்கு இரண்டாயிரம் பேர் வர.. கடைசியில் பொலிசாரைக் கூப்பிட்டு அடக்க வேண்டியதாயிற்று. அதற்கு முன்பாக.. வின்டோஸ் புரோகிராமில் இந்தியப் படம் ஒன்றில் எல்லை மாறி குறிக்கப்பட்டதால்.. வேறெங்கே.. காஷ்மீரில் தான்.. வெளியிட தடை விதித்து மாற்றங்களுடன் வெளியீடாயிற்று..

முதல் முதலாக நியூஸிலாந்தில் தான் நாள் உதயமாகிறது என்பதால் அங்கே ஒருவர் முதல் பிரதியை வாங்கி கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அப்புறம் என்ன? இங்கே கடைகளில் நள்ளிரவில் ரசிகர் குழாம் முற்றுகையிட்டு வாங்கிச் சென்றது..

ரொறன்ரோவில் மாபெரும் விழாக்கோலம்.. இதற்காகவே சி.என்.டவரில் மலையேறும் ஒருவர் வின்டோஸ் புரோகிராம் கொண்ட கம்பியூட்டருடன் ஏறினார்..

★ ★ ★

இதுவரையும் எந்தக் கம்பியூட்டர் சம்பந்தப்பட்ட பொருளுக்குமே இப்படியான விளம்பரம் இருந்ததில்லை. சாதாரண நாளாந்த பாவனைப் பொருட்களை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பரங்கள் போலவே, இதற்கும் விளம்பரம்.. இதன் மூலம் இது நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமானது என்ற பிரமையை ஏற்படுத்தும் நோக்கம் தான். விளம்பரத்துக்கு மட்டும் நூறு கோடி டொலர்கள் செலவிடப்படும் என்றால் பாருங்களேன்.

பியர் குடிவகை விளம்பரம் போல ரொக் பாடல் ஒன்றை சேர்ப்பதற்காக ரோலிங் ஸ்டோன்ஸ் குழுவின் Start Me Up என்ற பாடலை விளம்பரத்தில் சேர்க்க உத்தேசித்து மைக்ரோஸொப்ட் நிறுவனம் ரோலிங் ஸ்டோன்ஸ் பாடகர் மிக் ஜாக்கரை அணுகியதாம். மிக் ஜாக்கரும் அதற்கென்ன.. சும்மாவா.. என்று அதற்கு 12 மில்லியன் தந்தால் தான் அனுமதி என்றாராம். உடனே மைக்ரோஸொப்ட் நிறுவனம் கேட்டதாம்.. காசாக வேண்டுமா? செக் தந்தால் போதுமா? என்று.. அடேங்கப்பா.

அந்தப் பாடலில் வரும் You make a grown man cry என்ற கோரஸ் வரிகள் மக்கின்ரோஷ் பாவனையாளர்களுக்கு கடுப்பு ஏற்றத் தான் செய்யும்.

★ ★ ★

அதுசரி.. அந்த வின்டோஸ் என்றால் என்ன?

இதென்ன கேள்வி.. வின்டோஸ் என்றால் ஜன்னல்..

கம்பியூட்டர் விவகாரங்களில் சம்பந்தமில்லாத அறு(சு)வைஞர்களுக்காய் சில விளக்கங்கள்.. எப்படி ஒலிப்பதிவு நாடா எதுவுமே இல்லாத டேப் ரெக்கோடர்களால் எந்தப் பயனும் இல்லையோ.. அதே போல புரோகிராம் எதுவும் இல்லாத கம்பியூட்டரால் எந்தப் பயனும் இல்லை. இந்தப் புரோகிராம்கள் ஒரு/பல விடயங்களை செய்வதற்காக எழுதப்படுவன. ஆனால் இந்தப் புரோகிராம்கள் மூலம் எங்களுக்கு வேண்டிய விடயங்களைச் செய்வதற்காக.. கம்பியூட்டர் இயந்திரத்திற்கும் இந்தப் புரோகிராம்களுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி

**'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவல்களைச் செய்வதற்கு ஒரு புரோகிராம் தேவை. இதுதான் கம்பியூட்டரின் இதயத் துடிப்பு. இது இருந்தால் தான் கம்பியூட்டருக்கு உயிர் இருக்கும். அப்புறம் தான் காதல், கலியாணம், அறு(சு)வை.. அதாவது உயிர்த்துடிப்பு இருந்தால் தான் மூளைக்கும் மற்ற உறுப்புகளுக்கும் தொடர்பு இருக்கும். இது இல்லாவிட்டால் கம்பியூட்டர் வெறும் நடைப்பிணம் தான்.

இது ஆங்கிலத்தில் operating system எனப்படுகிறது.

நாளாந்த பாவனையில் முக்கியமான இரண்டு வகை உண்டு. ஒன்று ஐ.பி.எம் வகையினதற்கானது, மற்றது அப்பிள் மக்கின்ரோஷ் வகையினதற்கானது. இதில் ஐ.பி.எம் ரகத்தினவை முதலில் MS-DOS: MicroSoft Disk Operationg System ஐ கொண்டிருந்தன. இது வழமையில் எழுத்து வடிவிலானது. அதாவது character based. படங்கள் இருக்காது. விமான நிலையங்களில் விமானம் புறப்படும் நேரங்களைக் காட்டுவது போன்றன.

அதற்கு அப்புறமாய், இதன் கஷ்ட, நஷ்டங்களை மனதில் கொண்டு கற்றுக் கொள்வதற்கு இலகுவாக மக்கின்ரோஷ் கம்பியூட்டர்கள் புதிய முறையைக் கையாளத் தொடங்கின. இது படங்கள், உருவங்கள் மூலம் பாவனையாளருக்கு இலகுவானதாக இருந்தன. இதை GUI: Graphical User Interface என்பார்கள். இது இலகுவானதாய் இருந்தவுடன் இதை ஐ.பி.எம் கம்பியூட்டர்களில் கொப்பியடிப்பதற்காக.. அதாவது தினமுரசை இங்குள்ள பத்திரிகைகள் மறுபிரசுரம் செய்த மாதிரி.. உருவாக்கப்பட்டது தான் இந்த வின்டோஸ்.

ஆனால் இந்த வின்டோஸ் செயற்படுவதற்கு அந்த MS-DOS முன்பு அவசியம். கத்தரி வெருளிக்கு சேலை கட்டி அழகு பார்த்தது மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன். (அடப்பாவி.. உனக்கு ஐ.பி.எம் கம்பியூட்டர்களில் இத்தனை கோபமா?)

★ ★ ★

அப்புறமாய் ஐ.பி.எம் நிறுவனம் தானாகவே தனது கம்பியூட்டர்களுக்கு ஒரு இதயத்துடிப்பை தயார் பண்ணியது. அது தான் OS/2. Operating System 2. இது ஒரு படி மேலே போய், MS-DOS ஐயும் இந்த GUI ஐயும் இணைத்து ஒரே புரோகிராமாக்கியது. இந்தப் பிரச்சனை காரணமாக இப்போது வின்டோஸ் கூட MS-DOS புரோகிராமை தன்னுடன் இணைத்து ஒரே புரோகிராமாக்கியுள்ளது.

இப்படி பரபரப்பையூட்டிய வின்டோஸ் புரோகிராமில் அப்படி புதிதாக என்னதான் இருக்கிறது?

ஒன்றுமேயில்லை. நவீன தொழில் நுட்ப முன்னேற்றம் என்று பெரும் சாதனை போல உருவாக்கிக் காட்டிய இந்த வின்டோஸ் ஒன்றும் புதிதாக எதையும் சாதித்துவிட வில்லை. ஏற்கனவே பத்தாண்டுகளுக்கு முன்பாக மக்கின்ரோஷ் கம்பியூட்டரில் பாவித்து வரும் விடயங்கள் தான் இப்போது இதில் உருவாக்கியிருக்கிறார்கள். அதிலும் ஐ.பி.எம்மின் OS/2 கூட இதில் உள்ள புதிய பல விடயங்களை ஏற்கனவே கொண்டிருக்கிறது.

அதாவது மக்கின்ரோஷ் கம்பியூட்டரை கொப்பியடிப்பதற்காக எடுத்த முயற்சி அடைந்த ஓரளவு வெற்றி தான் இந்த வின்டோஸ் 95.

கம்பியூட்டர் பாவனையை நாளாந்த வாழ்வில் கொண்டு வருவதற்காக, அதை இலகுவாக்குவதற்காக Plug and Play என்ற பாணியில் மக்கின்ரோஷ் அடைந்த வெற்றியை பத்தாண்டுகள் கழித்து மைக்ரோஸொப்ட் நிறுவனம் செய்திருக்கிறது.

இதைக் கிண்டல் அடிப்பதற்காக அப்பிள் நிறுவனம் பெரும் பத்திரிகைகளில் con/gra:tualtions என்ற மாதிரி ஒரு விளம்பரம் கொடுத்திருந்தது. அதாவது பழைய டொஸ் முறைக்கு உடுத்திய அலங்கார ஆடை தான் இந்த விளம்பரம் என்று.

★ ★ ★

ஒரு மாதிரி வின்டோஸ் வந்து சேர்ந்தது. ஆளுக்காள் பிறவிப் பெரும்பயனை அடைந்து இப்போது அந்த ஆட்டம் அடங்கி விட்டது. கம்பியூட்டர் உலகில் பெரும் சாதனை என்றதெல்லாம் பொய்த்து ஒரு படி முன்னேற்றம் அவ்வளவு தான் என்று வந்து விட்டது. ஆனால் இவ்வாறாக ஏமாற்றியயே மைக்ரோஸொப்ட் கோடிக்கணக்கில் சம்பாதித்து விட்டது. தங்கள் சந்தேகங்களை கேட்பதற்காக மக்கள் மைக்ரோஸொப்ட் நிறுவனத்தை தொலைபேசி மூலம் துளைத்து எடுத்து விட்டார்கள். இதையொட்டி மைக்ரோஸொப்டை கிண்டல் பண்ணி பல கதைகள்..

அதில் ஒன்று..

விமானம் ஒன்று பயணிகளுடன் வாஷிங்டன் சியாட்டில் (அங்குதான் மைக்ரோஸொப்ட் தலைமையகம்) விமான நிலையத்திற்கு பறந்து கொண்டிருந்தது. விமான நிலையத்தில் புகை முட்டம் காரணமாக பாதையும் தெரியவில்லை. கட்டுப்பாட்டு நிலையத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. விமானிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. விமான நிலையத்தை சுற்றி வந்து கொண்டிருக்க.. எரிபொருள் தீர்ந்து கொண்டிருக்கிறது. அப்போது புகைமுட்டத்துக்குள்ளால் ஒரு வெளிச்சம் தெரிந்தது. ஒருவர் தனியாக இருந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். விமானி அருகாய் போய் ஜன்னலைத் திறந்து 'நான் எங்கே நிற்கிறேன்?' (Where am I?) என்று கேட்டார். உள்ளே இருந்தவர் போனுக்குள்ளால் தலையை எடுத்து 'நீ உன் விமானத்தில் நிற்கிறாய்' என்றார். அப்படியா, சரி என்ற விமானி நேராக விமான ஓடுபாதையில் பாதுகாப்பாக இறக்கினார். உயிரைக் கையில் பிடித்திருந்த பயணிகளுக்கு ஒரே மகிழ்ச்சி.. அடடா.. நீ இருக்கும் இடத்தை கேட்க, அவன் முட்டாள் தனமான பதிலைச் சொன்னானே.. எப்படி உனக்கு வழி தெரிந்தது என்று எல்லோரும் கேட்க.. விமானி நிதானமாக பதில் சொன்னார்.. 'எனக்குத் தெரியும் அவன் மடத்தனமான பதில் சொல்கிறான் என்று. அதிலிருந்து நான் அவன் Microsoft Software support பகுதியில் வேலை செய்கிறான் என்று அறிந்து கொண்டேன். எனக்கு அதிலிருந்து விமான நிலையம் எந்த திசையில், எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று பத்திரமாக இறக்கினேன்' என்றானாம்.

புரியாதவர்கள் வின்டோஸ் புரோகிராம் ஒன்றை வாங்கி பயிலவும்.

★ ★ ★

அதெல்லாம் இருக்கட்டும்.. எனக்கு இந்த சஞ்சயன் விவகாரம் பெரும் தொல்லையாகி விட்டது. பணம் சேர்த்த உலகத்தமிழர் நாடு கடத்தப்படுவதற்காக பிடித்து வைக்கப்பட்டிருக்கிறார். செய்தி எழுதி முடிந்ததும் சஞ்சயனார் பத்திரிகையாசிரியர் தடித்த எழுத்தில் ஒரு குறிப்பு.. அன்னார் நல்லவர், வல்லவர், வாள் வீசத் தெரிந்தவர், தமிழ் மக்களால் நேசிக்கப்படுபவர் என்ற மாதிரி.. கியூரியஸ்க்கு ஒரு சந்தேகம்... மற்றும்படி யாராவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் பொலிஸில் சிக்குப்பட்டு ஏடாகூடமாய் எழுதப் போய், சம்பந்தப்பட்டவர்கள் போய் 'தட்டிக் கேட்டதும் 'விசயம் நீதிவிசாரணையில் இருப்பதால் நாம் கருத்துச் சொல்ல முடியாது' என்று கூறி விட்டு.... இந்த விவகாரத்தில் மட்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் மாதிரியான ஒரு சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டவர் பற்றி இப்படி கருத்துக் கூறுதல் எந்தப் பத்திரிகை தர்மமோ?

★ ★ ★

எதற்கும் சஞ்சயனை ஒரு தடவை வாஷிங்டனிற்கு அனுப்பி வைக்க வேண்டும். சமீபத்தில் கறுப்பர்கள் இனக்குழு ஒன்றின் தலைவரான பாராக் கான் பத்து லட்சம் கறுப்பர்களைத் திரட்டி வாஷிங்டனில் எழுச்சி ஊர்வலம் நடத்த முயன்றார். ஆனால் வந்தது நான்கு லட்சம் பேர் தான் என்று பத்திரிகை, பொலிசார் தகவல்கள். ஆனால் பாராக் கான் இது இனவெறிச் சதி, இவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்.

ஆனால் விஞ்ஞான முறைப்படி பல்கலைக்கழகம் ஒன்று வானில் இருந்து எடுத்த படங்களை ஆராய்ந்து அதில் வந்த தொகை அதிகம் என்று கூறியிருக்கிறது.

பேசாமல் நம்ம சஞ்சயனை அனுப்பினால்.. கூட்டத்திற்கு வந்தவர் எத்தனை பேர், ஊர்வலத்திற்கு வந்தவர் எத்தனை பேர் என்று கணக்கு விட்டிருக்க மாட்டாரா?

## கியுபெக்..

கூறியதை ஹல் மக்கள் பார்க்க மாட்டார்கள் இவ்வாறு இவர் சொல்வதன் காரணம் இந்நகரம் மிகமிக பெரும்பான்மையாக பிரிவினையை எதிர்ப்பதே. உண்மையில் ஒட்டாவா வேறு ஹல் வேறு என்று பிரித்து பார்க்க முடியாத அளவில் இரண்டும் இணைந்து இருப்பதே உண்மை.

பரிஸோ விற்கும் ஏனைய சகபாடிகளுக்கும் வேண்டிய தெல்லாம் வெற்றிமட்டுமே 50%+1ஐ தமக்கு கிடைத்த வெற்றியாக கருதுவார்களாம், ஆனால் 50%+1 வெற்றி இல்லை என்று கிடைத்தால் அது தமக்கு தோல்வியாக அமையாதாம், அவர்கள் தொடர்ந்தும் செயல்படுவார்களாம் வெற்றி கிடைக்கும்வரை.

பரிஸோ இப்போது கியுபெக் வர்த்தகர்களிடம் கோபம் கொள்கிறார் அவர்களும் பிரிவினையை எதிர்ப்பதே காரணம். அவர்களை பரிஸோ ஏகாதிபத்தியத்திற்கு அடிமையானவர்கள் என்கிறார். சிலர் தமது வர்த்தக நிலையங்களை ஏனைய கனடிய இடங்கட்கும் மாற்றிவிடுவதாகவும் கூறியுள்ளனர்.

தனது பிரிவினை வாதத்திற்கு எந்தவொரு வலுவான வாதத்தையும் தரமுடியாமல் தவிக்கிறார் பரிஸோ பிரெஞ்சு அழிகிறது என்று கூறினார் ஆனால் கடந்த 20 வருடங்களில் கியுபெக்இல் பிரெஞ்சு பேசுவோர் விதம் 80.7%இல் இருந்து 82%மாக அதிகரித்துள்ளது. அதேவேளை ஆங்கிலம் பேசுவோர் விதம் 13.1%இல் இருந்து 9.2% ஆக குறைந்துள்ளது என்கிறது புள்ளிவிபரம் மொத்தத்தில் ஒரு அவசியமற்ற போராட்டத்தில் நுழைந்ததால் அநாவசியமாக அவஸ்தைப்படுகிறார் பரிஸோ.

(பிந்திய கருத்துக் கணிப்புகள் கியுபெக்கின் பிரிவினைக்கு சார்பாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன)

## 1983,,,

சூழலால மாசுபட்டிருக்கும் உலகை மாற்றிவைத்துவிடும் என்றும் பட்டது.

வாசலில் கதவு திறக்கும் சத்தம் மல்லிகாவும் தாயும் தான். நன்கு நனைந்து போய்விட்டிருந்தார்கள். குடையால் மழையின் தாண்டவத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. பார்க்கப் பாவமாகவிருந்தது.

"மழையா இது சரியான பிசாசுமழை இவ்விதமாகக் திட்டிய மல்லிகாவின் கைகளிலிருந்து காய்கறிப் பைகளை வாங்கி வைத்தான். வருணபகவானின் கோரத் தாண்டவம் குடையையும் விட்டு வைத்திருக்கவில்லை. கம்பி முறிந்திருந்த குடையை மடக்கியபடி தாய் கருணாவதி

"நல்லகாலம் இவ்வளவாவது மிஞ்சியது"

என்று கூறிக் கொண்டாள் வெளியில் மழை இன்னும் பெய்து கொண்டேயிருந்தது தற்போதைக்கு விடாது போல் பட்டது.

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216 @Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**தாயகம்**

**சந்தா விபரம்**

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

**உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்**

☞ தமிழக, இலங்கை, கனடிய வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன் கிடைக்கும்

☞ முத்திரை, சிகரெட், போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள் TTC Tickets, Lottery Tickets

★ மலிவு விலையில் லேசர் இசைத்தட்டுக்கள்


★ தமிழ், ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

# ANTONY BROTHERS

**1472 Queen St West (Queen/Lansdowne)**

Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

*சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள்*

*சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்*

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காபரோ நகரில் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ்

# ரேடிங் கோ லிமிட்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்), மற்றும் பாண் உடனுக்குடன் கிடைக்கும்

அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் மலிவு விலையில்

3852 FINCH AVE EAST
(KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

# P.S.T.T

சி.டி. இசைத்தட்டுக்கள்
வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23 (Finch/Middlefield) TEL:609-0141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org